288

ஸ்ரீ

# பிரகலாதாழ்வான் சரிதை.

வேலூர் காலேஜ்

தமிழ்ப் பிரதம பண்டிதர்

புு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்

இயற்றியது.

[இரண்டாம் பதிப்பு.]

வேலூர்:

சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

[All Rights Reserved.]

1915

Price : Annnas Six.

O—1 FKA:ƒ
N15
148228.
Acc 709
00937

# ஆத்திசூடி நீதிகதைகள்.

---

## புதிய பதிப்பு.

இந்நூல், சிறந்த எளிய வசன நடையால் ஆகியது. இதில், ஔவையாரால் அருளிச் செய்யப்பட்ட ஆத்திசூடியில் உள்ள "அறஞ்செய விரும்பு" ஆதியாய் "அஃகஞ் சுருக்கேல்" என்பது இறுதியாக உயிர்வர்க்கமும் ஆய்தமும் முதலாக அமைந்த அமுத வாக்கியம் பதின்மூன்றையும் அதிகாரமாகக்கொண்டு, அவற்றின் கீழ் விளக்கமான பொருளும், அவற்றைக் குறித்த வியாசமும், பின்பு அவ்வந்நீதி வாக்கியங்களுக்கு ஏற்ற உதாரணமாக இதிஹாஸ புராணங்களிலிருந்தும் பைபிளிலிருந்தும் விரிவாக எடுத்தெழுதிய இனிய கதைகளும் காட்டப்பட்டுள்ளன. இந்நூல், வித்வான்கள் பலராலும் மெச்சப்பட்டது.

## தமிழ்வித்துவான்கள் சிலருடைய அபிப்பிராயங்கள்.

"ஆத்திசூடி நீதிகதை, எனக்கு மிக்க மகிழ்ச்சியை உண்டாக்கியது. இதன் விஷயமும் நடையும் எவர்க்கும் இன்பஞ் செய்யத் தவறுதென்று எண்ணுகின்றேன். இதன் உரைநடையில் பயின்றுள்ள திரிசொற்பிரயோகமும், சொற்றொடர்ச்செய்கையும், வாக்கிய அமைப்பும், தமிழ்கற்கும் மாணாக்கர்க்குப் பயன் செய்யுமென்பதில் ஐயமில்லை. "இவ்வாத்திசூடிநீதிகதை," இதனை இயற்றிய ஸ்ரீமத். ஆர். ஹரிஹர ஐயரவர்களுக்குத் தமிழில் உரைநடை எழுதுதலில் உள்ள ஆற்றலை உணர்த்துகின்றது. அன்றியும், அவர் ஆங்காங்கு அமைக்கும் சொற்களும், தொடர்களும், முடிபும், கற்பிக்கும் தொழிலில் அவர்க்கு உள்ள திறமையைப் புலப்படுத்துகின்றன. இத்தகைய புத்தகங்களில் நம் சிறுவரைப் பயிற்றுதல் நன்று."—ஸ்ரீமத். கா. ஸ்ரீ. கோபாலாசாரியர், தமிழ்ப் பிரதம பண்டிதர், கிரிஸ்டியன் காலெஜ், சென்னை.

---

இதன் தொடர்ச்சியைப் புஸ்தகத்தின் இறுதியிற் காண்க.

ஸ்ரீ

# பிரகலாதாழ்வான் சரிதை.

வேலூர் காலேஜ் தமிழ்ப் பிரதம பண்டிதர்

புை. க. ஸ்ரீநிவாஸாசாரியர்

இயற்றியது.

[இரண்டாம் பதிப்பு.]

OFFICE OF THE REGISTRAR O...
22 OCT 1915
MADRAS

வேலூர்:

சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1915

[All Rights Reserved.]

விலை அணா—6.

# கடவுள் வணக்கம்.

பாலன் றனக்காப் பருந்தூ ணிடைவந்த
கோல நரசிங்கக் கோமானும்—மேலறிஞர்
சிந்தையிற் சேருஞ் செழுஞ்சுடரின் சேவடியைச்
சந்ததமு நெஞ்சமே சார்.

OFFICE OF THE REGISTRA[R]
22 OCT 1915
MADRAS

# விஷய சூசிகை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| 1. முகவுரை ... ... ... ... ... | i |
| 2. பிரகலாதாழ்வான் சரிதை : முதல் அத்தியாயம்:- [பிரகலாதனது தந்தையான இரணியனது தன்மை.] | 1 |
| 3. இரண்டாம் அத்தியாயம்:— ... ... [இரணியனது மகனான பிரகலாதனது தன்மை.] | 7 |
| 4. மூன்றாம் அத்தியாயம்:— ... ... ... [இரணியன் தன்முன்னே பிரகலாதனை வரவழைத்து வைத்துக்கொண்டு விசாரித்ததும், பிரகலாதன் மறுமொழிகூறியதும்.] | 13 |
| 5. நான்காம் அத்தியாயம்:— ... ... ... [இரணியன் கோபித்துக் கழறிய சொற்கள்.] | 17 |
| 6. ஐந்தாம் அத்தியாயம்:— ... ... ... [பிரகலாதன் இரணியனுக்குத் தத்துவப் பொருள்கள் பலவற்றை வெளியிடல்.] | 20 |

விஷயம். பக்கம்.

7 ஆறாம் அத்தியாயம்:— ... ... ... 29

[இரணியன் கோபித்துக் கட்டளையிட்டபடி அவனது பரிஜனங்கள் பிரகலாதனைப் பலவாறு வருத்துதலும், பிரகலாதன் பகவந்நாமமகிமையால் அத்துன்பங்களினின்று மீளுதலும்.]

8. ஏழாம் அத்தியாயம்:— ... ... ... 43

[பிரகலாதனுக்கும் இரணியனுக்கும் ஸம்வாதம்.]

9. எட்டாம் அத்தியாயம்:— ... ... ... 47

[திருமால் நரசிங்க மூர்த்தியாய்த் தூணினின்று அவதரித்து இரணியனைச் சங்கரித்தமை.]

10. ஒன்பதாம் அத்தியாயம்:— ... ... 60

[பிரமன் நரசிங்கமூர்த்தியைத் துதித்தல். சிங்கப்பிரான் பிரகலாதனைக் கடாக்ஷித்து வரந்தந்து அவனுக்கு முடிசூட்டியமை.]

ஸ்ரீ

கடவுள் துணை.

# முகவுரை.

---

பாகவதோத்தமர்களில் முதல்வனுகிய பிரகலாதாழ்வானுடைய சரித்திரம், ஆஸ்திகர்களெல்லோராலும் கொண்டாடப்படுவது; கடவுள்விஷயமானபக்தியை உண்டாக்கி, மேன்மேல் வளர்ப்பது; பரிசுத்தமான சிறந்த வேதாந்தக் கருத்துக்களைத் தன்னுட்கொண்டது; நாஸ்திகர்களுக்கும் கடவுள் உண்டு என்ற ஒரு நம்பிக்கையைத் தரவல்லது.

"எவன் மஹாத்மாவான பிரகலாதருடைய சரித்திரத்தைச் சமாகித சித்தனுகிக் கேட்பானே, அவனுக்கு அப்போதே ஸகலபாபங்களுந் தீர்ந்துபோம். பிரகலாதருடைய சரித்திரத்தைப் படிக்கிறவர்களுக்கும் கேட்கிறவர்களுக்கும் அஹோராத்திர கிருதங்களான பாபங்களெல்லாம் நீங்குவதற்குச் சந்தேகமில்லை. எவன் இந்தச் சரித்திரம் படிக்கிருனே, அவன், பௌர்ணமாசையிலேயும் அமாவாசையிலேயும் துவாதசியிலேயும் அஷ்டமியிலேயும் திவ்யக்ஷேத்திரத்திலே சூரியகிரகணபுண்ணிய காலத்தில் ஸ்வர்ண சிருங்கம் முதலானவைகளாலே அலங்கரிக்கப்பட்ட உபயதோமுகியான* பசுக்களைச் சற்பாத்

---

* உபயதோமுகி என்பது - இருபுறத்திலும் முகத்தையுடையது; என்ருல், பசு கன்றை யீன்றுகொண்டேயிருக்கையில் இரு முகமாக வுள்ள நிலையைக் குறிக்கும்.

திரத்திலே பூர்ணமான தக்ஷிணைகளோடு தானஞ்செய்த பலனை அடைவான். எவன் பக்திபூர்வகமாகப் பிரகலா தாழ்வானுடைய சரித்திரத்தைக் கேட்கிறானோ, அவனை, ஸ்ரீமந்நாராயணன், பிரகலாதனை ரக்ஷித்தாற்போல,ஸகல ஆபத்தையும் விலக்கி ஸர்வகாலமும் ரக்ஷித்தருள்வன்''— என்பது, ஸ்ரீவிஷ்ணுபுராணம். இதனால், பிரகலாதசரித் திரத்தின் மகிமையை அறியலாம்.

மலரவனது மகனான மரீசியின் குமாரனாகிய காசி யபமுனிவனுடைய மனைவியர்களுள் திதியென்பவளிடம் பிறந்தவனும், திருமாலால் வராஹாவதாரத்திற் கொல் லப்பட்ட இரணியாக்ஷனது தமையனுமான இரணியனது புத்திரன், பிரகலாதன். (திருமாலினது திருவாயில்காவ லாளரான ஜய விஜயரே சாபத்தால் இரணியாக்ஷ இரணி யர்களாகத் தோன்றினர். இரணியனது பெயர், இரணிய கசிபு என்றும் வழங்கும்.)

தேவர் மனிதர் விலங்கு முதலிய பிராணிகளாலும், நிலம் நீர் தீ காற்று வானம் என்னும் ஐம்பெரும்பூதங்க ளாலும், வாள் வேல் முதலிய படைக்கலங்களாலும் தன க்கு இறுதியில்லாதபடி அளவற்ற வரங்களைப் பெற்று வா னவர் முதலிய அனைவர்க்கும் இடுக்கணியற்றித் தன்னையே கடவுளாக வணங்கச்செய்துவந்த அசுரராஜனான இரணி யன், தன் புதல்வனும் மஹாவிஷ்ணுபக்தனுமான பிரகலா தாழ்வான் தன்பெயர்சொல்லிக்கல்விகற்காமல் நாராயண நாமம் சொல்லிவரவே, அவனைக் கொல்லுதற்கு என்ன உபாயஞ்செய்தும், அவன் பகவானது திருவருளால் இற ந்திலனாக, இரணியன் மகனைநோக்கி, 'நீ சொல்லும் நாரா யணனென்பான் எங்கு உள்ளான்? காட்டாய்' என்ன,

அப்பிள்ளை, "சாணினு முளன்; ஓர் தண்மை யணுவினைச்சத கூறிட்ட, கோணினு முளன்; மாமேருக்குன்றினுமுளன்; இந்நின்ற, தூணினு முளநீ சொன்ன சொல்லினு முளன்; இத்தன்மை, காணுதி விரைவின்" என்றுகூற, உடனே இரணியன், நன்றென்றுசினந்து, 'இங்கு உளனோ?' என்று சொல்லி எதிரில் இருந்ததொரு தூணைப் புடைக்க, அதனினின்று பகவான் அப்பொழுதே மனிதவுருவமும் சிங்க வடிவமுங் கலந்த நரசிங்கமூர்த்தியாய்த் தோன்றியருளித் திருக்கைந் நகங்களால் அவன்மார்பைப் பிளந்து அழித்திட்டு, பிரகலாதனைக் கடாக்ஷித்து வாழ்த்தி வரந்தந்து அவனுக்கு முடிசூட்ட, அங்ஙனம் திருமாலருள்பெற்ற அவன் அரசாட்சிசெய்து இனிதிருந்தனன் என்பது, இவ்வசன நூலின் கதைச்சுருக்கம்.

பிரகலாதாழ்வானது புண்ணியசரித்திரம், தமிழ் மொழியிலும் வடமொழி முதலிய பிற மொழிகளிலும் உள்ள பாகவதம் விஷ்ணுபுராணம் முதலிய நூல்களிற் சொல்லப்பட்டுள்ளது. அவற்றில், தமிழிற் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் ஸ்ரீராமபிரானது திவ்வியசரித்திரத்தைக் குறித்துப் பாடியருளிய பெருங்காப்பியமாகிய கம்பராமாயணத்தில் உயுத்தகாண்டத்தில் உள்ள இரணியன் வதைப்படலத்தில் அடங்கிய சரித்திரமே இங்குப் பிரகலாதாழ்வான்சரிதையென எழுதப்பட்டது.

திருமாலினது தசாவதாரங்களுள் நான்காவதான இந் நரசிங்காவதாரத்தின் வரலாறு, ஏழாவதாகிய இராமாவதாரத்தின் சரித்திரத்தைச் சொல்லுகின்ற இராமாயணத்திலே வருதற்கு உரிய சந்தர்ப்பம் யாதெனில்:—

தேவர்களின் வேண்டுகோளால் கோசலநாட்டில் அயோத்திமாநகரத்தில் தசரதசக்கரவர்த்தி திருமகனாய்த் திருவவதரித்த இராமபிரான், தனது சிறிய அன்னையாகிய கைகேயிக்குத் தனது தந்தை கொடுத்திருந்த வரங்களை நிறைவேற்றுதலினிமித்தம் பதினான்குஆண்டு வனவாசஞ் செய்ய உடன்பட்டு, மனைவியாகிய சீதையோடும் தம்பியாகிய இலக்குமணனோடும் நகரத்தைவிட்டுப் புறப்பட்டுத் தண்டகாரணியஞ் சேர்ந்து அதில் கோதாவரியாற்றுக் கரைக்கண் பஞ்சவடி யாச்சிரமத்தில் உறைகையில், அரக்கர்தலைவனாய் இலங்கைநகரத்தில் வாழ்கின்ற இராவணன் தனது தங்கையாகியசூர்ப்பணகையினால் தூண்டப்பட்டுச் சீதையினிடம் பெருங்காதல்கொண்டு துறவிவேடம்பூண்டு வந்து அவளைத் தனித்திருக்கிற சமயம் பார்த்து வஞ்சனையாக எடுத்துச்சென்று இலங்கையில் அசோகவனத்தில் அரக்கியர்சூழச் சிறைவைத்திடுகையிலே, ஸ்ரீராமதூதனான அநுமான் கடல்கடந்துசென்று சீதையுள்ள இடத்தைநாடிக் கண்டுபிடித்து அவளுடன் பேசியபின் இலங்காபுரியை எதிர்த்து மீண்டுவந்து செய்தி கூறியவுடனே, இராமன் பெரிய வாநரப்படையைச் சித்தப்படுத்திக்கொண்டு போரின்பொருட்டுப் புறப்பட்டுத் தென்கடலின் இக்கரையைச் சேர்ந்தவளவிலே, இலங்கையில் சபைவீற்றிருந்த இராவணன், இனிச் செய்யத்தக்கதைக்குறித்து அமைச்சர்களுடனே இரகசியமாக ஆலோசனைசெய்கையில், அவனது தம்பியும் சத்துவகுணசீலனுமான விபீஷணன், பற்பல நீதிகளை அநேகவிதமாக எடுத்துக்காட்டி, இராமபிரானது பலபராக்கிரமம் முதலியவற்றையும் விவரமாக விளம்பி, 'இராமன் திருமாலின் திருவவதாரமாதலால், அவன்றிறத்து அபசாரப்படாமல் சீதையைக்கொ

ண்டு போய் அவனிடம் ஒப்பித்து அவனைச் சரணமடைந்து பொறுக்கும்வண்ணம் வேண்டுதலே தகுதி; இன்றேல், அரக்கர்க்கெல்லாம் அழிவு உண்டாவது திண்ணம்' என்று மிகவும் வற்புறுத்திக்கூறவும், இராவணன் அதற்கு உடன்படாதவனாய்ச் சினங்கொண்டு பலவாறு இகழ்ந்து பேசவே, விபீஷணன், 'உன்னினும் மிக்க பலபராக்கிரமமுடையவர் பலர் அத்திருமாலால் இறந்தொழிந்தனர்' என்று சொல்லி, அதற்கு ஒரு திருஷ்டாந்தமாக இரணியனது சரித்திரத்தை எடுத்துக்கூறினனென அறிக.

இதனை, கம்பராமாயணத்தில் இரணியன்வதைப்படலத்துக்கு முந்தினதாகிய மந்திரப்படலத்தின் இறுதியில் உள்ள "பின்னும்,வீடணன், 'ஐய! நின்தரமல பெரியோர், முன்னை நாளவன் முனிந்திடக் கிளையொடு முடிந்தார்; இன்ன முண்டு யா னியம்புவது: இரணிய னென்பான், தன்னை உள்ளவா கேட்டி' யென்றுரைசெயச் சமைந்தான்" என்ற செய்யுளால் உணரலாம்; "இரணிய னென்பவன் யாவர்தம்மினும், முரணிய னவன் இவன்முனிய மாய்ந்தனன; அரணியல்நெஞ்சின னவன்றன் றேவியாம், தரணியின் தாயைவிட்டருளல் தக்கதால்" என்ற ஒட்டக்கூத்தர் உத்தரகாண்டச் செய்யுளையுங் காண்க.

இந்த நரசிங்காவதார விருத்தாந்தம் முதனூலாகிய ஸ்ரீவால்மீகிராமாயணத்தில் இல்லையாயினும், "முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப், பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி, அழியா மரபினது வழிநூலாகும்*" என்ற

* இறையனாரகப்பொருளுரை மேற்கோள்; நன்னூலாசிரியரால் மேற்கோளாக எடுத்துக்கொள்ளப்பட்டது; நன்னூல் - பொதுப்பாயிரம் - எ.

வழிநூலிலக்கணம்பற்றிக் கம்பரால் தமது கற்பனைசக்தி கொண்டாவது, பிறநூல்மேற்கோள்கொண்டாவது தமது இராமாயணத்தில் அமைக்கப்பட்டதென அறிக. கம்பராமாயணத்தில், இங்ஙனம் முதனூலோடு சிறிதுசிறிது வேறுபட வருகிற பிறஇடங்கட்கும் இவ்வாறே கொள்ளப்படும். இப்படி மாறுபட்டவிடத்து 'ஸ்ரீராமாயணத்தில் இல்லையேயாகிலும், இதிஹாஸாந்தர புராணாதிகளிலேயாதல், கல்பாந்தரத்திலேயாதல் உண்டென்று கொள்ளவேணும்' என்று ஆன்றோர் அருளிச்செய்து அமைத்திருத்தல் அறியத்தக்கது. இதிஹாஸாந்தரமாகிய பாரதத்திலும், பாத்மம் ஸ்காந்தம் கூர்மம்முதலிய புராணங்களிலும் இராமசரிதம் சிற்சிலவிடத்து வேறுபடக் கூறியுள்ளமை காணலாம்.

இனி, இதனைப்பற்றிக் கர்ணபரம்பரையாக வழங்குவதொரு விவரம் வருமாறு:—†கம்பர் ஸ்ரீரங்கத்தில் ஆயிரக்கால்மண்டபத்தில் ஸ்ரீமந்நாதமுனிகளது திருவோலக்கத்தில் தமது இராமாயணத்தை அரங்கேற்றிவருகையில், இரணியன்வதைப்படலத்தை வாசித்தபொழுது, அங்கு இருந்த புலவர்கள் சிலர், 'ஸ்ரீராமாயணத்தில் இரணியன் வதை சொல்லப்படவில்லையே; இஃது ஏது! நவீனமாயிருக்கிறது' என்று ஆக்ஷேபிக்க, கம்பர் 'இது புராணாந்தரம்' என்ன, அவர்கள், 'தேவபாஷையாகிய ஸம்ஸ்கிருதத்தில் ஆதிகவியாகிய ஸ்ரீவால்மீகிபகவான் தம் இராயாயணத்தில் சொல்லாததை நீர் சொன்னமையால், இதனை எங்ஙனம் அங்கீகரிப்பது? இவ்விஷயத்தை அனைவரும் ஒப்புக்கொள்ளும்படி, நீர் ஏதேனும் தெய்விகம் காட்டவேண்டும்; அஃதாவது:—இது சிங்கப்பிரானது திவ்யசரித்திரமாதலால்,

---

†இது, விநோதரஸமஞ்சரியினின்று எடுத்து எழுதப்பட்டது.

இதனை இந்தத் திருவரங்கம் பெரியகோயிலில் எழுந்தரு ளியுள்ள மேட்டழகியசிங்கர் சிரகம்ப கரகம்பஞ்செய்து திருவுள்ளமுவந்து ஏற்றருளுவதுதான்' என்றார்கள். முக் காலநிகழ்ச்சியும் உணரவல்ல மெய்ஞ்ஞான யோகீச்வரரா கிய ஸ்ரீமந்நாதமுனிகள் இதுவிஷயத்தில் ஒன்றும் உரை யாதிருந்தனர். பின்பு, கம்பர், தெய்வசங்கற்பத்தின்படி யாகிறதென்று எண்ணித்துணிந்து, இவ்விரணியன்வதைப் படலத்தை மேட்டழகிய சிங்கர்திருமுன்னிலையில் வாசித் தபொழுது, இரணியன் பிரகலாதாழ்வானை நோக்கி, 'நீ சொல்லிய அரியென்பவன்எவ்விடத்திலிருப்பான்?' என்று கேட்டதற்குப் பிரகலாதன், 'அந்தப் பரமாத்மா அகண்டி தனுகையால், அவன் இன்னஇடத்தில் இருப்பான் இரான் என்று கண்டிதப்படுத்திச் சொல்லவும், அவனுடைய அணுத்வ விபுத்வ அதிசயங்களை இன்னபடியென்று வரை யறுத்து அறியவும் முடியாது; ஆயினும், ஒருவாறு சொல் லுகிறேன்: அவன் ஒருசாணளவாகிய சிறிய துரும்பிலும் இருப்பான்; ஓரணுவைச் சதகூறுசெய்துபார்த்தால் அக் கூறுகள் ஒவ்வொன்றிலுந் தனித்தனி யிருப்பான்; அன் றியும், பெரிய மேருமலையிலும் இருப்பான்; இங்கே நிற் கின்ற தூணிலும் இருப்பான்; நீ சொன்ன சொல்லிலும் இருப்பான்; அவனில்லாத இடம் எதுவுமில்லை; இவ்வுண் மையை அறியவேண்டுமாயின், தாமதியாமற் சோதித்துப் பார்' என்றான். அதுகேட்டுஇரணியன் சொல்லத்தொடங்கி னன் என்றகருத்தைத் தன்னிடத்திற்கொண்ட "சாணினு முளனோர்" என்னுந் தொடக்கத்துப் பாடலையும், தேவர் களுக்கும் உனக்கும் ஒருதன்மையாய் இவ்வுலகமெங்கும் நிறைந்திருக்கின்ற அரியென்பவன், மற்ற இடங்களிலெல் லாம் இருப்பானென்பது அப்படியிருக்கட்டும்; இத்தூணி

னிடத்திலு மிருக்கிறானென்று நீ சொன்னமையால், இத னிடத்தில் நான் காணும்படி அவனைப் பிரதியக்ஷமாகக் காட்டவேண்டும்; காட்டாமற்போவாயாகில், மஸ்தகத் தையுடைய யானையைச் சிங்கமானது அறைந்து கொன் றாற்போல உன்னைக்கொன்று என்பசிதீர உன்னுடலைத் தின்று, உதிரத்தைக்குடித்து, தாகத்தைத் தணித்துக்கொ ள்ளுகிறேன்' எனப் பிரதிஜ்ஞைபண்ணினான் என்ற கரு த்தை உள்ளிட்ட "உம்பர்க்கு முனக்கு மொத்து" என் னுந் தொடக்கத்துப் பாடலையும், அந்தப் பிரதிஜ்ஞையைக் கேள்வியுற்ற பிரமஞானியாகிய பிரகலாதாழ்வான், 'ஐயா! இப்பொழுது என்னுயிரைக் கொல்லுகிறதாகப் பிரதிஜ் ஞைபண்ணினையே; இது வீண்தான்; முன்பு எண்ணெய்க் கொப்பறையிற் றள்ளினாய்; கற்பாறையோடு கட்டிக் கட லில் விடுத்தாய்; வாள் வேல் முதலிய ஆயுதங்களைக்கொ ண்டு வெட்டிக் குத்தி எய்து எறிந்தும் பார்த்தாய்; நான் இறக்கும்படி மரணயாகமுஞ் செய்வித்தாய்; என்மேல் அஷ்டதிக்கஜங்களையும் ஏவினாய்; அஷ்டமஹாநாகங்களை யும் விட்டுக் கடிப்பித்தாய்; பைக்குள்ளே போகட்டு இறுக்கிக்கட்டிச் சம்மட்டிகொண்டும் அடிப்பித்தாய்; மற்றும், எத்தனையோ பாதைகளுஞ் செய்வித்தாய்; அவை களினாலெல்லாம் நான் இறந்தேனா? என்னுடைய உயிர் உன்னாலே கொல்லப்படுவதற்கு அத்தனை எளிதானதன்று; உன் ப்ரதிஜ்ஞை ஒன்றுங் கைகூடிவராது; இதோ என் ப்ரதிஜ்ஞையைக் கேள்: உனக்கு நான் முன்பு சொன்ன ஸர்வ வ்யாபகன், நீ தொட்ட தொட்ட இடந்தோறும் அவச்யம் தோன்றவேண்டும்; தோன்றாமற்போவானானால், என்னுயிரை யானே மாய்த்துக்கொள்வேன்; அப்படிச் செய்யாமற் பின்னும் உயிரோடுவாழ்ந்திருக்க விரும்புவே

ஞகில், நான் அந்த லோகாராட்யனுக்குத் தாஸபூதனல் லேன்' என்முன் என்னுங் கருத்தை உட்கொண்ட "என்னுயிர் நின்னாற் கோறற்கு" என்று தொடங்கும் பாடலையும் வாசித்து, இப்படி ப்ரஹ்லாதன் செய்த ப்ரதிஜ்ஞையை ஹிரண்யன் கேட்டவுடனே தன் பகுவாயைத்திறந்து, 'நல்லது, நல்லது' என்று அதட்டி, தந்தங்களெல்லாம் குப்பென்று பிரகாசிக்கும்படி நகைத்து, உக்ரத்துடனே தனக்கெதிரே இருந்த நெடிய வச்சிரத்தூணிற் பெரிய பர்வதத்தின்மேற் பிரளயகாலத்து இடி இடித்து விழுந்தது போல, வெற்றிபெற்ற புகழ்விளங்கிய தன் கையினால் ஓங்கி விசைகொண்டு ஓரறை அறைந்தான்; அறைந்தமாத்திரத்தில், ஸர்வாந்தர்யாமியென்னும் தைத்தியாரியானவன், சிங்கவடிவுகொண்டு ஆவிர்ப்பவித்து அந்தத்தூணைப் பிளந்து அதில்நின்று அஷ்டதிக்குக்களையுந் திறந்து அண்டத்தையுங் கீறி, அப்புறத்திலும் ஓங்கி, அகிலபுவனசராசரங்களுந் திடுக்கிடும்படி கலகலவென்று சிரித்தான் என்பதைக் கூறும்

"நசைதிறந் திலங்கப் பொங்கி, நன்றுநன் றென்ன நக்கு,
விசைதிறந் துருமு வீழ்ந்த தென்ன, ஓர் தூணின், வென்றி
இசைதிறந் துயர்ந்த கையா லெற்றினன்; எற்ற லோடும்,
திசைதிறந் தண்டங் கீறிச் சிரித்தது செங்கட் சீயம்."*

என்கிற பாடலையும், 'ஜகத்ரக்ஷகன் சிங்கவடிவெடுத்துத் தூணைப்பிளந்து அதன்நடுவில் திருவவதரித்து, பிரசன்னமாய்ச் சிரித்ததுகண்டு, பிரகலாதன் ஆனந்தத்தால் ஆடிப் பாடி அழுது தொழுதான் என்பதைக் குறிக்கும் "நாடி நான் தருவன்" என்றுதொடங்கும் பாடலையும் வாசித்

---

* "விசைபிறந்துருமு" என்றும், "இசைதிறந்தமர்ந்த" என்றும் பாடபேத முண்டு.

தார். வாசித்தமாத்திரத்தில், மோட்டழகியசிங்கர் தமது திருக்கரங்களை நீட்டித் திருமுடியைத் துளக்கிப் பவளம் போலுஞ் சிவந்த வாயைத் திறந்து கடகடவென்று அந்த மண்டபமும் அதிர, அங்குள்ள ஸகலஜநங்களும் நடுங்கப் பெருஞ்சிரிப்புச்சிரித்து ஆர்ப்பரித்தார். அப்பொழுது, அதுகண்டு எல்லோரும் அதிசயித்து, 'திருச்சித்திரகூடத்தில் பாம்புகடித்து இறந்த தில்லைமூவாயிரவர்பிள்ளையொன்று, இக்கம்பராமாயணத்தின் நாகபாசபடலத்துச் சில கவிகளை வாசித்தவளவில் பிழைத்தெழுந்தது; இங்கே, இரணியன் வதைப்படலத்தை வாசித்தவளவில், சுதையாலாகிய அர்ச்சாவிக்கிரகரூபமாய் எழுந்தருளியிருக்கின்ற மோட்டழகிய சிங்கப்பெருமான் திருவுளமுவந்து, அவ்வுகப்பு யாவர்க்குந் தெரியும்படி சிரகம்ப கரகம்பத்தொடு அட்டஹாஸமும் செய்தனர்: ஆதலால், இப்பெருங்காப்பியம் மிக்க தெய்வத்தன்மையுடையது.' என்றும், 'இந்நூலிற் சிற்சில சந்தர்ப்பத்தில் ஆக்ஷேபம் நிகழ்ந்தபொழுது, அந்தந்த இடத்துக்குத் தக்கபடி விசேஷார்த்தஞ் சொல்லிச் சமர்த்தித்துவந்த ஸ்ரீமந்நாதமுனிகளும், இது விஷயத்தில்மாத்திரம் யாதொன்றுஞ் சொல்லாமல் மௌனமாயிருந்தது, இம்மகிமை அனைவர்க்கும் தானே பஹிரங்கமாகவேண்டுமென்ற திருவுள்ளம்பற்றியேயாம்' என்றும் எண்ணிக் கம்பரைக்குறித்தும் அவரது நூலைப்பற்றியும் மிகவும் மெச்சிக் கொண்டாடினார்கள் என்பது.

இத்தகைய சிறப்புவாய்ந்துள்ளமைபற்றியும், கம்பர் சரித்திரம்சொல்லும் போக்கில் அமைந்த அழகும் அவரது கற்பனைத்திறமும் விஷ்ணுபக்தியும் உலகப்பிரசித்தமாதலாலும், யான், கம்பராமாயணத்தில் உள்ளபடியே பிரகலாதாழ்வான் சரிதையை எழுதவேண்டுமென்ற அவா நிகழ்ந்து எழுதலானேன். இங்ஙனம் கம்பராமாயணத்

தில் உள்ளதை எழுதினேனேயன்றி, ஆதாரமின்றிக் கற்பனையாக யாதொன்றையும் எழுதினேனில்லை. படிப்போர்க்கு எளிதாகப் பொருள்விளங்கும்வண்ணம் பெரும்பாலும் இயற்சொற்கொண்டே எளியதாகச் செந்தமிழ்வசன நடையில் இச்சரித்திரம் எழுதப்பட்டது. "முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும், பொன்னே போற் போற்றுவம்"* என்பது இலக்கணமாதலால், ஆங்காங்கு ஆன்றோர் எழுதியுள்ள சொற்களும் சொற்றொடர்களும் இந்நூலிற் சிற்சிலவிடத்து எடுத்து ஆளப்பட்டுள்ளன. படிப்பவர்க்கு இனிமைதரும்பொருட்டும், கம்பரது வாக்கின் சிறப்பைக் காட்டவேண்டியும் இரணியன் வதைப்படலத்தில் உள்ள அருமையான சிறந்த செய்யுள்கள்சில இடையே வைக்கப்பட்டுள்ளன. வாசிப்பவர்க்குப் பொருளுணர்வோடு பாஷாஞானமும் அபிவிருத்தியாவதைக் கருதி, இதில் மற்றுஞ் சில மேற்கோள்களும், திரிசொற்களோடு வடசொற்களும் ஆங்காங்கு அமைக்கப்பட்டன.

சிறுவர்களும் சிறுமியர்களும் படித்தற்கு உரியனவல்லாத சிருங்காரரஸப்பிரதானமான விஷயங்களாவது, மற்றும் இடக்கரான பாகங்களாவது இவ்வசன நூலின்கண் சிறிதும் இல்லை. பக்திரஸம் துளித்துப் பெருகப்பெற்றுள்ள செய்திகளே பெரும்பாலும் காணப்படும். ஆதலால், இந்நூலைப்படிப்பவர்கள் சிறந்த பக்திமான்களாகக்கூடும்.

படிப்பவர்களுக்கு நன்கு விளங்கும்படி இந்நூலை ஒன்பது அத்தியாயங்களாகப் பிரித்து, ஒவ்வொரு அத்தி

* நன்னூல் - பொதுப்பாயிரம் - க.

யாயத்தின் முன்னும் அதில்வரும் விஷயத்தைச் சுருக்கமாகக் காட்டியிருக்கின்றேன்.

கும்பகோணம் காலெஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. உ. வே. வை. மு. சடகோபராமாநுஜாசாரியரும், சென்னை வெஸ்லி காலெஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. உ. வே. சே. கிருஷ்ணமாசாரியரும் எழுதி வெளியிட்ட 1903-ஆம் வருடத்து பி. ஏ. பாடபுத்தகவுரையில் அடங்கிய இரணியன்வதைப் படலவுரை, இவ்வுரைநடைநூல் எழுதுவதற்குப் பெரிதும் உதவியாயிருந்தது.

இப்புத்தகத்தை (முதற்பதிப்பு) அச்சிடுதற்கு, செல்வப்பொருளோடு கல்விப்பொருளும் ஒருங்குடைய சனவான்கள் சிலர் பொருளுதவி புரிந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் புரிந்த அந்நன்றியை யான் எக்காலத்தும் மறவாமலிருப்பதன்றி, அன்னார்க்கு என்னாற் செய்தற்குரிய கைம்மாறு யாது? "செய்யாமற் செய்தவுதவிக்கு வையகமும், வானகமு மாற்ற லரிது."

இஃது, இரண்டாம் பதிப்பாகும், இதில், முதற்பதிப்பினும் விசேஷமாகச் சிற்சில சீர்திருத்தங்களைச் செய்துள்ளேன்.

இவ்வசனநூலிற் காணப்படும் குற்றங்குறைகளை அறிவொழுக்கங்களிற் சான்றோர் தமது இயற்கை நற்குணத்தாற் பொறுத்தருளுமாறு பிரார்த்திக்கின்றேன்.

வேலூர்
5௳ அக்டோபர்மீ 1915 } பு. க. ஸ்ரீ.

ஸ்ரீ

கடவுள் துணை.

# பிரகலாதாழ்வான் சரிதை.

## முதல் அத்தியாயம்.

[பிரகலாதனது தந்தையான இரணியனது தன்மை.]

திருமாலின் திருவுந்தித்தாமரைமலரில் தோன்றிய பிரமதேவனது குமாரனாகிய மரீசியின் மகனான காசியப முனிவனுடைய மனைவியர்களுள் திதி என்பவளிடம் பிறந்தவன் இரணியன். இவன், திருமாலால் வராஹாவதாரத்திற் கொல்லப்பட்ட இரணியாக்ஷனது தமையன்.

வேதங்களிற் குறிக்கப்பட்ட பொருள்களையெல்லாம், படைத்தற்றொழிற் கடவுளும் தேவர்களிற் சிறந்தவனுமாகிய மலரவனே, அந்த இரணியனுக்குக் குருவாய்ப் பொருந்திநின்று இளமையிற் கற்பித்துக்கொடுத்தான்.

இன்னும், அவ்விரணியாசுரன், அரிய பெரிய தவம் செய்கையில், அதற்கு மகிழ்ந்து அயன் பிரதியக்ஷமான பொழுது, தன்மனத்தில் அறிவினாற் கண்டபடி குறித்துக் கேட்ட வரங்களையெல்லாம், அந்தப் படைப்புத் தொழிற் கடவுள் தனக்குக்கொடுக்கப் பெற்றுக்கொண்டு, பின்பே தவத்தினின்று மீண்டுவந்தான்.

எல்லாப்பொருள்களையும் அழிக்கின்ற நெருப்புக் கண்ணை நெற்றியில் உடையவனான சிவபெருமானும் மல ரயனும் முடிவுகாணவொண்ணாத நிலம், நீர், தீ, காற்று, வானம் என்னும் பஞ்சபூதங்களினிடத்தும் தனித்தனி பொருந்திய பலங்களையெல்லாம் அவ்விரணியன் தானொரு வனே ஒருசேரப் பெற்றிருந்தான். எக்காலத்திலும் அழி யாமல் நித்தியனாக இருக்கின்றானென்று வேதவேதாந் தங்களாற் சொல்லப்படுகின்ற எல்லாவற்றிற்குந் தலைவ னான திருமாலும், நான்முகனும், சிவனும் முறையே காத் துப் படைத்து அழிக்கின்ற இந்த ஓர் அண்டகோளத்தில் மாத்திரமோ? இதற்கு வெளியிலுள்ள கணக்கிடவொண் ணாத மற்றை அண்டகோளங்களிலும் எல்லோரும் தனது பெயரையே சொல்லித் துதிக்கும்படி அவ்விரணியன் வாழ்ந்திருந்தான்.

அவ்விரணியன், பெரிய கிழக்கு முதலிய எட்டுத் திசைகளையும் தூண்போலத் தாங்கிக்கொண்டு உயர்ந்துள் ளவையும், பருத்த துதிக்கையையுடையனவுமாகிய வலிய ஐராவதம் முதலிய அஷ்ட திக்கஜங்களுள் எவையேனும் இரண்டு யானைகளைத் தனது இரண்டு கைகளாலும் வலி யப் பிடித்திழுத்து, ஆட்டுக்கடாக் குட்டிகளை ஒன்றோ டொன்று சண்டைக்கு முட்ட விடுவதுபோல ஒன்றோ டொன்று முட்டவிட்டு வேடிக்கைபார்ப்பான்; ஆழங் காணக்கூடாதவையாய்ப் பரந்தவையாயுமிருக்கின்ற ஒப் பற்ற எழு கடல்களையும் தனது இரண்டு கால்களின் அள வேயாகத் தாண்டி அப்பாற்செல்வான்; வண்டலிட்டு ஓடு கின்ற, மேலே தெளிவான அலைகளையுமுடைய ஆற்றின் நீர் சிறியதென்று நினைத்து, அவன் அதில் இறங்கி நீரா

டான்; நீர்கொண்ட நீலமேகத்தினின்று சொரியும் தண்ணீரைத் தனக்குக் குளிர்ச்சிசெய்தற்குப் போதாதவையென்று நினைத்து, அத்தண்ணீரிலும் ஸ்நானஞ்செய்யான்; தெளிவான அலைகளையுடைய பழைய கடலின் நீரை உப்புத்தன்மை யுடையதென்று கருதி அதிலும் நீராடான்; பின்னை எப்படி நீராடுவானென்றால்,—அண்டகோளத்தை ஒருபக்கத்தில் துளைசெய்து, அதற்கு அப்பாலுள்ள பெரும்புறக்கடலின்* நீர் அத்துளைவழியாக அண்டத்தினுள்ளே விழ, அதனைக்கொண்டு நீராடுவான்; இப்படி மிக்க பெரும்புறக்கடலின் நீரிலே ஸ்நானஞ்செய்து, நாகலோகத்திலே சென்று அங்குள்ள நாககன்னிகைகளுடனே இருந்து, இனிய அமிருதம்போன்ற உணவை உண்டு, பலராலுந் துதிக்கப்படுகின்ற தேவேந்திரனது சுவர்க்கத்திலே பகற்பொழுதைச் கழித்து, இரவில் நான்முகனது சத்தியலோகத்தில் கொலு வீற்றிருப்பான்; சந்திரன் ஏறிச்செல்லும் விமானத்தில் தான் ஏறி, அந்தச் சந்திரனது ஒப்பிலாத பதவியிலே இருந்து ஸஞ்சரித்து, அவனது அதிகாரத்தைத் தான் செலுத்துவான்; சூரியனது தேரின் மேல் ஏறி நின்றுகொண்டு அந்தச் சூரியனது பெரிய பதவியின் அதிகாரத்தைச் செலுத்துவான்; நிலைபெயர்தலில்லாத இந்திரன், அக்கினி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் அஷ்ட திக்பாலகர்களுடைய இடங்களில் இருந்து, அவர்களுடைய தொழில்களையெல்லாம் கைக்கொண்டு நடத்துவான்; பெரிய மேருமலையின் உச்சியில் பிரமதேவன்போல அரசாட்சிசெலுத்

* அண்டத்தினுள்ளேயுள்ள எழு கடல்களினும் பெரியதும், அதன் வெளியிலுள்ளதுமான கடல்.

திக்கொண்டு வீற்றிருப்பான்; நிலமும், நீரும், நெருப்பும், காற்றும், வானமும் ஆகி விளங்குகின்ற உலகத்தில் நெடுங்காலமாகவுள்ள அந்தப் பூதங்களின் அதிதேவதைகளாகிய பிரசித்திபெற்ற தேவர்களை அந்தந்தப் பதவியிலிருந்து மாற்றி, தானே, இடைவிடாது உலாவுகின்ற காற்றும் மற்றைய தேவர்களுமாகி, உலகத்து எல்லாப்பூதங்களின் வலிமையையும், செய்கையையும், நீர்க்கடவுளாகிய வருணனுடைய தொழிலையும் செய்வான்; எல்லாவுலகங்களிலும், எல்லோரும், திருமாலினது திருநாமங்கள் நீங்க, தனது பெயரையே சொல்லச்செய்து, யாகங்களிலே பரிசுத்தமான புகையையுடைய வெப்பமான வைதிக அக்கினியிலே அந்தணர் முதலியோர் மந்திரபூர்வமாக இட்டு ஹோமஞ்செய்த, தேவர்கட்குச் சேர்தற்குரிய ஹவிர்ப்பாகங்களையெல்லாம் தான் பெற்று உண்பான். எல்லாவற்றையும் பாதுகாத்தலும் படைத்தலும் அழித்தலும் என்ற இந்த மூன்று தொழில்களையும் செய்யக்கடமையுடைய திரிமூர்த்திகளும், அத்தொழில்களைச் செய்து முடிக்க மாட்டாதவராய்த் தங்கள் உரிமையைக் கைக்கொள்ளாது விடுவாராயினர்: என்றால், தம்தமது தொழிலை மேற்கொண்டு முடிக்கவல்லவர் வேறு யாவர் உளர்? யோகப்பயிற்சியில் தேர்ந்த முனிவர்களும், தம் யோகபலத்தாற் பெறும் பதவிகளைப் பெறாது அவனால் இழந்துவிட்டார்கள்.

அல்லாமலும், பலராலும் வணங்கப்படுகிற தேவர்களும், அவனது அடிகளையன்றி வேறொன்றை அர்ச்சனை செய்யார்கள். பிரமனும் சிவபிரானும் முதலிய தேவர்கள் குருக்களிடத்துப்படித்தறிந்து எப்பொழுதுஞ்சொல்வது, அவ்விரணியனது பெரிய சிறந்தவெற்றியையேயாம். தொ

ன்றுதொட்டு நான்குவேதங்களின் வாக்கியங்களிலெல்லாம் வெளிப்படாமற் பொதிந்திருக்கின்ற அதிதேவதையாகிய வேதபுருஷனும், சுருக்கமான ஸாரமாக 'இரணியனே! உனக்கு நமஃ' என்று சொல்லித் துதிக்கும்.

இரணியாசுரன் முன் ஒருகாலத்தில் வானவர்களும் தானவர்களுமாகிய எல்லோரும் பாற்கடலைக் கடையும் பொருட்டுப் பலமுள்ளதாகத் தேடி எடுத்துக்கொண்டு வந்த மத்தாகிய மந்தர மலையை, வெற்றியையுடைய திரண்ட தனது தோள்களின் வலிமைக்கு ஏற்ற தண்டாயுதமாக எடுத்துக்கொள்ளத் தொடங்கி, பின்பு, அதனையும் அற்பமானதென்று எண்ணி நீக்கிவிட்டான். சூரியன் உதிக்குமிடமும் சென்று மறையுமிடமும் ஆகிய பெரிய உதயகிரியும் அஸ்தகிரியுமென்னும் இரண்டு மலைகளும், இரணியனுக்குக் காதுகளில் இடும் குண்டலங்களாகும் என்றால், மற்றும், அவனது மிக்க வலிமையைக்குறித்துச் சொல்லவேண்டுவது யாது உள்ளது?

பெரிய நீண்ட சிவந்த தனது அடிகளை அவ்விரணியன் தரையில் ஊன்றிவைப்பானாயின், கீழிருந்து பூமியைத்தாங்குகின்ற, படமுள்ள ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேஷன், அந்தப் பாரமிகுதியைத் தாங்கமாட்டாமல் மயங்கித் தளர்வான். அவ்விரணியன் எழுந்து நிற்பானானால், அண்டகோளத்தின் மேல்முகடு தனதுதலையிற் படும்படி அதுவரையிலும் உயர்வான்; இடம்விட்டுப் பெயர்வானானால், தனது வலிய விசையினால் பஞ்சமஹாபூதங்களும் தன்னோடுகூடவே நிலைபெயர்ந்துவர அவற்றுடனே நடப்பான்.

அவ்விரணியன், தான்பெற்ற வரத்தினால், பெண்களாலும், பெரிய வளர்ச்சியையுடைய ஆடவர்களாலும், ஆணும் பெண்ணுமல்லாத அலிகளாலும், உடம்பினுள்ளே பொருந்திய உயிரையுடைய மற்றையவற்றாலும், உயிரில்லாதவற்றாலும் இறக்கமாட்டான்; மற்றும் கண்களாற் காணப்படும் காட்சிப்பொருள்களெல்லாவற்றாலும், மனத்தாற் கருதப்படும் கருத்துப்பொருள்களெல்லாவற்றாலும் இறவான்; பூமியிலும் சாகமாட்டான்; ஆகாயத்திலும் சாகமாட்டான். அந்த இரணியன், தேவர்களில் எவரேயாயினும், எங்குந் தடையின்றிச் சஞ்சரிக்கவல்ல இயக்கர்களில் எவரேயாயினும், ஒருங்குவைத்து எண்ணப்படுதற்கும் தியானிக்கப்படுதற்கும் ஏற்ற, ஒருவரோடொருவர் கோவையாய்ச் சொல்லப்படுகிற திருமாலும்,* பிரமனும், சிவனும் ஆகிய திரிமூர்த்திகளும், மற்றும் எல்லோரும் தன்னைக் கொல்ல உயிர்நீங்கான்; அன்றியும், சிறிதும் வலிமையும் ஒடுங்கான். அவன், நீரிலுஞ் சாகமாட்டான்; நெருப்பிலுஞ் சாகமாட்டான்; வீசிக்கிளம்புகிற காற்றிலும், மண்ணுலகத்திற்கு மேலுள்ள மலைமுதலிய எல்லாவிடங்களிலும், புவர்லோகம் முதலிய எல்லாவிடங்களிலும் மாளான். முக்கால வரலாறுகளையும் அறியவல்ல தேவர்களும், முனிவர்களும், மற்றை யோகிகள் முதலியோரும் சொல்ல, தவறாத எல்லோரையுஞ் சேர்தற்குரிய சாபங்களும்போய் அவனைச் சாரமாட்டா. அவன் வீட்டினுள்ளேயும் சாகமாட்டான்; வெளியிலேயும் சாக

* திருமால் பின்பு நரசிங்கமூர்த்தியாய் இவனைக் கொல்லினும் தானான தன்மையில் நின்று கொல்லாமை, இங்குக் கருதத்தக்கது.

மாட்டான். அழிவில்லாத மிகுதியாகிய தெய்வத்தன்மை யுள்ள சிறந்த ஆயுதங்களெவையும் அவனைக் கொல்லமாட்டா. அவன் இரவிலுஞ் சாகமாட்டான்; பகலிலுஞ் சாகமாட்டான்; எல்லாப்பிராணிகளையுங்கொல்லுந் தேவனாகிய யமன் தனது உயிரைக் கவர்ந்துகொள்ளச் சாகமாட்டான். என்றால், இனி, அவனுடைய உயிரை உடம்பினின்று கொள்பவர் வேறு எவர் உண்டு? அவ்விரணியன், பஞ்சபூதங்களாலும், இயற்கையாகப் பொருந்திய அறிவோடுகூடிய நான்கு வேதங்களிலுஞ் சொலலப்பட்டுள்ள மந்திரங்களாலும் சாகமாட்டான்; தனது தந்தை தானே வந்து தனியே இரகசியமாகத் தன்னைக் கொல்ல முயன்றாலும் சாகான். எல்லாவுலகங்களுக்கும் தலைவன் அவன். அவன் நிலைமை இத்தன்மையானது.

## இரண்டாம் அத்தியாயம்.

[இரணியனது மகனான பிரகலாதனது தன்மை.]

இத்தன்மையனாகிய அவ்விரணியனுக்கு அருமையாகப்பிறந்த மகனும்*, அறிவுடையோர்களினும் அறிவுடையோனும், பரிசுத்தரென்று சிறப்பித்துச் சொல்லப்படுபவர் எல்லாரினும் வேதங்களினும் பரிசுத்தியுடையவனும், ஸர்வேச்வரன்விஷயமான ஒப்பற்ற ஞானத்துக்கும் அவ்

* அநுஹ்லாதன், ஹ்லாதன், பரமதார்மிகனான ப்ரஹ்லாதன், ஸம்ஹ்லாதன் என்கிற நால்வர் இரணியகுமாரர்கள் என்று ஸ்ரீ விஷ்ணுபுராணம் சொல்லுகிறது.

வறிவிற்கேற்ற நல்ல தருமவொழுக்கத்துக்கும் தலைவனும், உலகத்தில் நிலைபெற்ற பிராணிகளினிடத்துத் தாயைக் காட்டிலும் அன்புடையவனும் ஆகிய ஒரு பெரியவன் இருந்தான். அவனது பெயர் பிரகலாதன்.

ஊழிக்காலத்தையுங் கடந்து அதற்கும் மேலே செல்லுகிற ஆயுளையுடையவனும், ஈரேழுலகங்களி லுள்ளாரும் வந்து தனது அடிகளைத் தொழ மிக்க சிறப்போடு அரசாட்சி செய்துகொண்டிருந்தவனுமாகிய அவ்விரணியன், அந்தக் குமாரனைக் கண்டு மனம்மகிழ்ந்து உருகி, 'எனது ஆஜ்ஞாசக்கரத்துக்கு உரிய ஐயனே! நீ வேதங்களை அறிவாய்' என்று கட்டளைகூறினான். என்றுசொல்லி, இரணியன் ஓர் அந்தணன்* வசத்திலே அறிவுடையவனான பிரகலாதனை ஏவி ஒப்பித்து, அக்குருவை நோக்கி, 'நீ இம்மகனுக்கு வேதங்களை நன்றாகச் சொல்லிக்கொடுப்பாய்' என்று சொன்னான்.

அங்ஙனமே, அந்தக்குரு அப்பொழுது அக்குமாரனுடனே போய்க் கல்விக்கழகத்தை யடைந்து, நான்குவேதங்கள் முதலியவற்றை அவனுக்குக் கற்பிக்கத்தொடங்கினான். இப்படி கற்பிக்கத்தொடங்கிய ஆசிரியன், பிரகலாதனை நோக்கி, 'உனது தந்தையின் பெயரை முதலிற் சொல்' என்று சொன்னவுடனே, பிரகலாதன், தனது இரண்டு செவித்துளைகளையும் இரண்டு கைகளாலும் நன்றாக மூடிக்கொண்டு, 'பெரிய ஆசிரியனே! நீ சொன்னபடியே சொல்வது நல்லொழுக்கமன்று' என்று கூறி மறுத்து,

---

* இவன், அசுரகுருவாகிய சுக்கிராசாரியன்; சுக்கிரன்மகனாகிய சண்டாமர்க்கன் என்பதும் உண்டு.

வேதாந்தத்திற் சொல்லப்படுகிற உண்மைக்கடவுளினது திருநாமத்தை வெளியிட்டு உரைத்தான். தத்துவஞானத் துக்குத்தலைவனான பிரகலாதன், 'ஓம் நமோ நாராயணாய*' என்று ஸ்ரீ அஷ்டாக்ஷர மந்திரத்தைச் சொல்லி, உள்ளம் உருகித் தான் ஒடுங்கி அசைவற்று நின்று, தனது இரண்டு பெரிய கைகளையும் தலைமேல் வைத்துக்கூப்பி அஞ்சலி செய்து, செந்தாமரை மலர்போன்ற அழகிய ஒளியுள்ள கண்கள் நீர்சொரியவும், உடம்பின் மயிர்கள் சிலிர்த்தெழவும், ஸ்ரீமந்நாராயணனைத் தியானித்து இருந்திட்டான்.

அதுகண்டு அந்த அந்தணன் உள்ளமும் உடலும் நடுங்கப்பெற்று, 'கெடுவாய்! குருவாகிய என்னையுங் கெடுத்துவிட்டாய்; பாவி! மாணாக்கனாகிய உன்னையுங் கெடுத்துக்கொண்டாய். நமக்குப் பகைவர்களான அந்தத் தேவர்களும் சொல்லுதற்கு அடாததாயுள்ள வேறாகிய ஒன்றைச்சொல்லும்படி நீ உனது அறிவிற் கொண்டது என்ன ஆச்சரியம்! இங்ஙனம் நீ என்னகாரியம் செய்துவிட்டாய்!' என்று சொன்னான். அதுகேட்டுப் பிரகலாதன் குருவைநோக்கி, 'என்னை நான் உஜ்ஜீவிக்கச் செய்தேன்; எனது தந்தையையும் ஈடேறச்செய்தேன்; எனக்குக் குருவாயமைந்த இத்தன்மையனான உன்னையும் உய்வித்து, இந்த உலகத்திலுள்ள எல்லாவுயிர்களையும் கடைத்தேற்றத்தொடங்கி,ஒருவராலும் செய்யப்பட்டதல்லாமல்

---

*இத்திருவெட்டெழுத்தின் பொருள்—அகாரத்தின் பொருளான நாராயணனுக்கே நான் அடியேன் என்பது. 'நாராயணன்' என்ற திருநாமம்—நார அயந எனப் பிரிந்து, சிருஷ்டிப் பொருள்களுக்கெல்லாம் இருப்பிடமானவனென்றும், பிரளயப் பெருங்கடலை இருப்பிடமாக வுடையவனென்றும், மற்றும் பல வாறும் பொருள்படும்.

கடவுள்போல நித்தியமாயுள்ள பழமையான வேதத்தின் முதற்சொல்லாகிய பிரணவ மஹாமந்திரம் முதலிற்கூறும் பொருளான 'நாராயண' நாமத்தைச்சொன்னேன். நான் சொன்னது என்ன குற்றம்? சொல்' என்று சொன்னான். 'உன் தந்தை, பழமையான தேவர்களெல்லோர்க்கும் தலைவர்களான திரிமூர்த்திகளுக்கும் தலைவன். அவனது திருப்பெயரைக் கூறுதற்குஉரிய பிராமணனாகிய என்னைக்காட்டிலும் நீ அறிவாயோ? ஐயா! இப்பொழுது நீ சொன்ன இப்பெயரை மறுபடியுஞ் சொல்லி என்னைக் கெடுத்திடாதே' என்று குரு சொன்னான். வேதங்களின் எல்லையையறிந்தவனை அந்தக் குரு அந்த வார்த்தையைச் சொன்னவளவிலே, குற்றமற்ற பரிசுத்தமூர்த்தியாகிய பிரகலாதன், 'ஆதிநாயகனாகிய கடவுளினது திருநாமத்தையேயன்றி மற்றொன்றை யான் சொல்ல அறியேன். எனக்கு இதுவிஷயமாய் ஓதவேண்டுவது யாதுமில்லை. என் புத்திக்கு எட்டாமல் நீ அறிவிக்கத்தக்கதும் ஒன்றுமில்லை' என்றுசொல்லி, இனி வரும் இந்த இந்த வார்த்தைகளை மறுபடியும் சொல்லுவான்:—

'எனது மனமானது, பழமையான நான்குவகைப்பட்ட வேதங்களெல்லாம் ஐயந்திரிபறத் துணிந்துதேர்ந்து சொல்லியிருக்கிற எல்லாப்பொருள்களுக்கும் முடிவெல்லையாகவுள்ள ஸ்ரீமந்நாராயணன் உள்ளேவந்து புகுந்து தனக்கு இருப்பிடமாகக் கொள்ளப்பெற்றது. இனி, அந்த எம்பெருமானது திருநாமத்தைக்காட்டிலும் சிறந்த சொல் வேறில்லை; யான் அறியாதவையும் நீதியினின்று வழுவாதவையுமான பொருள்களை நீ அறிந்து சொல்லவல்லாயானால் இனி ஓதுவிப்பாயாக. அறிதற்கு அரிய வேதங்களை அறிந்தவர்களான அந்தணர்கள் ஆராய்ந்து தெய்

வமாகச் சொல்லுவதும் மஹாமந்திரமாக உச்சரிப்பதும் எந்தக் கடவுளையோ? தத்துவப்பொருளை ஐயந்திரிபற வரையறுத்துச் சொல்லுவனவாகிய உபநிஷத்துக்கள் அனைவரும் அறியும்படி சொல்லுவது எந்தப் பரம்பொருளையோ? தேவர்களும் முனிவர்களும் சொல்லுகிற அந்தப் பரமாத்மாவினது திருநாமத்தையே நான் சொல்லுவது அல்லது, சொல்லத்தக்க வேறொரு சிறந்த பெயரும் உள்ளதோ? இல்லையே. வேதங்களைக்கொண்டும், சிறந்த யாகங்களைக்கொண்டும், தத்துவ ஞானத்தைக்கொண்டும், இன்னமுள்ள தவம் பூசனை முதலிய எல்லாச் சாதனங்களைக்கொண்டும் அரிய பதவியாகிய முத்திமுதலிய சித்திகளைத் தவறாது சாதித்துக்கொள்ளும் பெரியோர்கள் தாம் ஜபித்தற்கு உரியதாகப் பெற்ற சிறந்தசொல்லை ஏற்றுக் கொண்டு கூறிப் பயன் பெற்றேன். நீ சொல்லக் கேட்டற்கு உரிய வேறுமொரு பரம்பொருளும் இருக்கின்றதோ? காட்டை வசிக்குமிடமாகக்கொண்டும், பெரிய மலையை வசிக்குமிடமாகக் கொண்டும், மானின்தோலை உடையாகக்கொண்டும், தலைமயிரை மொட்டையடித்துக்கொண்டும், அதனைச் சடையாக வளர்த்து நீட்டியும் இப்படி சொல்லப்பட்ட தவத்துக்கு உரிய முறைகளால் முத்திநிலையை அடைந்தவர்கள் தாங்கள் அடைந்த நெறியினும் சிறந்ததென்று கூறும் பிரபத்திமார்க்கமாகிய* செல்வத்தை அடைந்தேன். மற்றும் நான் வருந்திப் பெறத்தக்கது வேறு யாது உள்ளது? திருவடியாற் பூமியையளந்த தலைவனை எம்பெருமானது அடியார்கட்கு

* யாதொரு சிரமமும் இன்றி எம்பெருமானது திருநாமத்தை உச்சரித்து அதனாலேயே முத்திபெறுதல் மிக எளிய நெறியாம் என்க.

அடிமைப்பட்டவர்கள், பலநூற்பொருள்களை அறிந்த ஆசிரியர் சொல்லத் தமது செவிகளாற் கேட்டிராதவரா னலும், தேவர்கட்கு ஹவிர்ப்பாகங்களைக் கொடுத்தற்கு மந்திரரூபமாக உபயோகப்படுகிற நான்கு வேதங்களின் உள்ளேயிருக்கிற பொருளையும் வெளிப்படைப்பொருளை யும் உள்ளபடி தாமே அறிவார்கள்; வேண்டியபடி பாடல் செய்ய வல்ல புலவராவார்கள்; மெய்ப்பொருளைத் தாமே பிரதியக்ஷமாகக் காண்பார்கள். வேதியனே! சிறியவனுன எனக்கும் ஒப்பற்ற படைத்தற்ருெழிற் கடவுளான பிரம னுக்கும், எல்லோரினும் உயர்ந்த முற்றுமுணரும் தனக் கும் தனதுநிலைமை அறியவொண்ணுதபடியுள்ள ஒப்பில் லாத தனித்தலைவனுன ஸ்ரீமந்நாராயணன், என்மனத்தில் வந்து புகுந்துள்ளான்; ஆதலால், எல்லாப்பொருள்களும் எனக்கு அறிய வந்திட்டன. உனக்கும், இந்தப் பரம் பொருளினும் நல்ல பொருள் வேறில்லை' என்று பிரகலா தன் குருவுக்குக் கூறினன்.

பிரகலாதன் சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்ட வளவிலே, அந்த அந்தணன் [குரு], யாதொரு மறுமொழி யும் சொல்லமாட்டாதவனுய் மனம் மறுகி, 'யான் ஈடே றும் வழியென்ன? எனக்கு அழிவு வந்து நேர்ந்தது, என்று சிந்தித்துத் தைரியம் சிறிதும் இல்லாதவனுய்' ஓடிப்போய் இரணியனை அடைந்து, ஒரு கனு வந்து தோன்றக் கண்டவன் அதனைக் கூறுமாறுபோலக் கூறு பவனுனன்:—

'எனது ஸ்வாமி! கேள்: உனது மைந்தன், எனக்கு இம்மைப்பயனைக் கருதியும் மறுமைப்பயனைக் கருதியும் சொல்லுதற்கும் மனத்தினுல் சிறிதுநினைத்தற்கும் அடாத

வார்த்தைகளைத் தானாகவே சொல்லிக்கொண்டு, 'எனது தந்தையை நினைத்தால் என்னபயன் கைகூடும்?' என்று சொல்லிவிட்டு வேதங்களை ஓதவில்லை' என்று வணங்கிக் குரு இரணியனிடம் செய்தி கூறினான். அந்தச் சொற்களைக் கேட்டு அவ்விரணியன் குருவைநோக்கி, 'வேதியனே! அந்தணர்க்கு அடாததும், முன்னே யாவரும் சொல்லும் முறைமையிற் சேராததும், தனது மனத்தில் தோன்றிய உணர்ச்சியால் புதிதாகத் தானே கொணர்ந்ததுமாக அம்மைந்தன் சொல்லியது என்னசொல்? சொல்வாய்' என்று வினவினான். அசுரராஜனான இரணியன் அச்சொற்களை உரைத்தவளவிலே, அந்த அந்தணன் அஞ்சித் தலைமேற் கைகூப்பிவைத்துக்கொண்டு, 'வலிமையையுடையவனே! எனது இரண்டு செவிகளின் துளையிலே நுழைந்த பாம்புபோலக் கொடிய அச்சொல்லை யான் உனக்கு உரைத்தால், அத்தீவினையால் நரகத்தை அடைவேன்: எனது நாவும் வெந்துபோய்விடும்' என்று சொன்னான்.

## மூன்றும் அத்தியாயம்.

[இரணியன் தன்முன்னே பிரகலாதனை வரவழைத்து வைத்துக்கொண்டு விசாரித்ததும், பிரகலாதன் மறுமொழி கூறியதும்.]

அதுகேட்டுக் கொடியோனான இரணியன், 'என் மைந்தனை விரைவாக அழைத்துக்கொண்டு வருக' என்று ஏவலாளர்க்குக் கட்டளையிட்டான். அறிவில்லாத மனத்தையுடைய அவ்விரணியனது கட்டளையினால் விரைவாக

ஓடிச்சென்று, ஒருகணப்பொழுதிலே பிரகலாதனை அடைந்து, அத்தூதர்கள், உன் தந்தையின் கட்டளை யின்னதென்று தெரிவித்தனர். உடனே, ஒப்பற்ற கடவுளாகிய திருமாலைத் தனக்குத் துணையாகப் பெற்றுள்ளவனான பிரகலாதன், அக்கட்டளையின்படி வந்து தந்தையான இரணியனைக் கண்டு வணங்கி நின்றான்.* தன்னைத் தொழுத மைந்தனான பிரகலாதனை, ஒளியுள்ள அழகிய இரத்தினாபரணங்களை யணிந்துள்ள தனதுமார்பிலே பூசப்பட்டுள்ள பரிமளப்பொடி அவனுடம்பிலே படியும்படி அன்போடு இறுகத்தழுவிக்கொண்டு, தன்பக்கத்திலே அவனை உட்காரவைத்து, அவனை நன்றாக முழுதும் பார்த்து, 'நீ உன் குருவாகிய வேதியன் கேட்கமாட்டாதவனாய் வெறுக்கும்படி பழுதாகச்சொன்ன சொல் என்னது? சொல்வாய்' என்றான்.

அப்பொழுது, பிரகலாதன், 'வேதம் ஓதத்தொடங்குமளவில் முதலிற்கூறின [வேதத்தின் தொடக்கமான பிரணவத்தின் சொரூபமாகிய] எல்லோர்க்கும் ஒப்பற்ற தனி நாயகனான கடவுளினது திருப்பெயரே யான் கூறியது; யாவரும் உணர்தற்கும், நினைப்பதற்கும், உபதேசமாகக் கேட்டுக்கொள்வதற்கும், உறுதியாகச் சொல்லிப் பிறவித் துன்பங்களாகிய கடலைக் கடத்தற்கும்§ உரியதான இத்

* "அரச னுவாத்தியான் தாய் தந்தை தம்முன், நிகரில் குரவரிவரிவரைத், தேவரைப்போலத்தொழுதெழுக வென்பதே, யாவருங் கண்ட நெறி" என்ற முறைமை வழுவாமல், ஐம்பெருங்குரவரில் ஒருவனான தந்தையாகிய இரணியனைப் பிரகலாதன் கண்டவளவில தொழுதனனென்க.

§ "அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால், பிறவாழி நீந்த லரிது."—கடவுள்வாழ்த்து, திருக்குறள்.

திருப்பெயரினும் நல்லபெயர் வேறென்றுமில்லை' என்று உரைத்தான். அசுரகுமாரனுய்ப் பிறந்திருந்தும் தேவர்க்கு உரிய ஸாத்விகச்செய்கையையுடையவனுன அந்தப் பிரகலாதன் அப்படி உரைக்கவே, தீயவனுன இரணியன், 'குற்றமற்ற அந்தணனுகிய குரு தகுதியானதையே உரைக்கத்தக்கவன். ஆகிறது ஆகட்டும். தகுதியல்லாததானுல் அதன்மேலே செய்யவேண்டுவதை ஆலோசித்து அறிவோம்' என்றே எண்ணி, மகனை நோக்கி, 'நீ சொன்ன அச்சொல்தான் என்ன சொல்? அச்சொல்லை இன்னதென்று விளக்கமாகச் சொல்லு, சொல்லு' என்று சொன்னுன்.

'அறம் பொருள் இன்பங்களில் விரும்பிய பயன்களையெல்லாம் கொடுப்பதும், அந்தத் திரிவர்க்கத்தின் நிலையைக் கடந்துவிட்டால் அழிவில்லாத பாதுகாப்பையுடைய அபவர்க்கமாகிய மோக்ஷத்தை அடையச்செய்வதும், செந்நிறமுள்ள அக்கினியிலே நெய்ம்முதலியவற்றை மொண்டு சொரியும் ஹோமத்தையுடைய யாகங்களால் அடையப்படும் சுவர்க்கம் முதலிய போகஸ்தானங்களில் அடைவிப்பதும், ஒப்பற்ற எம்பெருமானது திருநாமம்.*

* இங்ஙனம் நாராயணநாமம் பலவாற்ருலும் உறுதிபயந்து உய்விக்கும் மஹிமையை, "குலந்தரும்; செல்வந்தந்திடும்; அடியார்படுதுயராயினவெல்லாம், நிலந்தரஞ்செய்யும்; நீளவிசும்பருளும்; அருளொடு பெருநிலமளிக்கும்; வலந்தரும்; மற்றுந்தந்திடும்; பெற்ற தாயினும் ஆயினசெய்யும்; நலந்தருஞ்சொல்லை நான் கண்டுகொண்டேன் : நாராயணுவென்னும் நாமம்"—என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தாலும் அறிக. கம்பராமாயணநூற்பயனில், "ஆதியரியோ நம நாராயணர் திருக்கதை யறிந்தனுதினம் பரவுவோர், நீதியனுபோகநெறி நின்று, நெடுநாளதினிறந்து சகதண்டமுழுதுக்கு, ஆதிபர்களா யரசுசெய்துளநினைத்தது கிடைத்தருள்பொருத்து, முடிவிற், சோதிவடிவா யழிவில் முத்தி பெறுவரென வுரைத்த, சுருதித்தொகைகளே" என்ற செய்யுளும் இங்கு உணர்தற்பாலது.

அத்திருநாமத்தை இன்னதென்று யான் சொல்லக்கேள்: அது, 'நமோ நாராயணாய' என்ற பெரியதிருமந்திரத்தில் அடங்கியதே. மண்ணுலகம்முதல் எல்லாவுலகங்களுக்கும் மேலுள்ளதாகிய பிரமனது சத்தியலோகமளவும் எல்லாவுலகங்களிலும் பொருந்திய எண்ணில்லாத அசைவின்றி நிற்பனவும் அசைவனவுமான இந்த எல்லாச்சிருஷ்டிப் பொருள்களின் உள்ளே பொருந்தியுள்ள அந்தக்கரணத்திலே உள்ள உணர்வும் எண்ணுகின்றது [செல்லுதற்கு ஏற்ற இடமாவது] இந்தத் திருவெட்டெழுத்தேயாம். அப்படிப்பட்டது வேறு இல்லை. மூன்றுகண்களையுடைய மஹாதேவனும் நான்குமுகங்களையுடைய படைத்தற்கடவுளான பிரமனும்முதலாகச் சாதாரண மனிதர்களளவும், இந்தத் திருமந்திரத்தை மறந்தவர்கள் இறந்தவரேயாவர்.* இதன் மகிமை, பிறர்க்கு விவரித்துப் புகுந்து காட்டுதற்கு அருமையானது. மதவேறுபாடுகளைப்பற்றிய பக்ஷபாதம் இல்லாமல் நடுவுநிலைமைபொருந்தக் காணுந்தன்மையுள்ள ஞானிகள், இதன்மகிமையைத் தகுதியாகக் கண்டுள்ளார்கள். அல்லாத பிறர் இதன்நிலைமையை உணரமாட்டார். பிறப்பென்கிற ஆழ்ந்த கடலினது பிரசித்தமாகத் தொன்றுதொட்டுவருகின்ற வினையாகிய சுழியினின்று உயிர்களை முத்தியாகிய கரையில் ஈடேற்றுகிற அபாயமில்லாத நல்ல மரக்கலமாயுள்ளதும், எல்லோர்க்கும் பெறுதற்கரிய ஆபரணம்போல அழகுசெய்வதும்,

* எல்லாரும் உயிர்த்துவாழ்வது, இம்மந்திரத்தை ஜபித்தலின் பயனாலேயே என்பது, கருத்து. அல்லாமலும், நாராயண மந்திரத்தை ஜபித்திடாதவர் உயிர்த்திருந்தும் பிறவிப்பயன் பெறாமையால், இறந்தவர்போலவே கருதப்படுவர் என்ற கருத்தும் சொல்லலாம்.

இனிமையான மங்கலச்சொல்லாக வுள்ளதும், சிறந்த தவ வொழுக்கத்துக்கு உரிய வேதத்தின் எல்லையாகிய உப நிஷத்துக்களின் சித்தாந்தமான தத்துவப்பொருளுமாகத் தெரியப்பட்ட இத்திருமந்திரத்தைக்காட்டிலும்சிறந்தவை வேறு இல்லை. இத்திருநாமம், உன்னுடைய உயிர்க்கும் என்னுடைய உயிர்க்கும் இந்த உலகத்திலேயுள்ள நிலை பெற்ற எல்லாவுயிர்கட்கும், இதுவே எல்லாநன்மைகளை யும் விளைப்பது என்று செவ்வையாக அறிவிலேபொருந்த ஆலோசித்துச் சொல்லியதாகும்' என்று சொன்னான்,— தத்துவ ஞானிகளிற் பரிசுத்தியுடையவனான பிரகலாதன்.

## நான்காம் அத்தியாயம்.

[இரணியன் கோபித்துக் கழறிய சொற்கள்.]

அப்படி சொன்னவளவிலே, மின்னல் போன்ற ஒளி யை வெளிவீசுகின்ற வேலாயுதத்தையுடையவனும், உலக முழுதும் உயர்வுபெற்றவனுமான இரணியன், கண்களி லே நெருப்புப்பொறி பறக்கப் பெருஞ்சினத்தோடு விழி த்துப் பார்த்தான்; 'யான் உண்டான நாள்முதல் இன் றைநாள்வரையில் இந்தப்பெயரைச் சொன்ன வாயையும், இப்பெயரைச் சிந்தித்த மனத்தையும் என்னுடைய ஒப் பற்ற [இரண்டற்ற] தனிமையான ஆஜ்ஞை சுட்டுவிடும். அங்ஙனம் இருக்க, இந்தப்பெயரை உனக்கு உரைத்தவர் யார்? நீ இதனைக் கற்றுக்கொண்டது யாருடனே? விரை விற் சொல்' என்று சினந்து கூறினான். 'மற்றையனைவர்க் கும் முந்தினவர்களாகிய திரிமூர்த்திகளும் மற்றைய தே

வர்களும் முதலாக மூன்று உலகங்களிலும் இத்தன்மைய ராய் உள்ளவர்களெல்லோரும் எப்பொழுதும் தியானிப் பது எனது இருகழலே; துதித்துச்சொல்வது எனது பெ யரே. ஆதலால், அவர்களெல்லோரும் உனக்கு இந்தப் புதிய பெயரைச் சொல்வதற்கு அஞ்சுவார்கள். ஆகவே, பிள்ளாய்! இதனை நீ வேறு யாரிடத்தில் அறிந்தாய்? என் னோடு, வலிமைகொண்ட கொடியபோரைச் செய்யும்பொ ருட்டுப் பலமுறைஎதிர்த்துவந்து, செய்தபோரில் என்முன் நிற்கமாட்டாமல், ஒலிசெய்கின்ற கொடிய இறகுகளையு டைய தன் வாஹனமாகிய கருடனது வேகத்தால் தப்பி யோடிச்சென்று மறைந்து, ஒலிக்கிற தெளிவான அலைகளை யுடைய பெரியபாற்கடலிலே புகுந்துஒளித்துக்கொண்டு இன்னமும் [இதுவரையிலும்] வெளிவராமல் உறங்கிக்கிட ப்பவனாகிய விஷ்ணுவினது பெயரை, எல்லாநன்மைகளை யுந்தருவதென்று உனக்குச் சொன்னவர் யாரோ? கடலி லுள்ள நுண்ணிய மணல்களை எண்ணி வரையறைசெய்ய முடிந்தாலும் எண்ணி வரையறைசெய்ய முடியாத பெருந் தொகையையுடைய நமதுகுலத்தில் தோன்றிய பெரியோர் பலர், அந்த விஷ்ணு கொல்ல அதனால் அழிந்தார்கள். தன் இனத்துக்குப் பகையாகிய பாம்பின் பெயரை எலி இடைவிடாது ஓதினால், அவ்வெலிக்கு அதனால் வரும் நன்மை யாது? துர்ப்புத்தி யுடையவனே! சொல்' என்று இரணியன் வெகுண்டு கூறி, மற்றும், ஈரேழுலகங்களையும் விழுங்கித் தன்வயிற்றினுள்ளே வைக்க வல்லமையுடைய வனும், ஸந்தேஹத்துக்கு இடமில்லாத [துணிவான] வல் லமையுள்ளவனும், எனது தம்பியுமாகிய இரணியாக்ஷனை, ஒரு பன்றிவடிவாய்க் கோரதந்தத்தாற் குத்தி அவனது இனிய உயிரை உண்ட [கவர்ந்த] விஷ்ணுவினது பெய

ரைச் சொல்வதற்காகவோ உன்னை நான் பிள்ளையாகப் பெற்றது? வாழ்வற்றவனே! நானொருவனே யாவர்க்கும், எவற்றிற்கும், எல்லாம் இருக்குமிடமான உலகங்களெல் லாவற்றிற்கும் முதல்வன். எல்லாப்பொருள்களையும் படைத்தலும், பாதுகாத்தலும், அழித்தலும் என்ற இந்த முத்தொழிலையும் செய்யத்தக்கவனும் நானொருவனே. இந்தக்காரியத்தைப் பிரத்தியக்ஷமாகக் கண்டும், அதனால் என்னைத் தெய்வமாக நிச்சயிப்பதல்லாமல், வேறொரு காரணப்பொருள் உள்ளதென்று அனுமானத்தால் அறி யும் இவ்வறிவை எந்தவேதத்தின் ஸித்தாந்தமென்று நீ தெரிந்தாய்? வேதங்கள் எப்படி சொல்லியுள்ளனவோ அப்படியே அவைசொன்ன விதிமுறை தவறாமல் குற்ற மில்லாத தவம் முதலிய நல்ல தொழில்களைச் செய்தவர் கள் தமது நிலை உயர்வார்கள். அப்படியல்லாமல், தீய தொழிலைக் கருதிச்செய்தவர்கள், தமதுநிலை தாழ்வார்கள். ஆலோசிக்குமிடத்து, இதுவே உண்மை. பெரிய உலகத் திலே இப்படியன்றி, இயற்கையில் முதலாயுள்ள பொரு ளும், கடையாயுள்ள பொருளும் வேறு இல்லை. ஆதிகா லத்திற்செய்த பெருந்தவத்தையுடைமையால் அரியென் றும் அயனென்றும் அரனென்றும் சிறந்தநிலைமையை அடைந்தவர்கள், யான் பின்பு அவர்களினும் அரிய தவத் தைச் செய்து பொய்யில்லாத [மெய்யான] தலைமையை அடைந்ததனால், அந்தத் தம்தமது நிலைமையை இழந்தவர் களாய், 'இனி இதனைச் செய்தலே எளியதாம்' என்று எண்ணி, அவர்களெல்லோரும் எனது பாதுகாவலின்கீழ் அடங்கினார்கள். இச்செயல்கள்* ஊக்கமுள்ள பகைவர் களைக்† குறைவில்லாதவர்களாக [மேம்படுபவர்களாக]ச்

* யாகம் முதலிய நற்செயல்கள். † திருமால் முதலியோர்.

செய்துவிடுமென்று கருதி, அப்படியாகாதபடி, யாகமாகிய நல்வினைவிளைக்குஞ் செயலைத் தவத்துடனே விலக்கி, சிறந்த யாகம் தவம் என்பவற்றின் தன்மையை அறியலாகாதபடி சாஸ்திரவிசாரஞ்செய்வதும் கூடாதென்று முழுதையும் தடுத்துவிட்டேன். ஆகவே, அந்தத் திரிமூர்த்திகள், தங்களளவிலே என்னை வாழ்த்தித் துதியாமல் உபேக்ஷித்து வேறு எவ்விடத்துத் தப்பிப்போய் வாழ்வார்கள்? இளமைக்கு உரிய பேதைமையையுடைய பிள்ளாய்! நீ பிழைசெய்ததை இப்பொழுது பொறுத்தேன். மீண்டும் இத்தன்மையனவான, யாதொருபயனும் யாதோர் பொருத்தமுமில்லாத, நமது பகைவரைப்பற்றிய, அயலாகிய வார்த்தைகளைச் சொல்லாதே. குருவாகிய முனிவன் யாது சொன்னானோ, அந்தஅந்த வார்த்தைகளை நன்மை விளைப்பவையென்று கருதி வேதம் ஓதுவாய். போ' என்று உரைத்தனன்.

## ஐந்தாம் அத்தியாயம்.

[பிரகலாதன் இரணியனுக்குத் தத்துவப் பொருள்கள் பலவற்றை வெளியிடல்.]

அதுகேட்ட பிரகலாதன், இரணியனைநோக்கி, 'பரிமளமுள்ள பூமாலையைத் தரித்தவனே! நான் உனக்கு உணர்த்துவதற்கு உரிய உரை உள்ளது. அதனை எத்தன்மையானதென்று உணர்ந்து கொள்வாயானால், அது, வேதங்களுக்கும் யாகங்களுக்கும் முடிவெல்லையாகவுள்

ளது;* அல்லாமலும், எல்லோரும் கற்கும் கல்வியாகிய பாலுக்குப் பிரையாகவுமுள்ளது' என்று எடுத்துச்சொன்ஞன். மற்றும், "விதையில்லாமல் விளைவதொன்று இல்லையன்றே! ‡ வேந்தனே! நீ கொண்டுள்ள பித்தை ஒழித்து உண்மையை அறியத்தொடங்குவாயாஞல், தத்துவப்பொருளின் வரையறையை உனக்கு வெளியிட்டுக் கூறுவேன். அவ்விஷயம் ஒன்றும் விடாமல் கவனித்து அறியத்தக்கது என்று எண்ணி, கையினிடத்ததாகப்பொருந்திய நெல்லிப் பழத்தைப்போல, அதனை உள்ளபடி விளங்க உணர்வாய். ஒப்பற்ற முழுமுதற்கடவுள், தன் திருமேனியினின்று எல்லாவுலகங்களையும் உண்டாக்கி, அவையெல்லாவற்றையும் தன் திருவயிற்றினுள்ளே அடக்கிவைத்து, தான் அவையெல்லாவற்றினிடத்தும் தங்குவான்; ஆதியும் அந்தமும் இல்லாதவன்; நிலை மாறுபடான். அப்பெருமானது பழமையான நிலைமை, இத்தன்மையானதென்று ஒருவரால் துணிந்து சொல்லிக்கூடியதோ? சித் § என்று அறிதற்கு அரிய வேதங்களின் முடிவில் [வேதாந்தமாகிய உபநிஷத்துக்களில்] தேறிய பரதத்துவமாவான் அக்கடவுள். அத்தன்மையை, தமது உண்மைநிலைமையைத் தாம் அறிந்த ஞானிகளே அறியவல்லவர்கள். அன்றி, வெவ்

---

* வேதாந்தங்களாகிய உபநிஷத்துக்களிற் கூறப்படுவதென்றும், வேதங்களுக்கு எட்டாமல் அப்பால் உள்ளதென்றும், யாகங்கள் சென்று சேரும் இடமாக வுள்ளதென்றும் கருத்து.

‡ இது, மூலகாரணப் பொருளாகிய கடவுளொருவரில்லாமல் உலகத்தோற்றம் உண்டாகாது என்ற உபமேயக்கருத்தை விளக்கும்.

§ சித்—ஞானஸ்வரூபம்.

வேறுவகையாக மாறுபட அறிகிற விபரீத ஞானிகளும் அவ்வுண்மையை அறியவல்லார்களோ? ஆகவே, அம்மய க்கவறிவுடையோர் முத்தியையும் பெறூர். அவ்வெம்பி ரானது தன்மையின் வரையறையை யான் அளவிட்டுச் சொல்லுதல் அருமையானது. ஏனெனில்,—அத்தன் மைகள் அறிவுக்கு எட்டாமல் அப்பாலுள்ளன. ஐயா! உபநிஷத்துக்கள் சொல்லுகிற சொற்களாலும், அவற் றின்பொருள்களாலும் சொல்லவொண்ணுதவனை அப் பெருமானுடைய, பிறர் காணவொண்ணுத களவை [மா யத்தன்மையை,] தத்துவஞானமில்லாதவர் எவர் அறிவர்? ஸ்வர்க்கம், பூமி, பாதாளம் என்ற மூன்றுவகை உலகங் களின் சொரூபமாய், ஸத்வகுணம், ரஜோகுணம், தமோ குணம் என்ற முக்குணங்களின் சொரூபமாய், பிரபஞ்சத் திலுள்ள எல்லா வுயர்திணைப்பொருள்களும், எல்லாவஃ றிணைப்பொருள்களும் ஆகியவற்றின் வடிவமாகி, மற்றும் இவ்வாறு எண்ணிக்கையிலலாமல் வெவ்வேறு பலபேதப் பட்டும் நீங்குதலில்லாத தனது தனிநிலைமையையுடைய இரண்டற்றவனை முதற்கடவுள் செய்தருளுகிற தொழில், தேவர்களும் முனிவர்களும் அறியக்குறைவுபடுமோ? மிக விரிந்துள்ள எல்லாப்பொருள்களையும் வெவ்வேருகப் பகுத்துப்பார்க்கின்றவையாகிய* சாங்கியநெறியென்றும்

* தந்மாத்திரைகள் ஐந்து, பூதங்கள் ஐந்து, ஞானேந்திரி யங்கள் ஐந்து, கருமேந்திரியங்கள் ஐந்து, புருஷன், மஹத், அஹங்காரம், மனம், மூலப்பிரகிருதி என்னும் இருபத்தைந்து தத்துவங்களின் தன்மையை உள்ளபடி விவரித்துக்கூறுதல், சாங் கியமார்க்கம். உலகத்தைப் பகவானுடைய சொரூபமாக நினை த்து, இயமம், நியமம், ஆஸநம், பிராணுயாமம், பிரத்யாஹாரம், தியானம், தாரணை, ஸமாதி என்ற எட்டு அங்கங்களும் தவருத படி நின்று மனத்தை மற்றை விஷயங்களினின்று மீட்டுப் பரப் பிரமத்தினிடத்தில் நிறுத்துதல், யோகமார்க்கம். இவற்றின் பரப்பெல்லாம் இங்கு விரிப்பின் பெருகும். அவற்றை அந்தந்த நூல்களுட் கண்டு கொள்க.

யோகநெறியென்றும் இரண்டுவகை வழிகள் உள்ளன; அவற்றை அவ்வாறு உள்ளபடி உணர்ந்தவர்களுக்கே யல்லாமல், மற்றவர்க்கு, அந்த முதற்கடவுளினது எல்லா வற்றினும் மேலான சிறந்தநிலைமை உணரக்கூடியதோ? யாகம் முதலிய கருமங்களும், அந்தக் கருமங்களின் பலனும், அந்தப் பயன்களைக் கொடுத்தருளுகிற முதற்கடவுளும், அப்பயன்களைப் பெறுகிற ஜீவனும் அவ்வெம்பெருமானது சொரூபமே. அவனுடைய அருமையும் பெருமையும் எவரேனும் அறிவராயின், அவர், இம்மை மறுமை யென்று சொல்லப்படும் கடல்களினின்று முத்தியாகிய கரையில் ஏறி உய்வார்கள். மந்திரமும் சிறந்த தவமும் என்னும் இயல்புடையவையும், அவற்றால் அடையக்கூடிய பயன்களும், இவற்றுக்கு உரிமையாய்க் கிரமப்படி சொல்லப்படுகிற அழிவில்லாத தெய்வமும் என்பவையாய், நால்வகைவேதங்களின் விதிப்படி அழிவில்லாத யாகங்களிலே தேவர்களை உத்தேசித்து இடப்படுகிற ஹவிசினுடைய சொரூபமுமாவான், அப்பரமன். முதலிற் செய்யப்பட்டுகின்ற கருமங்கட்கு, அவ்வெம்பெருமான் முந்திப் பயனைக் கொடுத்தருள்வன். பின்பு செய்யப்பட்டுகின்ற கருமங்கட்கு அப்பெருமான் பிந்திப் பயனைக் கொடுத்தருள்வன். இப்படியல்லாமல், வேண்டியபடி தனது பயன்தானே முன்பின்னாக முறை மாறுபடப்பெறுவது ஒருவினையும் இல்லை * வியக்கத்தக்க அத்தன்மையை, அப்பிரானது ஸங்கல்பமாகிய

---

* இங்ஙனம் ஒருயிர் செய்த இருவினையின்பயன் அவ்வுயிரையே மீண்டுஞ்சென்று சேரும்போது, முன்செய்த முறைமை தவறுதென்ற நியமத்தை. "சிறுகா; பெருகா; முறைபிறழ்ந்து வாரா; உறுகாலத் தூற்றுகா; ஆமிடத்தே யாகும்; சிறுகாலைப் பட்ட பொறியும்; அதனால் இறுகாலத் தென்னை பரிவு?" என்ற நாலடியாரினாலும் அறிக. இத்தன்மையை இங்கே பிரகலாதன் எடுத்துச்கூறியது—இரணியனை நோக்கி, 'நீ முற்பிறப்பிற்செய்த நல்வினையின் பயனால் இப்போது பெருவாழ்வு படைத்துள்ளாய்; அந்நல்வினையின்பயன் மாறுமளவில் தீங்குறுவாய்' என்று குறிப்பித்தவாறும்.

மாயையினால் பலரும் அறியமாட்டார். உயிர்கள் செய்திட்டவையாகிய நல்வினை தீவினையென்னப்பட்ட இருவகை வினைகளுள் ஒவ்வொரு வினை ஒவ்வொருபயனையேயன்றி அதற்குமேல் தரக்கூடியதோ? [அன்று.] எல்லாவற்றையும் படைத்து அளிக்கிற மேலான அக்கடவுளின் அருளோ அப்படியல்லாமல், நினைத்தநினைத்த பயன்களையெல்லாம் அளிக்கின்றது. அவ்வெம்பெருமானது மஹிமையை உணர்த்துவதற்கு இதனினும் வேறுஸாக்ஷி இனி வேண்டுமோ? ஓமங்களை விதிமுறைதவறாது செய்பவர்கள் அவ்வோமத்தின் முடிவில் ஒரு ஆகுதியை, ஆதிசேஷனென்னும் அரவாகிய அணையையுடைய குற்றமற்ற கடவுளான ஸ்ரீமஹாவிஷ்ணுவுக்கு அளிப்பார்கள்.* அந்த ஆகுதி, ஸகல சராசரப் பொருள்களினிடத்தும் சேர்ந்திடும்† என்பது துதித்தற்கு அரிய [அளவிறந்த சிறப்பையுடைய] வேதத்திற் கூறப்பட்ட பொருளாம். அன்றியும், அதன்பயனும் அத்தன்மையதே. [உண்மையியல்பை விளக்கியதே.] அந்தப் பரப்ரஹ்மம், மூலப்பிரகிருதியினின்று காரியரூபமான பிரபஞ்சத்தை யுண்டாக்கியது. மேலோர் நூல்களிற்சொன்ன வகுப்புக்களில் அடங்

* ஹோமத்தின் முடிவில் மிச்சமாயுள்ள நெய்ம்முதலிய ஹோமப்பொருள் முழுதையும், 'ஓம் ஸ்ரீ விஷ்ணவே ஸ்வாஹா' என்று சொல்லி ஒரேஆஹுதியாய் ஹோமஞ்செய்கிற தன்மை இங்குக் கூறப்பட்டது.

† அதாவது-சராசரப்பொருள்களெல்லாவற்றிற்கும் அது திருப்தியைச் செய்யும்.

பிரமன் சிவன் இந்திரன் வருணன் முதலிய தேவர்கள் பற்பலரை உத்தேசித்துச் செய்யும் ஹோமங்களின்முடிவில் அத்தேவர்கட்கெல்லாம் தலைவனான திருமாலைக்குறித்து ஓர் ஆஹுதி செய்தலும், அந்த ஆஹுதி ஸகல சராசரங்களுக்கும் திருப்திதருதலும் ஆகிய தன்மையை நோக்கி, அவ்வெம்பெருமானது உண்மையை அறியலாம் என்றவாறு. விதிமுறைப்படி யாகஞ்செய்பவர் முடிவில் ஓர் ஆஹுதிமூலமாய் அந்த யாகத்தைத் திருமாலுக்கு ஸமர்ப்பிப்பராயின், அது அவ்வெம்பிரானுக்கு உரியதாகி, அவனுக்குச் சரீரமாகவுள்ள சராசரங்களிலெல்லாம் சார்ந்திடுமென்று பொருள் காண்க.

கியவையான பொருள்களெல்லாம் அந்த மூலப்பிரகிருதி
தந்தவிகாரத்தாலுண்டான கூட்டங்களே. * இன்னம் அந்

---

* மேலோர் நூல்களிற் சொன்ன வகுப்புக்களில் அடங்கிய
வையான பொருள்களெல்லாம்—பஞ்ச தந்மாத்திரைகளும் பஞ்
சஞானேந்திரியங்களும், பஞ்ச கர்மேந்திரியங்களும், பஞ்சபூதங்
களும், மனம் அஹங்காரம் மஹத் என்னும் மூன்றுமாக நூல்
களில் ஆன்றோரால் வகுத்துச்சொல்லப்பட்ட தத்துவங்களின்
மயமான ப்ரபஞ்ச முழுதும் என்றபடி.

ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுகள் மூன்றோடுங்கூடி, கருமத்தொ
டர்புடைய சேதனரது ஞான ஆனந்தங்களை மறைப்பதாய், திரி
புணர்ச்சியைத் தருவதாய், தனக்கு ஒருகாரணம் உத்பத்தி விநா
சம் இன்மையால் நித்தியமாய், அளவில்லாததாய், ஸர்வேச்வர
னுடைய ஜகத்ஸ்ருஷ்டி முதலிய விளையாட்டுக்குப் பிரதானமான
உபகரணமாய், அதனாலேயே ஜகத்துக்குக் காரணமாய், மஹத்
முதலிய விகாரங்களை யுண்டாக்கக்கூடியதாய், பிரதானம் அவித்
யை மாயை என்ற பெயர்களையுடையதாய், அசைவில்லாததாய்,
பகவானேயல்லாது வேறொரு ஆதாரமில்லாததாயிருக்கும்அசித்
விசேஷமாகிய ஒன்று, பிரக்ருதி யென்று சொல்லப்படும். ஸ்ரு
ஷ்டிகாரியத்தில் விருப்பங்கொண்ட பரமாத்மாவினது இச்சை
யாகிய ஸங்கல்பத்தாற் சலனப்பட்ட மூலப்பிரகிருதியினின்று
மஹத்தத்துவமும், அதினின்று அஹங்காரமும், அதினின்று
சப்தமும், சப்தத்தினின்று ஆகாசமும், ஆகாசத்தினின்று ஸ்பர்ச
மும், ஸ்பர்சத்தினின்று வாயுவும் வாயுவினின்று ரூபமும், ரூபத்
தினின்று அக்கினியும், அக்கினியினின்று ரஸமும், ரஸத்தினி
ன்று ஜலமும், ஜலத்தினின்று கந்தமும், கந்தத்தினின்று பூமி
யும் உண்டாயின வென்றும், சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தமென்
னும் பஞ்ச தந்மாத்திரைகளும், பூமி ஜலம் அக்கினி வாயு ஆகா
சம் என்னும் பஞ்சபூதங்களும், ஸாத்விகம் ராஜஸம் தாமஸம்
என மூவகைப்பட்ட அஹங்காரத்தில் தாமஸ அஹங்காரத்தின்
காரியமென்றும், மனமும் மெய் வாய் கண் மூக்குச் செவியென்
னும் பஞ்ச ஞானேந்திரியங்களும் வாக் பாணி பாத பாயுர் உபத்
தம் என்னும் பஞ்ச கர்மேந்திரியங்களும் ஸாத்விக அஹங்காரத்
தில் தோன்றியவையென்றும் அறிக. ராஜஸ அஹங்காரம்,
ஸாத்துவிக தாமஸ அஹங்காரங்களிரண்டிற்கும் ஸஹாயமாயிரு
க்கும் இவற்றின் விவரத்தை, தத்வத்ரயம் ஸ்ரீவிஷ்ணுபுராணம்
முதலிய நூல்களுட் கண்டுகொள்க.

தப்பரப்ரஹ்மம், கருமஸம்பந்தத்தால் இந்தப் பிரபஞ்சத்தினுள் வருதல் [பிறத்தல்] இல்லாதது. அது தத்துவ ஞானமில்லாதவருடைய உணர்விற்கு விஷயமாகுமோ? [ஆகாது.] அளவற்ற வகைகளையுடைய பெரிய ஒப்பற்ற பிரமன் முதலிய உயிர்களெல்லாம், சித்திரம்போன்ற மிக்க அழகு அமைந்த நாளத்தோடு கூடியதும், சிறந்த ஒப்பற்ற பல இதழ்களையுடையதும், நல்ல மணத்துக்கு இருப்பிடமுமான அத்திருமாலினது நாபித்தாமரைமலரினது துதிக்கவொண்ணாத மிக்க சிறப்பையுடைய கொட்டையினது ஒருபகுதியிலே தங்கும். தன்னைக்குறித்து எண்ணுவோருடைய எண்ணத்துக்கு எட்டாமற் கடந்துள்ளவனும், ஒப்பற்றவனும், குணஞ் செயல்களினால் ஒரு வரையறைப்படாதவனும், அரியவனுமான அத்திருமால், காண்பவர்களுடைய கண்களிலும் மறைந்துள்ளான்; ஞானசொரூபியாயிருத்தலால், தனது சொரூபத்தைத் தரிசித்துப் பிறர்க்கு எடுத்துக்காட்டும் ஞானிகளுடைய மனத்திலே நிறைந்திருப்பான்; மண்ணிலும், வானத்திலும், நீர் நெருப்பு காற்று என்னும் மற்றை மூன்றுபூதங்களிலும் அந்தர்யாமியாய் மறைந்துள்ளான். மற்றும் அத்திருமால், பிராணிகளுடைய சிந்தையிலும் சொல்லிலும் செய்கையிலும் சேர்ந்திருக்கின்றான்; அவற்றின் ஐம்பொறிகளிலும் பொருந்தியுள்ளான்; அவனுடைய நிலைமையை எண்ணுமிடத்து, வேதங்களின் முதலிற் கூறப்படுகிற பழமையான ஓரெழுத்தாகிய 'ஓம்' என்னும் பிரணவத்தின்* வடிவமாய் நின்று, அந்தப் பிரணவமந்திரத்துள்ள அகாரம், உகாரம், மகாரம் என்னும் ஓரெழுத்துச்

* பிரணவ மஹாமந்திரத்தின் பொருள் - அகாரவாச்யனான திருமாலுக்கே மகார வாச்யனான ஜீவன் அடிமை என்பது.

சொற்கள் மூன்றும் அவற்றின் சேர்க்கையில் அமைந்த இரண்டு ஸந்தியுமாகிப் பொருளினாற் செழித்த இயல்பை யுடையவன். காமமும் வெகுளியும் முதலியவையாகக் கருதப்பட்ட தீக்குணங்களையும், அவற்றின் வலிமையை யும் தன்னைச்சரணமடைந்தவர்க்குத் தீர்க்கின்ற திருவருட் செயலை யுடையவனான அத்திருமாலினது திருநாமங்க ளின் மகிமையும், அப்பெருமானுடைய பிறவுயிர்களுக் குத் துன்பந்தராத மிக்க பாதுகாத்தற்றொழிலும் எவரா லேனும் சொல்லிமுடிக்கவல்ல தன்மையுடையவையோ? பெரிய ஆலமரமும் அம்மரம் உள்ளடங்கப்பெற்ற அதன் சிறிய விதையும்போன்று தனது சூக்ஷ்மமான உருவத் தில்அடங்கிய மிக்கவிபவத்தையுடைய புருஷோத்தமனான அத்திருமால், ஒருதொழிலைச் செய்தற்குஉரிய காலமும், அத்தொழிலைச் செய்தற்கு ஏற்ற கருவியும், அத்தொழி லைச் செய்தற்குத் தக்க இடமுமாகி, அத்தொழிலினால் முடிவில் அமைந்த பயனுமாகி, அப்பயனை அநுபவிக்கிற ஜீவனுமாகி, நல்லொழுக்கங்களும், அவ்வொழுக்கங்கள் இம்மை மறுமை வீடுகளில் உண்டாக்குகிற ஐசுவரியமு மாயுள்ளான். [எல்லாம் எம்பெருமானது சொரூபம்.] ஒப்பற்ற தெளிவான இசையையுடைய யாழினின்று எழு கின்ற, உள்ளூற உணர்வினால் இனியதென்று அறியப்படு கிற ஓசைபோல* இனிதாக விளங்குகின்ற தன்மையையு டையவனான அத்திருமால், எல்லாப்பொருள்களிலும்

---

* "முன் நல் யாழ்பயில் நூல் நரம்பின் முதிர் சுவையே" என்றும், "நடங்குகேள்வி யிசையென்கோ," என்றும், "பண்ணி னைப் பண்ணில் நின்றதோர் பான்மையை" என்றும் ஆழ்வார் கள் அருளிச்செய்தபடி எம்பெருமானது இனிமைக்கு இசை ஏற்ற உவமையாதல் காண்க.

உள்ளிலும் வெளியிலும் உள்ளான்; ஆனாலும், அவற்றின் குணதோஷங்களில் யாதொன்றும் தன்னிடம் தொடரப் பெறான். மற்றும், அவன், விலக்கக்கூடாத சிறந்த பிரமாணமென்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிற வேதங்களும் உள்ளபடி உணரமாட்டாது மயங்கும்படியான தன்மையையுடையவன். ஏகாக்ஷரமான 'ஓம்' என்னும் பிரணவமஹாமந்திரத்தில் அ, உ, ம் என்னும் ஓரெழுத்துப்பதம் மூன்றினுள் பிரதானமான அகரத்தின் பொருளாகிய அத்திருமால், ஸ்வயம்பிரகாசமான ஞானத்துக்கும் ஒரு ஞானமாகவுள்ளான்; இடம்பரவிய மேல், கீழ், நடு என்னும் மூவகையுலகங்களையும் வியாபித்து எங்கும் பொருந்துதலால், புகையும் நெருப்பும் போல ஒருங்கே பலவிடங்களிற் பரவுந் தன்மையையுடையான். மலர்களை ஒருசேரத் தொடுத்ததான மாலையிலுள்ள அம்மலர்களை யொத்த [ஒன்றுக்கு ஒன்று நெருக்கமுடையவையாய் மிகப்பலவான] மதங்கட்கு உரிய விவாதங்களைச் செய்பவர்களுடைய குடைதலின்* லுண்டான மாறுபாடேயல்லாமல், அம்மாறுபாட்டிற்கு இடங்கொடாமல் ஏகபாவனையாய்ச் சொல்லுகின்றவர் எல்லோர்க்கும், கடலும் அதிற் காணப்படும் அலையும் போலத் தன்னில் வேறுபாடு ஒன்றுமில்லாதவன், அப்பெருமான்.‡ இப்படிப்பட்ட

---

* குடைதல் என்றது—இங்கு, பலவேறுவகைப்பட்ட மதங்களிலுள்ளார் தம்தமது கொள்கைக்கு இணங்க வேதம் முதலிய பிரமாணங்களில் நலிந்து பொருள் கூறுதலை.

‡ சமுத்திரத்தின் அலைகள் அநேகமாக எழுந்து காணப்படினும், அவையெல்லாம் அச்சமுத்திரத்தில் அடங்குதல்போல, அச்சமயவாதிகள் சொல்லும்பொருள்களெல்லாம் எம்பெருமான் பக்கலிலே அடங்குமென்க.

ஒப்பற்ற தன்மையையுடையவனுன ஸ்ரீமந்நாராயணனை நீ இகழ்ந்து, பெற்றுள்ளநல்ல மிக்க செல்வங்களும் ஆயுளும் பெயரோடு அழிய, நிலைபெற்ற உயிரை இழக்கின்றனையே! என்றுஇரங்கிக் கீழ்ச்சொன்ன அப்பெருமானுடைய திருநாமத்தைத்துதித்து அவனை வாழ்த்தினேன்' என்று பிரகலாதன் விளக்கமாக இரணியனுக்குக் கூறினுன்.

## ஆறும் அத்தியாயம்.

[இது, இரணியன் கோபித்துக் கட்டளையிட்டபடி அவனது பரிஜனங்கள் பிரகலாதனைப் பலவாறு வருத்துதலையும், பிரகலாதன் பகவந்நாம மகிமையால் அத்துயரத்தினின்று மீளுதலையுங் கூறும்.]

எதிரிலே நின்றவனுன பிரகலாதன் இவ்வார்த்தைகளைச் சொன்னவுடனே, எல்லாவுலகங்களும் அஞ்சும்படி முதிர்கிற கொடுங்கோபம், தனக்குத் தக்க சொற்களையும் உடன் கூட்டிக்கொண்டு, பழமையான பாற்கடலினின்று தோன்றிய ஹாலாஹலமெனனும் விஷத்தைப்போல, இரணியனுக்கு மிகுதியாய்ப் பொங்கியெழுந்தது. அதன் உக்கிரத்தால், சூரியன்முதலிய சோதிகளும், மேலுலகமும் சுழல்வனவாயின; பெரிய பூமியினிடங்கள் அசையலாயின. அவ்விரணியனுடைய* கண்கள் இரத்தத்தைச் சொரிந்தன; நெருப்புக்குக் கொடியென்னத்தக்க புகைகள் அக்கண்களினின்று மேலேயெழுந்தன; கொடிய அக்கினி, அக்கண்களினுற் சொரியப்பட்டது.

---

* இரணிய னென்பது—பொன்னிற முடையோனென்னும் பொருளது.

"இனி, இதனைக்காட்டிலும் வேறாக என்னோடு விளைக்கும் பகைமை மற்றொன்றை வேண்டுவேனல்லேன். [எனக்கு இதுவே மிக்க பெரும்பகை.] வஞ்சனையாக என் குடலிலே ஊறியிருந்து இப்படிப்பட்ட பகையொன்று உண்டாயிற்று. இன்னமும் இப்பிள்ளையின் எண்ணத்தை அறியவேண்டுவது இல்லை. இவனைக் கொல்லுகிற விஷயத்தில் இன்னமும் என்குறிப்பை நீங்கள் ஆராய்ந்து அறியவேண்டுவதில்லை.† அழிவில்லாத எனது பழைய பகைவனை திருமாலுக்கு அன்புமிக்க அடியவன் யான் என்று சொல்லுகின்றான். ஆதலால், இவனைக் கொன்றிடுங்கள்" என்று இரணியன் தனது பரிஜனங்களை நோக்கிக் கூறினான்.

என்று சொன்னவுடனே, கொல்லுதற் றொழிலில் யமனினும் வல்லவரான அசுரர்கள் பலர் வந்து பிரகலாதனைப் பிடித்துக்கொண்டார்கள். கோபாக்கினி சொலிக்கின்ற அஞ்சாத பார்வையுடையவர்களாகிய அவ்வசுரர்கள், சினத்தையுடைய ஒரு யானைக்குட்டியை வந்து சூழ்ந்த வலிய ஆண்சிங்கங்களின் கூட்டம்போல, அந்தப் பிரகலாதனைச் சூழ்ந்துகொண்டு, மலைபோல உயர்ந்துள்ள இரத்தினமயமான அரண்மனைவாயிலின் பெருவெளியிலே அவனைக் கொண்டுபோய்ச் சேர்த்து, ஒன்றுபோலுள்ள ஆயிரக்கணக்கான மழுக்களையும், கூரிய வாளாயுதங்களையும், மற்றைப் படைகளையும் உயரவெடுத்து அவன் மேல் பலமாக வீசினார்கள்; 'உயிருடனே இவனுடலைத்

† 'கோபம்மிக்க நிலையிலே இவன்சொன்ன வார்த்தையைக் கொண்டு இவன்பிள்ளையை யாம் கொல்லலாமோ?' என்று நீங்கள் சங்கிக்கவேண்டா என்றபடி.

தின்றுவிடுவோம்' என்று சொல்லுகின்றவர்களாய், இடி போலப் பயங்கரமாகக் கொக்கரித்து அதட்டினார்கள். நல்வினையென்கிற தகுதியில்லாத பாபிகளாகிய அவ்வசுரர்கள், ஏ யென்று ஒருமுறை சொல்லுங் காலவளவிற்குள் [வெகுவிரைவாக] உலகத்தில் உள்ள உயிர்களிடத்திற் பெற்றதாயைக்காட்டிலும் அன்புடையவனான அந்தப் பிரகலாதனை வந்துசூழ்ந்து, அவன்மேல் வீசியெறிந்தவையான மழுவும் கொல்லுதலில்வல்ல வாளும் முதலிய அநேக ஆயுதங்களும், அப்படி எறியுந்தோறும், பரிசுத்த மூர்த்தியானஎம்பெருமானைத் துணையாகக்கொண்டஅந்த ஒப்பற்றஞானியை, வேண்டாதார் வாயினால்வைதவசைச் சொற்களைப் போன்றன. [யாதோர் ஊறும் செய்யமாட்டாவாயின.] எறியப்பட்டனவும், எய்யப்பட்டனவும், தாக்குந் தன்மையனவும், குத்துந்தன்மையனவும், பிளக்குந்தன்மையனவும் ஆகிய ஆயுதங்களெல்லாம், அவனுடம்பிலே பட்டவளவில், தாம் முறிந்து நுண்ணிய பொடியாய் ஒழிந்து, கோபமில்லாத அந்தப் பிரகலாதனுடைய உடம்புமுழுவதிலும் தினவுசொறிதல்போன்ற தன்மையையும் செய்யாவாயின. அப்படியாக, பரிசுத்தகுண முடையவனான அந்தப் பிரகலாதன், துணிவான ஒருபொருளாகத் தன்னால் அறியப்பட்ட தலைவனான திருமாலினது சிவந்த திருவடிகளை மறந்தானில்லை; அப்பெருமானுடைய திருநாமத்தையும் உச்சரியாது சோரவிட்டானில்லை.

பின்பு, அவ்வசுரர்கள் இரணியனிடஞ் சென்று, 'வலிமையை யுடையவனே! எங்களிடம் உள்ள சிறந்த பெரிய ஆயுதங்களெல்லாம் பொடியாய்விட்டன. அவைகளால் உன் பிள்ளையின் உடம்புக்குச் சிறிது தீங்கும் உண்டாகவில்லை. இனி, நாங்கள் செய்யவேண்டிய வேறு

செயல் யாதோ ?' என்று சொல்ல, அதுகேட்ட இரணியன், 'மாயையில் வல்ல மனமுடையவனாதலால், அவன், ஆயுதங்களை அம்மாயையின் வலிமைகொண்டு கட்டிவிட்டான் போலும் * இனி, விரைவாக நெருப்பை மூட்டி நிறைத்து, அதில்அவனைத் தள்ளுங்கள்' என்றுசொன்னான்.

அவ்வளவில், அவ்வசுரவீரர்களும் நெருப்பு மூட்டி, அவனைக் கொல்லவேண்டுமென்னும் அத்தொழிலிலே முயன்றுநின்றார்கள்:—அவ்வசுரர்கள் ஒரு பெருங்குழியிலே விறகுகளை மலைபோல உயரமாக அடுக்கி, குடங்களிற் கொண்டுவந்த எண்ணெயையும் வெண்ணெயையும் நெய்யையையும் சொரிந்தார்கள். அப்படி செய்த முயற்சியால், நெருப்பு, வானத்தையளாவ எழுந்து சொலித்தது. இரணியன் செய்த உபத்திரவங்களால் அழுதுகொண்டு நின்றவரான தேவர்கள் இதனைக்கண்டு இரக்கம் மிகும்படி, ஐயன் பிரகலாதனை அசுரர்கள் அந்நெருப்பிற் போகட்டார்கள். அப்பொழுது, அந்தப்பிரகலாதன், 'ஹரி' என்று திருமாலின் திருநாமத்தை உச்சரித்து, அப்பெருமானுடைய உபயதிருவடியை வணங்கி நின்றான். அந்தப் பிரபாவத்தால் சுடுந்தன்மை பொருந்திய தீயும் குளிர்ச்சியடைந்துவிட்டது. விஷம்போலக் கொடியவரான ராக்ஷஸர்கள், இராவணனது கட்டளையால் தங்கள்கைகளால் அநுமானுடைய வாலில் துணிசுற்றி அதன்மேல் நெய்யை ஊற்றி விளங்குகிற நெருப்பையும் பற்றவைத்ததனால், பிரளய காலாக்கினிபோன்ற கொடியஅக்கினி அதில் மூண்டு

*கட்டிவிடுதல்— யாதொரு தீங்கையும் செய்யவொட்டாது தடுத்தல். இதனை, 'பாம்பின்வாயைக் கட்டினான்'என்றாற்போலக் கொள்க.

எழுந்த ஸமயத்தில், பதிவிரதாதருமத்தையுடைய சீதாபி ராட்டி சொன்ன, ஒழுக்கத்தை விளக்கும் நல்லவார்த்தை யினுற் குளிர்ச்சி மிகுதியாக உண்டானதனுல், அந்த அநு மானுடைய வால் குளிர்ச்சியடைந்ததுபோல, நிறமுள்ள இரத்தினம்போன்ற அந்தப் பிரகலாதனது அருமைத்திரு மேனி, பகவந்நாம உச்சாரண மகிமையால் எலும்பளவும் குளிர்ச்சியடைந்தது.

'சுழன்று எரிகின்ற நெருப்புமிக்க பெருங்குழியிற் போகட்டபொழுதும், சுவாலையையுடைய அந்த அக்கினி உன்பிள்ளையைச்சுட்டதில்லை. இனி, மற்றும் நாங்கள்செய் யத்தக்கது யாது?' என்று வலிய கொடிய அசுரர்கள் இர ணியனிடஞ்சென்று சொன்னுர்கள். அதுகேட்டுக் கோ பாக்கினி பொங்கியெழுகின்ற அஞ்சாத பார்வையையு டையவனுன இரணியன், 'இப்படி என் கட்டளைக்கு இணங்கிநடவாத அக்கினிதேவனையுங் கட்டிக் கொடிய சிறையில் வைத்திடுங்கள். கள்வனுன அந்தப் பிரகலாத னைப் பிடுங்கித்தின்னும்படி, அநந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தக்ஷகன், பதுமன், மகாபதுமன், வாசுகி என்னும் அஷ்டமஹாநாகங்களையும் அவன்மேல் ஏவிவிடுங்கள்' என்று கட்டளையிட்டான்.

அநந்தன் முதலான அஷ்டமஹாநாகங்கள், அவ்விர ணியன் தம்மைப்பற்றி நினைத்தமாத்திரத்தில், அவனது கட்டளை யாதோ என்று எண்ணி அங்கு வந்து சேர்ந்து, விரைவாக விஷாக்கினி வெளிப்படுந் தன்மையுள்ள திறந்த பெரிய தம் வாய்களால், கருத்தோடு அழகியதாகச் செய் யப்பட்ட சித்திரப்பாவைபைப்போன்ற மிக்க அழகுள்ள உடம்பையுடைய அந்தப் பிரகலாதன்மேல் வாள்போற்

கூர்மையான கொடிய தம் விஷப்பற்கள் அழுந்த, கோபம் தம்மை விஞ்சி அதிகப்பட, ஊன்றிக்கடித்தன. அப்படி கடிக்கவும், ஸ்ரீமந்நாராயணனுடைய திருப்பெயரை மறவாதவனான அந்தப் பிரகலாதாழ்வான், அக்காரணத்தால் சிறிதும் வருந்தினானில்லை. அருகில் நின்ற பிராணிகளெல்லாம் அச்சத்தால் திறந்த தம்தம் வாயினின்று, மேகம் மழைபொழிவதுபோலப் புதிய இரத்தநீரைக் கக்கவும், பாம்புகளுக்கு வைரியாகிய உக்கிரமான சிறகுகளையுடைய கருடனும் நடுக்கமடையவும், எட்டுப்பாம்பும் பிரகலாதனைக் கடித்துப்பிடுங்கியபொழுது, சிவந்த மேகத்தினுள்ளே சிறிய பிறைச்சந்திரன் நுழைந்தாற்போன்ற செய்கையையுடையவையான காளி, காளாத்திரி, யமன், யமதூதியென்று பெயர் கூறப்படும் பற்களின் கூட்டங்கள், வலிமையொழிந்து ஒடிந்து உதிர்ந்தன. அப்படி ஊன்றிய பற்களின் பெரிய துளைகளிலிருந்தெல்லாம், விஷம்பாயாமல் அமிருதத்துளிகள் ஊறி ஒழுகின!

அங்ஙனமாக, அசுரர்கள் கனகனிடஞ்சென்று, 'பிரகலாதனது உடம்பைச்சூழ்ந்து பற்றிக்கொண்டவையான நாகங்கள்; தம் விஷப்பற்களால் அவனுடம்பை எங்கும் சிறிதும் பிளந்து வடுப்படுத்தமாட்டவில்லை' என்று சொன்னார்கள். அதுகேட்டு இரணியன், 'மதம்நிறைந்த, அம்மத மிகுதியாலாகிய களிப்பையும் மயக்கத்தையுமுடைய திக்கஜங்களிற் சிறந்ததான ஐராவதத்துக்கு இவனை இலக்காக இடுங்கள் [ஐராவதத்தைக்கொண்டு இவனைக் கொல்லவிடுங்கள்]' என்றுசொல்லி ஏவியனுப்பினான். அதுகேட்டவுடன், அன்போடு பொருந்துதலில்லாத மனத்தையுடையவரான அசுரர்கள்பலர் கிழக்குத்திசையிற் சென்று,

'இவ்வாறு இரணியன் கட்டளை கூறினன்' என்று சொன்ஞர்கள். அச்சொல்லைக் கேட்டமாத்திரத்தில், அக்கிழக்குத் திக்குப்பாலகஞன இந்திரனென்னும் தேவராஜன், வலிய நான்கு தந்தங்களையும் இயற்கையான கொடிய கோபத்தையுமுடைய தனது ஐராவதமென்னும் யானையை இரணியன்பக்கல் அச்சத்தால் விசையாகக் கொணர்ந்தான். அசுரர்கள், பிரகலாதனுடைய கைகளிலும் கால்களிலும் மார்பிலும் கழுத்திலும் தெய்வத்தன்மையையுடைய மந்திரபலமுள்ள கயிறுகளால் இறுகக் கட்டி, அவனை, மதமயக்கத்தையும் மதக்களிப்பையும் உடையதும், அதனல் எல்லோரையும் கோபிப்பதுமான அந்த யானையின் எதிரிலே பொருந்தப் போகட்டார்கள். அப்பொழுது, பொய்ம்மை யில்லாதவஞன [மெய்ப்பொருளாகிய பரதத்துவத்தை உள்ளபடி உணர்ந்து உரைப்பவஞன] பிரகலாதனும், அந்த யானையை நோக்கி, இந்த ஒருவார்த்தையைச் சொன்ஞன்:—'உமது தாய்தந்தையரது இனத்தாஞன கஜேந்திராழ்வான், முன்பு ஒருமுதலை தன்னை விழுங்கத்தொடங்கியபொழுது, 'எமது தலைவனே!' என்றும், 'எல்லாப்பொருளுக்கும் மூலகாரணமாய்நின்ற முதன்மையான பொருளே! [ஆதிமூலமே!]' என்றும் சொல்லி யழைக்க, உடனே அங்கு வந்து முதலையைக் கொன்று அந்தக் கஜேந்திரனுக்கு இடர்தீர்த்தவஞன திருமால், எனது மனத்திலேயுள்ளான்'* என்று சொன்ஞன். என்று பிரகலாதன் சொல்லாதமுன்னே [சொன்னவுடனே], பெரிய அந்த யானையும், தனது பொன்னிறலமை

* 'உமது இனத்தானுக்கு ஆபத்காலத்தில் வந்து உதவினவனை யான் மனத்திற் கொண்டுள்ளேஞதலால், நீ, எனக்கு இடர்செய்யமாட்டாய்' என்பது, கருத்து.

ந்த நெற்றிப்பட்டம் தரையிற்படும்படி தலைவணங்கி அந்தப் பிரகலாதனைத் தொழுது, அவனுக்கு அஞ்சி விலகிப் போயிற்று.

அத்தன்மையைப் பகைவர்களான அசுரர்கள் இரணியனிடம் போய்ச் சொன்னார்கள். அதுகேட்டு நெஞ்சு கொதிப்பவனான இரணியன், அவ்வசுரர்களை நோக்கி, 'இந்த யானை, கடலிலே உறங்கிக்கிடப்பவனான திருமாலை நன்கு மதித்து, எனது சிறந்த பராக்கிரமத்தை அழித்தது; [பொருள் செய்யவில்லை; அலக்ஷ்யம் செய்தது.] ஆதலால், வல்லமையுடையவர்களே! நீங்கள் போய் ஒப்பற்ற வலிமையையுடைய அவ்யானையைக் கொல்லுங்கள்' என்று சொன்னான். அதுகேட்ட அசுரர்கள் உடனே தன்னைக் கொல்பவர்களாய் நெருங்கியவளவிலே, அந்த யானை, மேகத்தினின்று நீங்காத மின்னலையழிக்கும் [கீழ்ப்படுத்தும்] வெயில்போன்ற ஒளியையுடையதான தனது தந்தத்தால், பொன்னையழிக்கும் [கீழ்ப்படுத்தும்] உடம்பின் ஒளியையுடையவனும், புகழ் அழியாத பெரியோனுமான அந்தப் பிரகலாதனைக் கொல்ல வந்தது. மிகவும் அதிகமான வலிமையையுடைய அந்தப் பிரகலாதனது மார்பிலே அந்த யானை நன்றாகக் குத்தியழுத்தியவையான வெண்ணிறத் தந்தங்கள் நான்கும், வாழைமரத்தின் குளிர்ந்த தண்டுபோல எளிதில் ஒடிந்தன.

அதுகண்டு, உண்மையென்பது இல்லாதவர்களான அசுரர்கள், கண் இமைத்தல்செய்யும் அளவிலே [விரைவாக] இரணியனிடஞ் சென்று, 'ஐராவதத்தின் தந்தங்கள் ஒடிந்துவிட்டன. நின் பிள்ளையின் வலிமையுள்ள உயிர் கவர்தற்கு அரியது' என்று சொல்ல, அது கேட்டு

இரணியன், முதிர்ந்த கோடைக்காலத்துச் சூரியனைக் காட்டிலும் உக்கிரமான கண்களை யுடையவனாய்க் கோபித்தான். அப்படி சினங்கொண்ட இரணியன் அசுரர்களை நோக்கி, 'எவ்வகையாலுங் கொல்லமுடியாத கள்ளத்தைை யுடைய வஞ்சகனான இந்தப்பிரகலாதனை, இப்பொழுது, யாவரும் இகழும்படி, யாவராலும் அசைக்கமுடியாத பெரிய மலையுடனே இறுக்கிக்கட்டி எடுத்துக்கொண்டு போய், கரைகாணவொண்ணாத கடல்வெள்ளத்திலே தள்ளிவிடுங்கள்' என்று ஏவினான்.

அதுகேட்டு அவ்வசுரர்கள், 'இன்னும் இவனை இரணியன் விட்டானில்லை! பிரதிஜ்ஞைசெய்து, தவறாது கொல்ல நிச்சயித்துக் கோபங்கொண்டுவிட்டான்' என்று அறிந்து, விரைவுகொண்டு, அவனைப் பெரியதொரு மலையுடனே கட்டி, வாயுவேகமாகச் சென்று, கடலின் நடுவிலே போகட்டார்கள். அப்பொழுது பிரகலாதன், எவரிடத்தும் பக்ஷபாதமில்லாமல் நடுவுநிலைமை தவறாதுள்ள தனி நாயகனான திருமாலின் திருநாமத்தை உச்சரித்துக்கொண்டு சோரவிடா திருந்தானாதலால், பெரிய கடல் சிறிய மடுப்போன்றிருக்க, அக்கடல்வெள்ளத்திலே பிரகலாதனைச் சார்த்திக்கட்டிய மலை, பெரிய மரக்கலம்போலவும் ஆகாமல், சிறிய சுரைக்குடுவையின் தன்மையை யுடையதாயிற்று. வேதங்களை விரைவிலே* அறிந்தவனான அந்தப் பிரகலாதன், மோதிக்கொண்டு நிறைகிற அலைகளையு

* விரைவிலே—குருவினிடம் ஓதுவதற்குமுன்னமே என்றபடி. இவன், தாயின் கருப்பத்திலிருக்கும்பொழுதே நாரதமஹாமுனிவன் அவள்செவியிற் செய்த உபதேசத்தால் அனைத்தையும் அறிந்தனனென்க.

டைய கடலிலே மூழ்காமல் மிதந்து, மேலே பொருந்தியுள்ளமலையின்மீதுபடுத்தபடியிருந்தவனாய், ஆதிதேவனான திருமாலினது ஆயிரந் திருநாமங்களைச் சொல்லலானான். வலிய பிரளயவெள்ளத்திலே கிளைகளையுடையதோர் ஆலமரத்தினது இலையின்மேற் சிறுகுழந்தை வடிவத்தோடு பள்ளிகொண்டருளிய திருமால்போல, வலிய கடல் வெள்ளத்திலே மலையின்மீது பள்ளிகொண்டு யாதோர் அபாயமுமில்லாமல் விங்குகின்றவனான அந்தப் பிரகலாதன், தலைமேற் கைகூப்பிக்கொண்டு, தனது உறுதி நிலையினின்று நீங்குதலில்லாத மனத்துடனே திருமாலைத் தியானிப்பவனானான்:—

[பிரகலாதன் எம்பெருமானைத் துதித்த வகை.]

'துஷ்டர்களை யழிப்பதில் கொடுமையை யுடையவனே! எவர்க்கும் வரையறுத்து அறியமுடியாதவனே! தீக்குணமொன்றும் இல்லாதவனே! பெருமையை யுடையவனே! விசுவரூப முடையவனே! 'யான் உன்னுடைய அடியார்களுக்கு அடியவனாவேன்' என்னும் விருப்பமுடையவனேயல்லாமல், அழியாத அஹங்காரத்தையுடையவனா யிருக்கிறேனோ? எனது நிலைமைக்கு நீ இணங்கி அருள்செய்வாயோ? வஞ்சகமாக நடக்கின்றவர்களுக்கு வஞ்சகமாக நடக்கின்றவன் நீ; அத்தன்மையுடையவனான உனக்குப் பிராணிகளுடைய நெஞ்சின்கருத்துக்கள் தெரியாதவையுண்டோ? பாற்கடலினால் தரப்பட்ட இனிய அமிருதம்போல் மிக இனியனாக வுள்ளவனே! சஞ்சலப்படும் இயல்பையுடைய எனது மனத்தின் நிலைமையை நீ இப்படி சோதித்தல் முறைமையோ? உனது திருநாபிக்

கமலத்தினின்று தோன்றிய நான்குமுகங்களையுடையவ ஞன பிரமனும், ஐந்துமுகங்களை யுடையவனுன சிவனும், தேவராஜனுன இந்திரனும் ஆகிய தலைமைத் தேவர்கள், சிறந்த நான்குவேதங்களிற் சொல்லப்பட்ட நெறியிலே நடக்கின்றார்கள். அப்படி நடக்கின்ற அவர்களும் வெகு காலமாக உனது உண்மை நிலையை அறிகின்றார்களில்லை. அப்படியிருக்க, அறியாமையை யுடையவனுன நான் ஒரு நாளில் [சொற்பகாலத்தில்] உன்னை எப்படி தியானிக்க மாட்டுவேன்? நான் செய்யாத தீய செயல்களோ இல்லை. அங்ஙனம் யான் செய்த எல்லாத் தீச்செயல்களாலும் ஆகிய பாபங்கள்தாம் தவருதவையாய் வந்து எனக்கு நேரக்கூடும். இஃது உண்மையே. எனது ஸ்வாமீ! அக்கருமம் என் உயிரை விட்டு நீங்கும்படியான ஒப்பற்ற மேலான அருட்செயலை நீ ஒரு பொழுதேனும் மறந்தா யோ? [இல்லை.] ஆராய்ந்து அடையத்தக்க நல்லநெறி தமது அறிவே என்று எண்ணி, அப்படிப்பட்ட சிறந்த தத்துவஞானம் பொருந்தப்பெற்ற தலைவர்களான பெரி யோர்கள் அளவில்லாதவருண்டு. நீ அவர்களுடைய உண் மையறிவுக்கும் எட்டாமல் அதனைக்கடந்து அப்பால் நிற் கிருய். அதனுல், அவர்களெல்லோரும் உனது சொருபத் தை முழுவதும் சிந்திக்கத்திறமையற்றவர்களாய், உனது மாயையாகிய வலையிலே அகப்பட்டு மயங்குவார்கள், தாமே ஒப்பற்ற முதன்மைத் தலைவர்களாய் உலகத்தில் விளங்கி, எல்லாப்பொருள்களும் அழிந்துவிடுமென்று சொன்ன பழைய பெரியோர்கள் சிலர், 'யாமே பரம் பொருள்' என்று சொன்னுர்கள். என்றுசொன்ன அவர்களுக்குச் சொன்னபடியாகுமோ? * உண்மையிற் பரம்பொருளாவார் உன்னையன்றி வேறு யாவர் உளர்?

* சிவபிரான் முதலிய தேவர்கள், ஆடம்பரத்தால் தாமே தனி நாயகர்போலத் தோன்றி, தாம் ஸர்வஜ்ஞர் என்பது தோ ன்ற எல்லாப்பொருள்களின் அழிவையும் எடுத்துக்கூறித் தாமே பரதத்துவமென்று கூறினும், அவர்கட்கு அப்பரத்துவம் சித் திக்காது; உண்மையில் பரதத்துவம் நீயே என்பதாம்.

ஒருதெய்வத்தை முதன்மைப் பரம்பொருளாகுமென்று ஒருவர் சொன்னால், அதனை மறுத்து மற்றொருவர் அப்படியன்று என்று கூறலாம்.* இங்ஙனம் தம்மில் மாறுபாடாகச் சொல்லுதற்கு ஆதாரமாகப் பெரிய சமய நூல்கள் அளவில்லாமல் இருக்கின்றன.† அவை ஒன்றோடொன்று மாறுபடுகின்றனவாம். நீயோ, உண்மையிற் பரம்பொருளாயிருக்கும் நிலைமையினின்று வேறுபடுகின்றாயில்லை.‡ வேதத்திற் சொல்லப்பட்டுள்ள பொருளாயிருப்பவனே! நீ இப்படி கபடநாடகம் நடிக்கின்றாயோ? எல்லாம் நீயேயாயிருக்கிற உனது மகிமையை அறியாத எம்மைப்போன்றவர்கள், ஒருதன்மையாக உன்னையே குறியாமல், பிரமனென்றும் சிவனென்றும் இங்ஙனம் வெவ்வேறு பல பொருளாகக் குறித்தால், அது எவ்வாறு பொருந்தும்? பிரமன் முதலியோர் அனைவரும் உனது சொரூபத்தில் அடங்கியவர்களே. கொம்பும் இலையும் பூவும் காயும் கனியும் என்று சொல்லும்படி வெவ்வேறு பல அவயவப் பொருளாயிருந்தாலும், முதற்பொருளாகிய மரமென்பது ஒன்றேயாம் § என்கிற சொல் புதியதோ? [பழமையானதன்றோ?] உலகங்கள் தாம் உன்னிடத்திலிருந்து வெளிப்

---

* "ஒன்றே பொருளெனின் வேறென்ப; வேறெனின், அன்றெனப ஆறு சமயத்தார்" என்பது காண்க.

† "தெய்வம்பல; அவர் நூலும் பல; அவை தேர்பொழுதில், பொய்வம்பல வென்று தோன்றும் புல்லோர்கட்கு" என்பது காண்க.

‡ "வணங்கும் துறைகள் பலபல ஆக்கி, மதிவிகற்பால், பிணங்குஞ் சமயம் பலபல ஆக்கி, அவையவைதோறு, அணங்கும் பலபலஆக்கி, நின்மூர்த்தி பரப்பிவைத்தாய்" என்பது காண்க.

§ மரமாகிய முதற் பொருளில் கொம்பு முதலிய சினைப் பொருள்கள் அடங்கும்.

பட்டு நிலைமை மாறி [விகாரமாய்]த்தனக்குள்ளே பல வேறுவகைப்பட்டனவானாலும், உன்னினின்றும் வேறு பட்டனவாகுமோ? அது எதுபோலவெனின்,—பொன் னினாலாகிய ஆபரணங்கள் அந்தப் பொன்னினின்றும் வேறாகின்றனவில்லையே. அதுபோல, தாயும் தந்தையும் என்று சொல்லப்படுகிற அன்பின் தகுதியை யுடையை யாய் வந்து நீயே என்னைப் படைத்தருளினாய். நீ எழுந் தருளியிருக்கின்ற நெஞ்சத்தையுடையேன் நான். 'எனக் குப் பிறவிநோயைத் தந்த நீயே, அந்நோய்க்குச் சொல லப்படும் பரிஹாரமு மாவாய்' என்று இங்ஙனம் தனது வாயில்வந்த வார்த்தைகளைப் பலவாறு பக்திபரவசனாய்ச் சொல்லித் துதித்து, எம்பெருமானை வணங்கினான்.

மலையோடு கட்டிக் கடலிற் போகட்டும் பிரகலாதன் இறவாதிருக்கும் அத்தன்மையை அசுரர்கள்வந்துசொல்ல அறிந்த அழித்தற்கு அரிய வலிமையையுடையோனாகிய இரணியன், 'அவனைக் கொண்டுவந்து என்முன்னே விடுங் கள்' என்று சொல்ல, அங்ஙனமே அவனைக்கொண்டு வந்து அவனெதிரில் விட்டார்கள். உடனே இரணியன், 'இவன் கொண்ட பைத்தியம் [திருமாலுக்கு அடிமை பூண்டசெயல்] நீங்கும்படியான உபாயத்தைச் செய்யப் பெறுவோம்; எப்படியென்றால்,—கொடிய விஷத்தினாற் கொல்வோம்' என்று கொதித்துக் கூறுபவனானான்.

அந்த இரணியனது கட்டளைப்படி அசுரர்கள், பிரக லாதனுக்கு மிகக்கொடிய விஷத்தை ஊட்டினார்கள். நாராயணத்தியானத்தை யுடையவனான அந்தப் பிரகலா தாழ்வான், அவ்விஷங்களை வாங்கியுண்டு சிறிதுசோர்வு மில்லாமலிருந்தான்.

அதன்பின்பு, கொடிய கண்களையுடைய இரணியன், கட்டுக்களமைந்த கொடிய குதிரைச்சம்மட்டிகளால் அடித்துக் கொல்லும்படி ஏவினன்.

அப்படியே அந்தப் பிரகலாதன்மேல் அவ்வசுரர்கள் குதிரைச்சம்மட்டிகளால் வீசியடித்தார்கள். கணக்கில்லாத கொடிய பலரான அவ்வசுரர்கள் சம்மட்டிகளால் வீசியடித்தபோது, காண்பவர் அனைவரும், 'இனி இவன் பிழையான்' என்று சொன்னர்கள். அச்சமயத்தில், அந்தப் பிரகலாதன், 'எனது உள்ளத்தில் எழுந்தருளியிருப்பவனன எம்பெருமானுக்குக் கைகள் ஆயிரமென்னும் அளவிற்பட்டனவல்ல; கணக்கில்லாதனவாம்' என்று, அனைத்துலகங்களின் வடிவமான எம்பெருமானது சொரூபத்தை மறவாமல் தியானித்துக்கொண்டிருந்தான்.

என்னசெய்தும் பிரகலாதன் இறவாததைக் கண்டு இரணியன், 'அசுரர்கட்கு உரிய ஒப்பற்ற மாயையையுடைமையினல், இந்தப் பிரகலாதன், உடம்பைவிட்டு உயிர் நீங்காமைக்கு உரிய உபாயத்தை இயல்பிலேயே உடையவனுயிருக்கின்றுன்; ஆதலால், இனி இவனுடைய உயிரை உண்ணுவேன்; [கவர்வேன்]' என்றுசொல்லிக் கோபித்து, இடியின் கொடுமையையுடைய சம்வர்த்தம், ஆவர்த்தம், புஷ்கலாவர்த்தம், சங்கிருதம், துரோணம், காளமுகி, நீலவர்ணம் என்ற ஏழு மேகங்களும் அஞ்சும்படி பிரகலாதனது அருகில் வந்தான்.

## ஏழாம் அத்தியாயம்.

[பிரகலாதனுக்கும் இரணியனுக்கும் ஸம்வாதம்.]

அங்ஙனம் சினந்து கொல்லவந்த தந்தையான இரணியனை மைந்தனான பிரகலாதன் வணங்கி, 'என் தந்தையே! எனது நிலைபெற்ற உயிரை நீ கவர்ந்துகொள்ள நினைத்தாயானால், அவ்வுயிர்தான் உனது வசத்திலுள்ளதன்றே * ஸகலலோகங்களையும் ஒருங்குபடைத்தருளியவரான ஸ்ரீமந்நாராயணமூர்த்திக்கே கொள்ளும்படியுள்ளதன்றோ?' என்று சொன்னவுடனே, அதுகேட்டு இரணியன், 'நீ சொன்னபடி உலகங்களை உண்டாக்கினவர்தாம் எவர்? என்பெயரைத் துதித்துக்கொண்டு வாழ்கிற திரிமூர்த்திகளா? அவர்களல்லரானால், என்பெயரைத் துதித்து வாழ்கின்ற முனிவர்களா? தங்களுடைமைகளையெல்லாம் எனக்குத் தோற்று இழந்த தேவர்களா? அல்லது வேறு யாவரோ? தெரியச்சொல்வாய்' என்று சொன்னான். அப்படிப்பட்டவன் ஒருவன் உண்டாயிருந்து அவனைப் பிரகலாதன் காண்பிப்பானானால் காணலாமென்ற எண்ணத்தைக் கொண்டானாதலால், கோபம் மிக அதிகப்பட்டும் பிரகலாதனைக் கொல்லத் தொடங்கினானில்லை.

---

* பிரகலாதாழ்வான் இப்படி சொன்னது, தம் பெருமையைக் காட்டுதற்பொருட்டன்று : தந்தையின் மனத்தைத் திருப்புதற்பொருட்டு எம்பெருமானுடைய பிரபாவத்தைக் காட்டியதேயாம். ஸ்வாமியை அப்போதப்போது பிரார்த்தித்ததும், தமது உபத்திரவத்தைப் போக்குவதற்கன்று; எம்பெருமானது ஆச்ருத வாத்ஸல்யத்தை வெளியிட்டுக்காட்டி, இரணியன் முதலானவர்களுக்கு அச்சம் உண்டாக்கவேண்டுமென்பதற்கேயாம்.

'தந்தையே! உலகங்களைப் படைத்தவனும், அவ்வுலகங்களிலுள்ள பல வேறுவகைப்பட்ட பிராணிகளைப் படைத்தவனும், அந்த அந்த உலகங்களிலே எல்லையில்லாதவையும் அழிவில்லாதவையுமாகிய பிராணி வர்க்கங்களிலெல்லாம் உள்ளே பொருந்தி அந்தர்யாமியாய் வசிக்கின்றவனும் யாவனென்றால், மலரில் மணமும் எள்ளில் எண்ணெயும்போல, எங்குமுள்ள அளவில்லாத பலபொருள்களிலும் கலந்து நிறைந்திருக்கின்ற ஸ்ரீஹரிகாண். எனது தலைவனான அப்பெருமான், அவனது அடியவனான யான் எனது கண்களாற் குறித்துக் காணும்படி எவ்விடத்திலும் இருக்கின்றான். அவ்வுண்மையை உன்னிடத்தில் அன்போடு நான் சொன்னால், அதனை நன்மைதருவதென்றும், நிச்சயமானதென்றும் நீ சிறிதும் எண்ணுகின்றாயில்லை. இங்ஙனம் நீ நம்பிக்கை கொள்ளாததனால், உனக்குப் பின்பிறந்தவனான இரணியாக்ஷனுடைய உயிரை வாங்கிய செந்தாமரைமலர்போலுந் திருக்கண்களையுடைய அத்திருமால், உனதுகண்களாற் குறித்துக் காண்பதற்கு எளியவனாவனோ?* ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்னும் முக்குணங்களும், அப்பெருமானுடையவை. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களும், அவனுடையவை. பிரம, விஷ்ணு, ருத்திரர் என்னும் திரிமூர்த்தி சொரூபமும், அவனுடையவை. ஒளியைக்கொண்ட சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூன்று சுடர்களும், அவனுடைய கண்களாம். சுவர்க்கம், மத்தியம், பாதாளம் என்னும் மூன்று உலகங்களும்,

* "பத்துடை யடியவர்க் கெளியவன்; பிறர்களுக் கரிய வித்தகன்" ஆதலால், பக்தனான எனக்கு எங்கும் விளங்குகின்றவன் பகைவனான உனக்கு எங்கும் விளங்கான் என்றான்.

அவனுடையவை. முதலும், நடுவும், முடிவும் ஆகிய மூன்று நிலைமையும் உண்டான எல்லாப்பொருள்கட்கும் ஸாக்ஷியாவான் அவனே. இதுவே வேதத்தின் ஸித்தாந்தம். இது சத்தியம்' என்றுசொன்னான், பிரகலாதன்.

என்று பிரகலாதன் சொன்னவுடனே, அசுரராஜனான இரணியன, அரும்புபோன்ற தன்னுடைய பற்கள் வெளியே தெரியும்படி இகழ்ச்சிதோன்றச் சிரித்து, 'நீ சொல்லும் ஒருவன் ஒன்றுபடுதலில்லாத பற்பலவகைப்பட்ட பொருள்களெல்லாவற்றிலும் உள்ளே புகுந்து வசிக்கின்றான் என்று சொன்னாய். அத்தன்மையை நன்றாகச் சோதித்துப்பார்த்துப் பின்பு அதற்கு ஏற்ற காரியத்தைச் செய்வேன். முன்பு எனக்கு அஞ்சியோடிக் கடலில் ஒளித்த நீசொன்ன அந்தக் கள்வன் இந்தத் தூணினுள்ளே மறைந்துநின்றுள்ளானானால், அவனுடைய அந்த நிலைமையைத் திருஷ்டாந்தப்படுத்தித் தாபிப்பாய்' என்று சொன்னான்.

அதற்குப் பிரகலாதன்,

"சாணினு முளன்; ஓர் தன்மை யணுவினைச் சதகூ றிட்ட
கோணினு முளன்; மா மேருக் குன்றினு முளன்; இந் நின்ற
தூணினு முளன்; நீ சொன்ன சொல்லினு முளன்; இத்தன்மை
காணுதி விரைவி' னென்றான். நன்றெனக் கனகன் சொன்
[னான்."

'யான் சொன்ன அவ்வெம்பெருமான் சாணிலும் இருக்கின்றான்; எளிய மிகவும்சிறிய பொருளாகிய ஓர் அணுவை நூறுகூறாகப் பகிர்ந்த பகுப்பிலும் இருக்கின்றான்; மஹாமேருமலையிலும் இருக்கின்றான்; இவ்விடத்

திலுள்ள இந்தத் தூணிலும் இருக்கின்றான்; நீ அவனைக் குறித்து இகழ்ச்சியாகச் சொன்ன சொற்களிலும் இருக்கின்றான். இந்த உண்மைத்தன்மையை விரைவில் சோதித்து அறிவாய்' என்றுசொன்னான்.

அதுகேட்டுக் கனகன் நல்லதென்று உடன்பட்டு, இன்னமுஞ் சொல்லலானான்:—

"உம்பர்க்கு முனக்கு மொத்திவ் வுலகெங்கும் பரந்து ளானைக்,
கம்பத்தின் வழியே காணக் காட்டுதி; காட்டி டாயேல், [றுன்
கும்பத்தின் கரியைக் கோண்மாக் கொன்றெனை நின்னைக் கொன்
செம்பொத்த குருதி தேக்கி யுடலையுந் தின்பே' னென்றான்."

'தேவர்களுக்கும் உனக்கும் அநுகூலனாய் இந்த உலகம்முழுவதிலும் வியாபித்துள்ளவனான அந்தத்திருமாலை, இந்தக் கம்பத்தினிடத்திலே யான் காணும்படி நீ காட்டுவாய். அங்ஙனம் காட்டாவிட்டால், கொழுத்த மஸ்தகத்தையுடைய யானையை வலிமையையுடைய சிங்கம் கொல்லுதல்போல, உன்னை யான் எளிதிலே கொன்று, தாமிரம்போன்ற செந்நிறத்தையுடைய உனது இரத்தத்தைக் குடித்து, உனது உடம்பையும் தின்பேன்' என்று இரணியன் சொன்னான்.

அதுகேட்டு,

"என்னுயிர் நின்னாற் கோறற் கெளியதொன் றன்று; யான்முன்
சொன்னவன் றொட்ட தொட்டவிடந்தொறுந் தோன்றானாயின்,
என்னுயிர் யானே மாய்ப்பல்; பின்னும்வாழ் வுகப்ப லென்னின்,
அன்னவற் கடியே னல்லேன்' என்றன னறிவின் மிக்கான்."

அறிவிற் சிறந்தவனான பிரகலாதன் இரணியனை நோக்கி, 'எனது உயிர், உன்னாற் கொல்லப்படுவதற்கு

எளியதொன்றன்று. என்னல் முன்பு சொல்லப்பட்டவனை அத்திருமால் நீ தொட்டதொட்ட இடந்தோறும் வெளிப்பட்டுத் தோன்றுனேயானல், எனது உயிரை நானே மாய்த்துக்கொள்வேன். அங்ஙனம் செய்யாமல் இவ்வுலகவாழ்க்கையை விரும்பி ஜீவித்திருப்பேனுனல், அப்பெருமானுக்கு நான் அடியவன் அல்லேன்' என்று பிரதிஜ்ஞை செய்தான்.

---

## எட்டாம் அத்தியாயம்.

[திருமால்நரசிங்கமூர்த்தியாய்த் தூணினின்று அவதரித்து இரணியனைச் சங்கரித்தமை].

"நசைதிறந் திலங்கப் பொங்கி, நன்றுநன் றென்ன நக்கு,
விசைதிறந் துருமு வீழ்ந்த தென்ன, ஓர் தூணின், வென்றி
இசைதிறந் துயர்ந்த கையா லெற்றினன்; எற்ற லோடும்,
திசைதிறந் தண்டங் கீறிச் சிரித்தது செங்கட் சீயம்."

அதுகேட்டு இரணியன் தன்மனத்திலுள்ள பரிகாசக் கருத்து வெளிப்பட்டு விளங்கும்படி 'நல்லது, நல்லது' என்று சொல்லிச் சிரித்துப் பொங்கி, இடி விசையாக வெளிப்பட்டு விழுந்தாற்போல, எதிரிலுள்ள ஒரு தூணிலே, வெற்றியையும் புகழையும் பரவச்செய்து சிறப்புற்ற தன் கையினுல் அறைந்தான்; அங்ஙனம் அறைந்தவளவிலே, அதனுள்ளே, சிவந்த கண்களையுடையதொரு சிங்கமானது, தனது ஆரவாரத்தால் திக்குக்களைக் கிழித்து அண்டகோளத்தைப் பீறிக்கொண்டு சிரித்தது.

"நாடிநான் றருவேனென்ற நல்லறி வாளன், நாளும்
தேடிநான் முகனுங் காணச் சேயவன் சிரித்த லோடும்,
ஆடினன்; அழுதான்; பாடி யாற்றினன்; சிரத்திற் செங்கை
சூடினன்; தொழுதான்; ஓடி யுலகெலாந் துகைத்தான் றுள்ளி."

சருவகாலமும் தேடியும் பிரமனாலும் காணுதற்கு அரியவனாய் எட்டாததூரத்தி லுள்ளவனான திருமால், அங்ஙனம் சிங்கவடிவத்தோடு தூணினுள்ளே சிரித்தவுடனே, 'நான் உனக்கு அந்த ஸர்வேச்வரனைக் காட்டிக்கொடுப்பேன்' என்று இரணியனுக்கு உறுதியாகச்சொன்ன மகாஞானியாகிய பிரகலாதன், மிக்க களிப்பையடைந்து எழுந்துகூத்தாடினன்; ஆனந்தக்கண்ணீர்விட்டு அழுதான்; கீதம்பாடி ஆரவாரித்தான்; தனது சிவந்த கைகளாகிய தாமரைமலர்களைக் கூப்பித் தலைமேல் வைத்துக்கொண்டான்; கீழ்விழுந்து தொழுதான்; துள்ளித்துள்ளி எழுந்து உலகமுழுவதும் ஓடித் துகைத்தான்.

"ஆரடா சிரித்தாய்? சொன்ன வரிகொலோ? அஞ்சிப் புக்க
நீரடா போதா தென்று, நெடுந்தறி நேடினாயோ?
போரடா பொருதி யாயின், புறப்படு புறப்ப' டென்றான்,
பேரடா நின்ற தாளோ டுலகெலாம் பெயரப் போவான்."

எங்கும் தன்பெயர் அடுத்துப்பொருந்தி நிற்பதற்குக் காரணமான வலிமையுடனே, எல்லாவுலகங்களிலும் அவை நிலை பெயரும்படி செல்பவனான இரணியன், அச்சிரிப்பொலியைக் கேட்டு, 'சிரித்த நீ ஆரடா? இவன் சொன்ன அரிதானோ நீ? முன்பு எனக்கு அஞ்சிப் புகுந்து ஒளித்துக்கொண்டிருந்த கடலினிடம் போதாதென்று, நீண்ட இத்தூணை இருப்பிடமாகத் தேடி, இதனுள்ளேயும் வந்து ஒளித்துக்கொண்டாயோ அடா? என்னோடு நீ போர்செய்ய வலிமையுடையாயானால், புறப்படு புறப்படு அடா!' என்று சொன்னான்.

"பிளந்தது தூணும்; ஆங்கே, பிறந்தது சீயம்; பின்னை
வளர்ந்தது திசைக ளெட்டும்; பகிரண்ட முதல மற்றும்
அளந்தது; அப்புறத்துச் செய்கை யாரறிந் தறைய கிற்பார்?
கிளர்ந்தது ககன முட்டை கிழிந்தது கீழுமேலும்."

இங்ஙனம் இரணியன் கூறியவுடனே, அந்தத்தூணும் பிளவுபட்டது. அவ்விடத்தினின்று சிங்கமூர்த்தி அவதரித்து வெளித்தோன்றிற்று. அத்திருவுருவம் உடனே எட்டுத் திக்குக்களையும் அளாவி வளர்ந்தது; இவ்வண்டத்துக்கு வெளியிலுள்ள வேறு அண்டம் முதலியவற்றையும் அளாவிற்று. இவ்வண்டத்துக்கு அப்பால்நடந்த செய்கையையறிந்து சொல்லவல்லவர் யார்? அண்டகடாகம் கீழும் மேலும் பீறிப் பிளந்தது.* நல்லமணமுள்ள அழகிய திருத்துழாய்மாலையைத் தரித்த அந்நரசிங்கமூர்த்தி வானத்தில் ஊடுருவிச்சென்ற எல்லையை யாம் அறியமாட்டோம். அந்நரசிங்கமூர்த்தி சிவந்த தனது திருவடிகள் பூமியிற்படும்படி நின்ற சமயத்தில், அண்டகோளத்தின் மேல்முகட்டில் [மேலேழுலகங்களுள்ளும் மேலுலகமான சத்தியலோகத்தில்] இருந்த படைத்தற்றொழிற் கடவுளான பிரமன், அப்பொழுதே, எழுந்துநின்று வளர்ந்துவரும் அச்சிங்கப்பிரானுடைய திருநாபியின் அளவிலே தோன்றியவன்போல விளங்கினான்.†

---

* "அடிகண்டிலர் அதலத்தவர்; ஐம்முகனோ டமரர், கடிகண்டிலர் மலைவான் நிவந்தும்; கமலத்தயனார், முடிகண்டிலர் அண்டமாமுகடேறியும்; மூதுணர்ந்தோர், படிகண்டிலர்; அரங்கேசர் கொள்சிங்கப் படிதனக்கே"—திருவரங்கத்து மாலை.

† என்றால், அப்பெருமான் மேலோங்கிச்சென்ற எல்லையின் வரையறை அறியமுடியுமோ? என்பதாம். அங்ஙனம் திருமாலின் நாபியளவில் நின்ற பிரமன், அப்போழுதே அத்திருநாபிக்கமலத்தினின்று தோன்றியவன்போன்றனனென்க.

அந்நரசிங்கப்* பிரானுக்குக் கைகள் எத்தனையுள்ளன வென்று சொல்லி விணவினல்,—அக்கைகளையெல்லாம் எண்ணி இத்தனையென்று கணக்கிடவல்ல திறமையுடையவர் உலகத்தில் எவரேனும் உள்ளாரோ? [யாரும் இல்லை.] ஆயிரங்கோடி † வெள்ளமென்னுந் தொகையால் அளவிட்டு வகுக்கப்பட்ட இரணியனுடைய பரிவாரங்களாகிய அந்த அசுரர்களுடைய பரந்த சேனைகளாகிற கடல்களத்தனையும் மாளும்படி அந்த நரசிங்கமூர்த்தியின் கைகள் அவ்வசுரர்களையெல்லாம் தனித்தனி அள்ளிக்கொண்டன.‡ ஆயிரங்கோடி வெள்ளமென்னுந் தொகையுள்ளவர்களான கூரிய பற்களையுடைய அசுரர்களில் ஒவ்வொருவருக்கும் எதிராக ஒவ்வொரு திருமுகமும், இரண்டிரண்டு அழகிய திருக்கைகளும், அந்த ஒவ்வொருதிருமுகத்திலும் நெருப்புப்போலக் கோபத்தால் ஜ்வலிக்கின்ற சிவந்த மும்மூன்று திருக்கண்களும்§, அந்நரசிங்கரூபத்தில்

---

* நரசிங்கம்-முகமும் நகங்களும் சிங்கத்தினுடையவை போல அமைய, மற்றை உருவம் மனிதவடிவம்போன்றிருப்பது. தேவர், மனிதர், விலங்கு முதலிய பிராணிகளால் தனித்தனி சாவதில்லை யென்று வரம்பெற்ற இரணியனை, திருமால் அவ்வரம் பழுதுபடாதபடி கொல்லுதற்பொருட்டு, இங்ஙனம் விலங்குவடிவங்கலந்த மனிதவடிவமாயினனென்க.

†வெள்ளம்—ஓர் பெருந்தொகை.

‡நரசிங்கமூர்த்தி தன்னெதிர்ப்பட்ட அசுரசேனையிலுள்ள ஆயிரங்கோடிபேரில் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு கையாற் பற்றிக்கொண்டனனாதலால், அப்பெருமானுக்கு அத்தொகையினும் அதிகமான கைகள் இருந்தன என்க.

§ உக்கிரமூர்த்தியாதலால், உருத்திரமூர்த்திக்குப்போல முகக்கண்கள் இரண்டும் நெற்றிக்கண் ஒன்றுமாக முகந்தோறும் மூன்று கண்கள் தோன்றின வென்க.

அங்கங்கே தோன்றிக் காணப்பட்டன. அந்தத் திவ்விய சொரூபத்தினது பெரிய பகுவாயிலே ஏழு கடல்களும், மலைகளும், மற்றும் எல்லாப்பொருள்களுங் கொள்ளும். அச்சிங்கவடிவத்தினது மடங்கிய நீண்ட பிடரிமயிர்த்தொகுதி, செந்நிறமிகுதியாலும்உக்கிரத்தன்மையாலும், அண்டகோள முழுவதையும் இறுதியிலே உட்கொள்ளுங் கடமையைக்கொண்ட கொடிய அந்த யுகாந்தகாலத்துச் சிவந்த தீயைக் கீழ்ப்படுத்தும். அச்சிங்கமூர்த்தியினது சுவாசக் காற்றும், அங்ஙனமே வேகத்தாலும் வலிமை கொடுமைகளாலும், அந்த ஊழிக்காலத்து உலகங்களை அழித்தற்கு எழுந்து வீசும் பெருங்காற்றை யடக்கும். ஆனால், அவ்விரண்டும் முற்றும், முறையே, திறந்த வாயையுடைய அந்தச் சிங்கவடிவத்தினது மேலிடத்திலும் உள்ளிடத்திலுமே உள்ளன! ஆச்சரியம்! திருமாலினாற் படைக்கப்பட்ட அண்டகோளங்கள் குஞ்சுபொரிக்காதநிலையிலுள்ள முட்டைகள்போன்றிருக்க, அந்த முட்டைகளை அவற்றையீன்ற பறவை முதலியவை வயிற்றோடு அணைத்து அடைகாக்கின்ற காலம்போல அத்திருமால் அவ்வண்டகோளங்களை வயிற்றில்வைத்துப் பாதுகாக்கிற பிரளயகாலத்தில், அத்திருமாலினது திருவயிற்றினுள்ளே அடங்கியிருத்தலையடைந்து பின்பு அந்தப் பிரளயம் நீங்கினநாளிலே அத்திருவயிற்றினின்று வெளியேவந்து இந்நாளிலும் வாழ்ந்து வருகிற நிலைபெற்ற உயிர்களெல்லாம், அமிருதம் ஊறுகின்ற பற்களையுடைய வலிய திறந்த அவ்விசுவரூப நரசிங்கமூர்த்தியின் திருவாயினுள்ளே புகுந்து அங்கு இருப்பனவாயின.

நற்குண நற்செய்கைகளில் நீங்காது உரிமை பூண்டுள்ள ஸாதுக்களுக்கு எப்பொழுதேனும் கேடு உண்டாகுமோ? பிரமன் முதலாகத் தொன்றுதொட்டு வருகிற சத்தியமான தருமமார்க்கத்தோடு சம்பந்தமில்லாத [தருமமார்க்கத்தை அனுசரியாத] கொடிய அசுரர்கள் மாத்திரமேயன்றி அவ்வசுரர்களைச் சார்ந்தவர்களும் அழிய, அவ்வசுரர்களல்லாதவர்களையெல்லாம், துஷ்டநிக்கிரஹ சிஷ்டபரிபாலனத்தின் பொருட்டுத் திருவவதரித்த அந்தச் சிங்கம், அப்பொழுது, தனது வயிற்றினிடத்திலே வைத்துத் தாய்போலப் பாதுகாத்துக்கொடுத்தது.

அச்சிங்கமூர்த்தி, கொடுமையிற் பெயர்பெற்ற அசுரர்களிற் பலரை, வளைந்தவடிவத்தாலும் வெண்ணிறத்தாலும் ஒளியாலும் பிறைச்சந்திரன் போன்றிருக்கிற தனது வக்கிரதந்தங்களில் அடக்கிக்கொள்ளும்; [கடித்து உட்கொள்ளும்.] மற்றும் பலரை, அவர்களுள்ள இடத்தினின்று எடுத்துப் பூமியிலே தேய்க்கும்; மற்றும் பலரை, இவ்வண்டத்துக்கு வெளியிலேயுள்ள அண்டங்களிலே அடிக்கும்; மற்றும் பலரை, பிடித்து மஹாமேருமலையில் புடைக்கும்; மற்றும்பலரை, மாளும்படி விரல்களாற் பிசையும்; மற்றும் பலரை, கடல்நீரினுள்ளே ஆழ அமுக்கி மேலே குமிழியெழும்படி செய்யும்; மற்றும் பலரை, படபாமுகாக்கினியிலே எரிந்து சுருளும்படி கைநீட்டிப் பிடித்து இட்டு வாட்டும். அந்நரசிங்கமூர்த்தி அசுரர்கள் பற்பலரை இரண்டு பிளவாம்படி துண்டிக்கும்; வாய்களைப் பிடித்துக் கிழிக்கும்; வலிய தோலைத் துணியைக் கிழிப்பதுபோல உரித்தெடுக்கும்; சிவந்த கோபத்தீயையுமிழ்கின்ற கண்களைத் தோண்டியெடுக்கும்; குடலைக் கை

யாற் சுற்றித் துண்டுபடும்படி அறுத்திடும்; உதிரப்பசை யும் அற்றுப்போம்படி பலதரம் பிசைந்துவிடும்; தனது கையின் நகச்சந்துகளிலே பதுங்கிய அசுரர்களை, மற்றை நகங்களால் அழுத்திக் கீண்டெறியும். மற்றும், அந்த நரசிங்கமூர்த்தி, அவ்வசுரர்களுக்கு வாஹனமாகியயானைகளை யும் தேர்களையும் குதிரைகளையும் மற்றவற்றையும்,உயிரில் லாதபடி,பின்னப்படாமல் உடம்புமுழுவதையுங்கடித்துத் தின்னும்; பின்பு, ஏழுகடல்களையும் அவற்றிலுள்ள மீனினங்களுடனே குடிக்கும்; வானத்திலுள்ள மேகங் களை இடிகளுடனே விழுங்கும்.

அந்த உக்கிரத்தைக்கண்டு தருமதேவதையும், இந்த நரசிங்கமூர்த்தி எவ்வகையாலும் கோபந்தணியாதென்று அஞ்சி நடுங்கிற்று. ஆச்சரியம்! தருமந் தவறியவர் அஞ்சி நடுங்கியமையைச் சொல்லவேண்டுமோ?

மற்றும், அச்சிங்கமூர்த்தி, அவ்வசுரர்களிற் சிலரை, உலகங்களைச் சூழ்ந்துள்ள பெரிய சக்கரவாளகிரியோடு மோதும்; சிலரை, அண்டகோளத்தின் சுற்றிலுமுள்ள பெரிய சுவரிலே தேய்க்கும்; சிலரை, அசைவில்லாத கைலை,இமயம், மந்தரம், விந்தம், நிஷதம், ஏமகூடம், நீலகிரி என்னும் ஏழுகுலபர்வதங்களுடனே மோதியடித்துக் கொல்லும்; சிலரை, பெரிய கைகளால் எட்டுத்திக்குகளி லும் நிறைந்த இருள்தொகுதியிலே * கொண்டுபோய்த் தாக்கித் தேய்த்து ஒழிக்கும். மற்றும், அச்சிங்கமூர்த்தி.

*ஏழு தீவுகளையுஞ்சூழ்ந்துள்ள ஏழுகடல்களுக்கும் அப்பால் கோட்டை மதில்போலச் சூழ்ந்திருப்பது சக்கரவாளகிரியென் றும், அதனைச் சூழ்ந்துள்ள புறக்கடலை யடுத்துச் சூழ்ந்துள்ளது மஹாந்தகாரமென்றும் சிலநூற் கொள்கை.

அசுரர்கள் சிலரை இழுத்து, அவர்களுடைய உடம்பு மலைகள்போல் வீழ்ந்து உருளும்படி கூர்மையுள்ள நகங்களின் நுனியால் அவர்களது தலைகளைக் கிள்ளியெடுக்கும்; அசுரர்கள்சிலரைப் பிடித்து நெருப்புக் கிளம்பும்படி பிசைந்திடும்; அசுரர்கள் சிலரை, அவர்களது கொடுமைக்கு ஏற்ற கொலைவகைகளாற் கொன்றிடும்; சின்னபின்னப் படுத்தி வதைக்கும்; அசுரர்கள் சிலருடைய உடம்புகளினின்று உயிர்களைப் பறித்துக் குடிக்கும்; கடல்நீர் ஆகாயத்தினிடங்களில் தாவி மிகும்படி அந்நீரிலே அசுரர்கள் சிலரைப்பிடித்து நிறையத்தூர்த்துவிடும். ஸ்வர்க்க மத்திய பாதாளமென்னும் மூன்றுவகை யுலகங்களிலும் மிச்சமில்லாதபடி அசுரர்களெல்லோரையும் பிடித்துத் தப்பிப்போகாதபடி கொன்று, அவ்வசுரஸ்த்ரீகளுடைய கர்ப்பங்களையும் வெளியிலே தள்ளி யொழித்து, அதன்பின்பு, இந்த அண்டத்திலே அசுரர்கள் எவரும் இல்லாததனால், அந்நரசிங்கமூர்த்தியின் கைகளிற் சில், பஹிரண்டங்களிலும் எட்டி அசுரர்களைத் தடவித்தேடின. ஆச்சரியம்! பெரிய கண்களையுடைய அந்நரசிங்கமூர்த்தி, இரணியனும், அவனிடத்தினின்று தோன்றிய அவனது புதல்வனும், தேவர்களை அவர்களது பகைவர்களாகிய அசுரர்கள் ஒழிந்திடும்படி செய்து இரட்சிப்பவனுமான பிரகலாதாழ்வானும் தவிர, பல வேறுவகைப்பட்ட அசுரர்களையெல்லாம் நினைத்தற்கு முன்னமே† கொன்று பிறகு சும்மாநின்றது.

பின்பு, வீரக்கழலைத் தரித்துள்ள இரணியனும், அச்சிங்கத்தின் வருகையை நோக்கி, வஜ்ராயுதம்போன்ற

† மனோவேகத்தினும் மிக்கவேகமாக; வெகுவிரைவிலே என்றபடி.

மிகக்கூர்மையுள்ள வலிமை பொருந்திய வாட்படையை உறையினின்று எடுத்து வலக்கையில் ஏந்திக்கொண்டு, வானம்முழுவதையும் மறைக்கும்படியான வட்டவடிவமுள்ள குற்றமற்ற கேடகப்படையையும் இடக்கையில் ஏந்திக்கொண்டு, காண்கின்ற தேவர்களுடைய மனம் தியவும், ஏழுகடல்களும் மலைகளும் அஞ்சவும் ஆரவாரித்து, உயிருள்ளதொரு மஹாமேருகிரிபோலக் கம்பீரமாய், உதட்டை மடித்துச் கடித்துக்கொண்டு கோபித்து அந்நரசிங்கமூர்த்தியோடு போர்புரியுமாறு எதிரில் அசைவின்றி ஊன்றி நின்றான்.

அங்ஙனம் நின்ற இரணியனை, எல்லாவுலகங்களும் [உயர்ந்தோர் யாவரும்] புகழும்படி நின்றவனை பிரகலாதாழ்வான் பார்த்து, 'இந்த நரசிங்கமூர்த்தியின் நிலைமையைக்கண்டும், நீ, கொடுமைபொருந்திய உன் உள்ளத்தில் சிறிதும் நல்லறிவு கொண்டாயில்லைபோலும்! பகையழித்தலாகிய வலிமையுள்ள தொழிலில் தேர்ந்த சுதரிசனமென்னும் சக்ராயுதத்தையுடைய எம்பெருமானை நீ வணங்கு; அங்ஙனம் வணங்கினமாத்திரத்திலே, அப்பெருமான், நீ செய்த இழிந்த தொழில்களையெல்லாம் பொறுத்தருள்வான்' என்று சொன்னான்.

அது கேட்டவுடனே, இரணியன் பிரகலாதனை நோக்கி, 'யான் சொல்லும் இவ்வார்த்தையைக் கேட்பாயாக: இங்ஙனம் சொல்லுகிற பக்தனை நீயும் பார்த்துக் கொண்டிருக்க, எழுந்தோங்கியுள்ள வலிமைபொருந்திய இச்சிங்கத்தினது ஒப்பில்லாத கைகளையும் கால்களையும் வெட்டித்தள்ளி, உன்னையும் துணித்து, பின்பு, அங்ஙனம் வெற்றியைத் தந்ததான எனது வாடபடையை யான

தொழுவதே யல்லாமல், பிறரை வணங்குவ தென்பது, எனக்கு உரிய மகளிர் ஊடல்* கொண்டபொழுதும் என்னிடத்தில் உள்ளதாமோ?' என்றுசொல்லி, அண்டங்கள் நடுங்கும்படி நகைத்தான்.

இரணியன் இவ்வாறு சொல்லிச் சிரித்து, அங்ஙனம் சிரித்த வாயிலும் கையிலும் கையிலேந்திய வாளாயுதத்திலும் நடக்கிற கால்களிலும் உக்கிரமிகுதியால்மிக்கநெருப்புப் புகைசெய்துகொண்டு கிளர்ந்துசொலிக்க, கோபித்து அந்நரசிங்கமூர்த்தியை எதிர்த்தற்கு நெருங்கினன். அப்பொழுது, உலகத்துக்கு மிக்கதுன்பஞ் செய்பவர்களான அசுரர்முதலிய துஷ்டர்களுடைய வஞ்சனைச்செயல்களுக்கெல்லாம் மேலாகச்செய்யும் தந்திரச்செய்கையில் வல்லவனை அத்திருமால், கணக்கிடவல்ல கணிதசாஸ்திர பண்டிதர்களுக்கும் கணக்கிட்டு இவ்வளவென்று தொகை சொல்லுவதற்கு அரிய மிகப்பலவான தனது கைகளினலும் கால்களினலும் அந்த இரணியனைச்சூழ்ந்து கட்டிப் பிடித்தான்.

---

*ஊடலாவது - ஆடவரும் மகளிரும் இன்பநிலையில் அவ்வின்பத்தை மிகுவிக்கும்பொருட்டு ஒருவரோடொருவர் கோபித்தல்; இது, வடமொழியில் 'ப்ரணயகலஹம்' எனப்படும். இன்சொல்முதலிய வேறு உபாயங்கால் தணிக்கக்கூடிய நிலையைக் கடந்து வணங்குதலாகிய ஒருபாயத்தினலன்றித் தணிக்கக்கூடாத நிலையையடைந்த ஊடல்முதிர்ச்சியில் இயல்பாக ஆடவர் மகளிரிடத்துக் கொள்ளும் வணக்கத்தையும் யான் கொள்ளும் இயல்பினனல்லே னென்று இரணியன் தனது வணக்கமின்மையை விளக்கியவாறு. கம்பராமாயணம், ஆரணியகாண்டத்தில், இராவணனுடைய கிரீடங்களை, "மாதர் வலிய நெடும் புலவியினும் வணங்காத மகுடநிரை" என்றதுங் காண்க.

இப்படி ஒருவரை யொருவர் கட்டிப்பிடித்து, எல்லாவுலகங்களுக்கும் மேலாக எவருங் காணக்கூடாதபடி உயர்ந்துநின்ற தன்மைக்கு உவமை சொல்லுமிடத்தில், யாவரும் அஞ்சும்படியான தோற்றத்தை யுடையவனும், எதற்கும் அஞ்சாதவனும், கொடியகோபத்தை யுடையவனுமான பொன்னிறமுள்ள இரணியாசுரன், பூமியின் நடுவிலுள்ள அழித்தற்கு அரிய பொன்மயமான மஹாமேருகிரியைப் போன்றான்; அவனை அணைத்துப்பற்றிய பெருமையிற் சிறந்தவனான நரசிங்கப்பிரான், மற்ற மலைகளையெல்லாம் போன்றான்.* பயங்கரமான வாயினாற்செய்யும் கர்ஜனையொலியின் ஆரவாரத்தாலும், கூர்மையுள்ள நகங்களின் மிகுதிபொருந்திய பெறுதற்கரிய மிகப்பலவான கைகளினாலும், நரசிங்கமூர்த்தியான திருமால், பலவேறு வகைப்பட்ட ஆரவாரிக்கின்ற மோதுகின்ற அலைகளின் மிகுதியோடுகூடிய திருப்பாற்கடல் உலகமெங்கும்பரவிப் பொங்கிக் கிளர்ந்து பிரமனது சத்தியலோகத்துக்கு மேலும் சென்றதைப் போன்றான்; அந்நரசிங்கமூர்த்தியின் கைகளினிடையே அகப்பட்டுக்கொண்ட இரணியனும், அக்கடலினிடையே அகப்பட்ட மேருமலையைப் போன்றான்.

இரணியனுடைய வாட்படையும், தோள்களும், கைகளும், கிரீடமும், உயர்ந்த பெரிய அண்டகோளத்தினது உயர்ந்த மேற்சுவரில் உராயும்படியும், சோதிச்சக்கரம் [சோதிமண்டலம்] கிரகங்களுடனே சுழல்வதுபோலச் சிறந்த சாதிரத்தினங்கள் பதித்துச்செய்யப்பட்ட கொ

*அம்மேருமலைக்குச் சுற்றிலுமுள்ள குலபருவதங்களும் சக்கரவாளகிரியுமாகிய எல்லாவற்றையும் போன்றான்.

டிய ஆபரணங்கள் சுற்றிலும் ஒளிவீசும்படியும், நரசிங்கப் பிரான், தனது பெரிய கைகளிலொன்றால், வேறு உவமை யில்லாமல் ஒன்றோடொன்று ஒத்த அவ்விரணியனது கால் களிரண்டையும்ஒருசேரப்பிடித்து, அவ்விரணியனைச்சுழற் றினான். சிங்கப்பிரான் இரணியனைப்பிடித்து விசையோடு சுழற்றியபொழுது, சிதறின அவன்காதுகளில் தொங்கிக் கொண்டிருந்த இரண்டு குண்டலங்களும், தனித்தனி பிரிந்து, கிழக்கிலும் மேற்கிலும் நெடுந்தூரத்துக்கு அப் பாற்சென்று விழுந்து கிடந்தன. அவை தாமே, இன்றைக் கும், வெப்பத்தைச்செய்யும் உஷ்ணகிரணங்களுடைய சூரி யன் விளங்குகிற உதயகிரியும் அஸ்தகிரியும் ஆகும். அக் குண்டலங்களிற் பதித்த பெரிய சிறந்த மாணிக்கங்களின் ஒளிவெள்ளமே, காலைப்பொழுதிலும் மாலைப்பொழுதி லும் முறையே அக்கிழக்கு மேற்குக்களில் செவ்வான மென்னும் ஒளியைச் செய்யும்.

இவைபோன்றவையான தன்மைகள் பொருந்தியத னால், தன்னைப்போன்றவர் ஒருவருமில்லாமையால் தான் தனிப்பட்ட ஏகமூர்த்தியான அந்நரசிங்கப்பிரானது நிலை மையைக்குறித்து இத்தன்மையுடையதென்று சொல்லும் வல்லமையுடையேன் யானோ? [யான் சொல்ல வல்லே னல்லேன்.]

தனது அடியார்களெல்லோர்க்கும் பரமபதவின்பத் தைக் கொடுத்தருள்கின்ற உதாரகுணமுடையவனான அச் சிங்கப்பிரான், வெண்ணிறமான கூரியதன்கைந்நகங்களை வைரரத்தினம்போல் வலிய அவ்விரணியனுடைய மார்பில் ஊன்றியவளவிலே, இரத்தவெள்ளம் எழுந்து உலகமுழு வதும் பரவிற்று.

"ஆயவன் றன்னை மாயன் அந்தியி னவன்பொற் கோயில்
வாயிலின் மணிக்க வான்மேல் வயிரவா ளுகிரின் வாயின்
மீயெழு குருதி பொங்க வெயில்விரி வயிரமார்பு
தீயெழப் பிளந்து நீக்கித் தேவர்க ளிடுக்கண் டீர்த்தான்."

ஆச்சரியகரமான குணஞ்செயல்களை யுடைமையால் மாயனெனப்படுகிற அத்திருமால், அவ்விரணியனை, அந்திவேளையிலே* அவனுடைய அழகிய அரண்மனையின்வெளி வாயிற்படியில்† அழகிய தனது தொடையின்மேல்‡ வைத்துக்கொண்டு, சூரியகாந்திபோன்ற காந்தியை வீசுகின்ற வச்சிரரத்தினம்போல் உறுதியான அவனது மார்பை, வச்சிராயுதம்போன்ற கூரிய தனது கைந்நகங்களின் நுனியால்§, மேற்கிளம்புகிற இரத்தவெள்ளம் பொங்கவும், தீப்பொறி பறக்கவும் பிளந்து அவ்வசுரனை ஒழித்து [அவனுடம்பினின்று உயிரைப்போக்கி], தேவர்களுக்குஅவனால் நேர்ந்திருந்த பெருந்துன்பத்தைத் தீர்த்தருளினான்.

---

* அவ்விரணியன் பகலிலும் இரவிலும் சாவாதபடி வரம் பெற்றிருந்ததனால் அவனை, எம்பெருமான், பகலுமாகாது இரவுமாகாது இவ்விரண்டிற்கும் இடைப்பொழுதான அந்திமாலை நேரத்திற் கொன்றிட்டான்.

† தனதுவீட்டின் உள்ளிலும் அதன் வெளியிலும் சாவாவரம் பெற்றமைபற்றி, வீட்டினது அகமும் புறமுமாகாத வாயிற்படியின்மேற் கொன்றிட்டான்.

‡ பூமியிலும் ஆகாயத்திலும் சாவாதவரம் பெற்றதனால், அவ்விரண்டுமல்லாத தன் மடியின்மேல் வைத்துக்கொண்டு கொன்றிட்டான்.

§ ஆயுதங்களினாற் சாவதில்லையென்று வரம்பெற்றதனால், நகங்களினாற் பிளந்து கொன்றிட்டான். அன்றியும், ஈரமுள்ள பொருள்களாலும் ஈரமில்லாத பொருள்களாலும் சாவாதவரம் பெற்றஅவனை, அவ்விரண்டிலுஞ்சேராதநகத்தினாற்கொன்றான்.

## ஒன்பதாம் அத்தியாயம்.

[பிரமன் நரசிங்கமூர்த்தியைத் துதித்தல். சிங்கப்பிரான் பிரகலாதனைக் கடாக்ஷித்து வரந்தந்து அவனுக்கு முடிசூட்டியமை.]

தாம்தாம் சென்ற இடத்தை எவரும் தேடியறிய வொண்ணாதபடி இரணியனுக்கு அஞ்சி ஓடித்திரிகின்றவர்களான மூன்றுகண்களையுடையசிவபிரானும், எட்டுக்கண்களையுடைய பிரமதேவனும், தாமரைமலர்போன்றஆயிரங் கண்களையுடைய இந்திரனும், எட்டுத்திக்குகளிற் பொருந்திய தேவர்களும், முனிவர்களும், மற்றையோரும், அவ்விரணியன் தொலைந்தவுடனே அங்கு வந்து மொய்த்தவர்களாய்,எம்பெருமானுடைய அந்நரசிங்கவடிவத்தைத் தங்கள் கண்களாற் காணக் கூசுதலால் எந்தக்கண்ணினாற் காண்போமென்று இரக்கமுற்று நின்றார்கள்.* அங்ஙனம் வந்து சூழ்ந்து நோக்கிய நோக்கிய அவர்களுடைய முன்னெல்லாம், காணப்படுகிற முகங்களுங் கைகளும் உடம்பும் கால்களும் பலவுடையவனாய், எல்லாவிடத்தும் தானே நிறைந்து,வாக்கினாலும் மனத்தினாலும் அறிவினாலும் வரையறுக்கமுடியாத மேலோங்கி வளர்ந்துள்ள அச்சிங்கத்தைக் கண்டு, அம்முக்கண்ணன் முதலியோர் அஞ்சுகின்றவர்களானார்கள். பல்லுக்குப்பல் இடைவெளி [ஒருபல்லோடு மற்றொருபல்லுக்கு நடுவிலுள்ள இடம்] ஆயிரங் காத தூரமாக, சொல்லப்பட்ட முகங்கள் கோடியென்னும் அளவினதான கோடி† யென்னுந் தொகையினும்

* என்றது - அந்நரசிங்கவடிவம் எவர்க்கும் இனிது காணவொண்ணாதபடி பயங்கரமா யிருந்ததென்பதாம்.

† கோடியினாற் பெருக்கிய கோடி : கோடி கோடி.

அதிகமாக விளங்கித்தோன்ற, எல்லையில்லாத பெருவடிவமுடையதாயிருந்த அந்நரசிங்கத்தை எதிரில் பிரதியக்ஷமாகத் தரிசித்து, பிரமதேவன் அப்பெருமானுடைய புசழை எடுத்துச்சொல்லத் தொடங்கினன்:—

"முதலில் உன்னைப் படைத்தவனும் நீயே யென்ற உண்மையை, பின்பு [இப்பொழுது] நீ உன்னை இந்தத் தூணினிடத்தில் அழகிய சிங்கனுகப் படைத்துக்கொண்டதே நன்ருக விளக்கும். இவ்வாறு மிக்க பெருமையை யுடைய உன்னை நீயே படைத்துக்கொண்டா யென்ருல், பிராணிவர்க்கத்தைப் படைப்பதற்காக என்னை நீ படைத்தாயென்கிற இதுவும் எப்படிப்பட்டதாமோ?* பல ஆயிரங்கோடி அண்டங்களும், கடலிலேகிலைத்திராமல்தோன்றி

*"இன்னபொருளுக்கு இன்னபொருள் காரணமென்று ஒன்றன்மேலொன்ருகக் காரியகாரண விசாரணைசெய்துகொண்டே செல்லுமிடத்து, எல்லாவற்றுக்கும் மூலகாரணமானவஸ்து ஸ்ரீமந் நாராயணனென்றும், அந்தப் பரப்ரஹ்மத்துக்குக் காரணமான பொருள் ஒன்றுமில்லையென்றும் தெரிதலால், அப்பரம்பொருள் ஆதியில் தன்னைத் தானே படைத்துக்கொண்டதென்று வேதம் முதலிய நூல்கள் கூறுகின்றன. (அதன் கருத்து - அப்பரம்பொருள்தான் ஒருபொருளினின்று உண்டானதன்று என்பது.) அங்ஙனம் அந்தப்பரப்ரஹ்மமாகிய நீயேஉன்னைப்படைத்துக்கொள்ளுதல் சாத்தியமோ என்று சங்கிக்குமிடத்து, இப்பொழுது பலருங்காண வேருரு காரணமுமின்றி நீயே உன்னை நரசிங்கமூர்த்தியாக இத்தூணினின்று தோன்றுவித்ததே அந்தச் சங்கையையொழித்தற்கு எற்ற ஸாக்ஷியாகின்றது: மஹாவிபவத்தையுடைய உன்னையே நீ படைக்கத்தக்க அற்புதமான திவ்விய சக்தியையுடையவனுயிருக்கிற உனக்கு, இந்தச்சராசரங்களாகிய உயிர்களைப் படைக்கிறசக்திதான் இல்லாமற்போயிற்ருே? இவைகளைப் படைத்தற்காக என்னைநீ படைத்தாயென்பதுயாதாகும்? உனது திருவிளையாடலேயாம் என்றவாறு."—கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலெஜ் தமிழ்ப்பண்டிதராயிருந்த ஸ்ரீ. உ. வே. வை. மு. சடகோபராமாநுஜாசாரியருடைய பி. எ. தமிழ்ப்பாடபுத்தகவுரை—1903.

யழியும் நீர்க்குமிழிகள்போல உன்னிடத்திலே தோன்றும். ஆதலால், எல்லாவுருவங்களும் நீயேயாயிருக்க, அவற்றை யெல்லாம் அழிக்கும்படியான பயங்கரமாகிய இந்த நரசிங்கரூபத்தை நீயே விரைவாக வகித்துக்கொண்டால் வரம்பின்மை யென்னுங் குற்றம்* உனக்கு வரமாட்டாதோ?† நீயாகிய ஒருபொருளுக்கே பலவகையால் வேறுபடுத்து வெவ்வேறு பெயர் குறிக்கப்படுகிற ஒழுங்கான நிலைமையையுடையாய்; தனிமுதற்பொருளாக வுள்ளாய் நீயே; இவ்வாறு நீயன்றிப் பிறர் இல்லை. பிரபஞ்சம்முழுதும் நீயேயாயிருக்க, ஐயா! நீ படைக்கின்றது யாரை? நீ அளிக்கின்றது யாரை? நீ அழிக்கின்றது யாரை?‡ அறிகின்றேமில்லை. நீ உன்னிடத்திலே உன்னை உண்டாக்கினாய்; உனது அருளினாலேயே, என்னிடத்திலே எல்லா அஃறிணைப்பொருள்களையும் எல்லாவுயர்திணைப்பொருள்களையும் நான் படைத்தேன். எனக்குத் தந்தையும் தலை

---

*வரம்பின்மையென்னுங் குற்றம் - அநவஸ்தா தோஷம்; அஃதாவது - இங்கு, உனது சொரூபமாக வுள்ளவற்றை உனது சொரூபமொன்றே [நரசிங்கரூபமே] அழித்தல்.

† 'உனது இச்சிங்கவடிவம் நினது சொரூபமேயான உலகங்களை வரம்புகடந்து அழித்திடாதபடி இதனை அடக்கிக்கொள்ள வேண்டும்; அல்லது, சீற்றந் தணிந்தருளவ்வேண்டும்' என்று வேண்டியபடி.

‡ பிரம விஷ்ணு ருத்திர ரென்னும் பேர்களை வகித்து நின்று படைத்தல் காத்தல் அழித்தல் செய்யப்படுகிற பிரபஞ்சமுழுவதும் நினது சொரூபமே; நின்னினும் வேறானபொருள் யாதுமில்லை யென்பதாம். உலகத்தில் வழங்குகின்ற பொருட்பெயர் யாவும் கடவுட்கே நிலைவேறுபாட்டில் உரியனவாகின்றன வென்க.

வனுமாகவுள்ள ஸ்வாமீ! என்னைப்படைத்தவன் நீயேயாத லால், உன்னையன்றி எனக்கு ஒரு காரணமுமில்லேன். என்றற் படைக்கப்பட்ட பொருள்களெல்லாம் உனது சொரூபமேயாதலால், உன்னையன்றி ஒருகாரியமுமில்லேன் யான். யானும் நினது சொரூபமேயாதலால், உன்னி னின்று உண்டான யான், பொன்னினின்று உண்டான தொரு பொன்னுபரணத்தையே ஒத்திருக்கிறேன்.''

என்றுசொல்லித் துதித்து, இமைத்தலில்லாதஎட்டுக் கண்களையுடையவனுன பிரமனும், வலியபோர்முயற்சியை யுடைய மழுவென்னும் ஆயுதத்தையுடையவனுனசிவனும், மற்றைத்தேவர்கள் முதலிய எல்லோரும் வணங்கினவர்க ளாய், அருகில் அணுகமாட்டாமல் இரண்டு பக்கங்களி லும் விலகி நின்றூர்கள்.

அப்பொழுது, சுதரிசனமென்னும் சக்ராயுதத்தை வலத்திருக்கையிலேந்திய தலைவனுன நரசிங்கப்பிரானும், அடங்குதற்கு அரியதும் தனது பேரருளுடைமைக்குப் பொருந்தாததுமானசீற்றத்தைஉள்ளே ஒடுக்கியருளினன். உலகங்களெல்லாம் இப்பொழுதே அழிந்துவிடும் என்று இடைவிடாது சிந்தித்து அச்சத்தால் நெஞ்சு நடுங்குகின்ற பெரிய தேவர்களை நோக்கிச் சிங்கப்பிரான், 'அஞ்சாதே யுங்கள்' என்று திருவாய்மலர்ந்து அருளிச்செய்து, திரு வருள் பொழிகின்ற இனிய பார்வையுடன், அழகில் தாம ரைமலரைப் பழிக்கும்படியான தனது திருக்கையில் அபயமுத்திரையையும் * காட்டியருளினன்.

* அபயமுத்திரையாவது-உள்ளங்கை வெளித்தோன்றுமாறு கையை மலர்த்தி விரல்கள் மேல்நோக்கும்படி வைக்கும் நிலை; இது, அஞ்சாதேயுங்களென அபயமளித்தற்குஅடையாளமாகும்.

அழகுக்கு ஓர் ஆபரணமாகவுள்ளவளும் [அழகுக்கு அழகானவளும்], எல்லோர்க்கும் அவரவர் விரும்பும் செல்வமாகவுள்ளவளும், பரமபதத்தில் அடையும் பேரின்பத்தின் மயமானவளும்,§ எல்லாவுயிர்க்கும் உற்றதுணையாகின்றவளும், அமுதத்துடனே திருப்பாற்கடலினின்று பிறந்தவளும், தேவர்களுக்கும் அவர்களைப் பெற்றுவளர்க்குந் தாய்போன்றவளும் ஆகிய செந்தாமரை மலரில்வாழ்கின்ற ஸ்ரீமஹாலக்ஷ்மியை, அந்தநரசிங்கப்பிரானருகில் எழுந்தருளும் வண்ணம் பிரமன் முதலிய தேவர்கள் பிரார்த்தித்து அனுப்பினார்கள்.

செந்தாமரை மலரின் இடையிலுள்ள கொட்டையின் மேல் மிக்க களிப்போடு வீற்றிருந்தருள்கின்றவளும், சுயம்பிரகாசமான சோதிச்சொரூப முடையாளாதலால் தூண்டாவிளக்குப்போன்றவளும், உத்தம ஸ்த்ரீலக்ஷணமான இயற்கைப்பரிமளமுடைமையோடு என்றும்மாறாத இளமையையும் உடைமையால் நல்ல மணம்பொருந்திய இளையகொழுந்துபோன்றவளும், உலகங்களையும் உயிர்களையும் முறையாக ஆதியிற் பெற்றருளியவளுமான திருமகளை, தனக்கு ஒப்பு ஒருபொருளு மில்லாதவனான அத்திருமால் குளிரக்கடாக்ஷித்தருளினான். தீமைகளில்லாதனவாகும்படி [இனியதாக] உலகங்களைப் படைத்தற்கு உதவிய தெய்வமான திருமகளை அன்போடு நோக்கியருளின அதனைக்கண்ட முனிகணங்கள், அப்பெருமானது பெரும் புகழை எடுத்துச் சொல்லித் துதித்தார்கள்.

---

§அடியார்கள் முத்தியுலகத்து நிரதிசயப்பேரின்பத்தையடைதற்குத் திருமகள் திருமாலினிடம் புருஷகாரமாக நிற்றல்பற்றி, இப்படி சொல்லப்பட்டது.

சூரிய சந்திராதிகளுடைய ஒளியெல்லாவற்றினும் மேம்பட்ட சுயம்பிரகாசமான சிறந்தபரஞ்சோதிச்சொரூபியான அப்பெருமானும், அப்பொழுது, தனது தந்தையிறந்ததற்காகச் சிறிதும் வருந்துதலில்லாத அன்பனாகிய பிரகலாதாழ்வாரையே கடாக்ஷித்தான்.

'உனது தந்தையை உனது முன்னிலையிலே யான் கைந்நகங்களால் உடலைப் பிளந்து அளைந்து கொல்லவும், மனந்தளராமல் அறநெறி தவறாத செயலை யுடையையாய் எல்லையில்லாத அன்பை என்னிடத்தில்வைத்தாய்நீ; அருள் செய்யத்தக்கவனே! என் அப்பா! இப்பொழுது நீ என்னிடம் வைத்த இந்தப் பேரன்பிற்கு ஈடாக நான் உனக்குச் செய்யும் எதிருதவி யாது?' என்று சிங்கப்பிரான் பிரகலாதாழ்வானை நோக்கிச் சொல்லியருளினான். மற்றும், 'ஒரு மாத்திரைப்பொழுதை நுண்மையாக ஆயிரங்கூறுப் பகிர்ந்த பகுப்புக்களில்ஒருபகுப்பானசிறிதுபொழுதிலே, உனது தந்தையை, அவன்புரிந்த குற்றங்காரணமாகயாம் சீறி அவனது உயிரைத் தேடுவோம்போல அவனுடம்பைக் கைந்நகங்களாற் பிளந்து அளைய, அதனைக் கண்ணெதிரேகண்டும் துன்பஞ்சேராதமனநிலையையுடைய உனக்கு யாம் இப்பொழுது என்ன கைம்மாறு செய்வோம்? இனி, எல்லையில்லாத குற்றங்களைச் செய்தனராயினும், உனது குலத்திற் பிறந்த அசுரர்களை யாம் கொல்லமாட்டோம்; உனக்கு எப்பிறப்பிலும் [எனது அவதாரங்களிலெல்லாம்] யாம் நல்லவராக இருப்போம். * நாம்

---

*இனி இந்தப்பிரகலாதனுடைய பௌத்திரனாகும் மஹாபலி சக்ரவர்த்தி ஸ்வர்க்கம் பூமி பாதாளமென்னும் மூவுலகத்தரசாட்சியைக் கைப்பற்றித் தேவர்கட்கெல்லாம் இடுக்கண் புரிந்தவிடத்

உனக்குச்செய்யவேண்டிய உதவி ஏதேனும் உள்ளதாயின் நாணமுறாமல் விரைவிற்சொல்வாய்' என்று சிங்கப்பிரான் பிரகலாதனை நோக்கி உரைத்தருளினான்.

"முன்பு பெறப்பெற்ற பேறே முடிவில்லை;
பின்பு பெறும்பேறு முண்டோ? பெறுகுவெனேல்,
என்பு பெறாத விழிபிறவி யெய்தினும், நின்
அன்பு பெறுகை யரும்பே றெனக்கென்றான்."‡

தும் அவனைத்திருமால் கொல்லாமல் அடக்கியருளுதலும், அவன் புதல்வனான நமுசியென்பான் அந்தத்திரிவிக்கிரமாவதாரகாலத்தில் "என் இது மாயம்! என் அப்பன் அறிந்திலன்; முன்னைய வண்ணமே கொண்டு அளவாய்" என்றபோதும் அவனைக்கொல்லாமல் வானிற் சுழற்றியமாத்திரத்தோடு விடுதலும், அவனது பௌத்திரனான பாணாசுரன் கண்ணபிரானை எதிர்த்துப் பெரும்போர் செய்தவிடத்தும் அவனைக் கொல்லாமற் கைகளைப்பெரும்பாலுந் துணித்தமாத்திரத்தோடு விட்டருளுதலும் முதலியன, இச்சமயத்தில் திருமால் பிரகலாதாழ்வானுக்கு வரங்கொடுத்த உறுதிமொழி பிறழாது நிகழ்ந்த நிகழ்ச்சிகளென அறிக.

‡ "என்ற பாடலைக்குறித்து, கம்பரானவர், பிரகலாதன் ஸ்வாமிக்குமுன்பு அஞ்சலியஸ்தனாய் நின்று, 'ஓபக்தரக்ஷகா! பரமதயாளா! அடியேனுக்கு வேண்டிய பேறெல்லாம் இப்பொழுது நீ அருள்செய்வதாகக் கேட்கச் சொன்னமையால், என்னபேறு பெறவேண்டுமென்றுகேட்பேன்! அநாதியில் நான்மூலப்பிரகிருதியில் அழுந்தி ஜீவாத்ம பரமாத்மஸ்வரூபமும், அவ்விரண்டுக்குமுள்ள சம்பந்தமும், அச்சம்பந்தத்தைத் தடுக்கும் விரோதமும், அவ்விரோதத்தை நிவர்த்திக்கும் உபாயமும், அவ்வுபாயத்தைச் செய்தவிடத்து அடையும் பரமார்த்தமும் இன்னவென்று விளங்காமல் நாசத்தை யடைந்திருக்கையில், நிர்ஹேதுக கிருபையினாலே கரசரணாதிஅவயவங்களைத்தந்து வேதாகமங்களைக்கொண்டுமேற்சொல்லிய ஸ்வரூபம் முதலானவைகளையும் தெளியவிளக்கி உன்

'உனது திருவருளால் இதுவரையில் நான் அடையப் பெற்ற நன்மைகளோஎல்லையில்லாதவை.* இன்னும்யான் பெறவேண்டிய நன்மையும் உள்ளதோ? இன்னும் ஏதாவது பெறவேண்டுவேனுனல்,--எலும்பில்லாதஇழிந்தபிறப்பாகிய புழுவின் ஜன்மத்தை யான் பெற்றாலும் நின்பக்கல் பக்தியைப்பெறுவதே எனக்கு அருமையான வரமாம்' என்று பிரகலாதாழ்வான் நரசிங்கப்பிரானை நோக்கி விண்ணப்பஞ் செய்தான்.

---

திருவடியில்சரணுகதிபண்ணுவதற்கேற்ற சேஷத்வம் தலையெடுத்துப்பாரதந்திரனுகி உன்கைங்கரியத்தை இப்பிறப்பில் இடைவிடாதுசெய்து உஜ்ஜீவிக்கும்படி நீ அநுக்கிரகிக்க, அவ்வாறு அடியேன் முன்னமேபெற்ற பேறுகளுக்கோ முடிவு ஒன்றுமில்லை; அவையன்றி, இனிப்பெறும் பேறுகளும் வேறே உண்டோ? அப்படியே பெறவிரும்புவேனுகில், விசித்திரமாகிய பூர்வகர்மசேஷத்தால் இன்னும் காலசக்கரத்தில் அகப்பட்டு இவ்விருள்தருமாஞாலத்தில் எண்ணிறந்தஜன்மமெடுத்த உழலவரினும் அஞ்சுவேனல்லேன்; எல்லாப்பிறப்பினும் மிகவுந்தாழ்வாகிய சாக்கடைச் சேற்றிற் கிடந்துநெளியும் புழுவாம் பிறப்பைப் பெற்றாலும் உன் திருவடிக்கண் மாறாத அன்பு செலுத்தப்பெற்றால் அப்பேறு சற்பக்தியை உண்டாக்கும்; சற்பக்தி சற்கருமத்தை உண்டாக்கும்; சற்கருமம் சற்போதத்தைஉண்டாக்கும்; சற்போதம்வீட்டைவிக்கும்; அதுபற்றி, இயமநியமாதிகளாகிய அஷ்டாங்கயோகமும், அணிமா மகிமா முதலாகிய அஷ்டமகாசித்தியும், மற்றுமுள்ள பலவகைப்பேறுகளும் வேண்டுவனவல்ல; அவ்வன்பொன்றும் பெறுவதே நாயேனுக்கு அரியபெரிய பேறும். அதையே அருள் செய்யவேண்டும்' எனப் பிரார்த்தித்தார்' எனப்பிரசங்கித்தா''- என்பது, விநோதரசமஞ்சரி.

*அடையப்பெற்ற நன்மைகள் - இரணியனுலும் அவன்பரிவாரங்களாலும் எவ்வகையாலும்கொல்லமுடியாதிருந்தமை முதலியவை. அதனை, "நம்பெருமா ளெட்டெழுத்தின்பெருமை நவிலுமதோ?, சம்பரன்மாயம், புரோகிதர்சூழ்வினை, தாரணி வாள், வெம்படை, மாசுணம், மாமதவேழம், விடந், தழல், கால், அம்பரமே முதலானவை பாலனுக்கு அஞ்சினவே!" என்ற திருவரங்கத்துமாலைச் செய்யுளிலுங் காண்க.

"அன்னுனை நோக்கி யருள்சுரந்த நெஞ்சினனாய்,
'என்னானை வல்லன்!' எனமகிழ்ந்த பேரீசன்,
'முன்னான பூதங்கள் யாவையு முற்றிடினும்,
எந்நாளு முலவாய்நீ யென்போ லுளை' யென்றான் "

அப்படிசொல்லி வரம்வேண்டின பிரகலாதாழ்வானை நோக்கிஅருள்சுரந்ததிருவுள்ளத்தையுடையவனாய்,'எனது ஆனை * மெய்யுணர்வு வல்லவன்' என்று உகந்தருளின பெருமையையுடைய எம்பெருமான், 'பழமையான தலைமைபெற்ற ஐந்தாகியஎல்லாப்பூதங்களும் எல்லாப்பிராணிவர்க்கங்களும்அழிந்தாலும் அழியாமல்நீ என்னைப்போல எந்நாளும் உள்ளவனாவாய்: [நெடுங்காலம் வாழ்வை]' என்று சொல்லியருளினான்.

"மின்னைத் தொழுவளைத்த தென்ன மிளிரொளியாய்!
முன்னைத் தொழும்புனக்கே யாமன்றோ மூவுலகும்?
என்னைத் தொழுதேத்தி யெய்தும் பயனெய்தி
உன்னைத் தொழுதேத்தி யுய்க வுலகெல்லாம்."

'நிலைநில்லாதுதோன்றி மறையுந்தன்மையுடையதான மின்னலை அப்படி மறைந்து போகவொட்டாமல் தொழுமரத்திலே அகப்படுத்திவைத்தாற்போல [மின்னலை நிலைநிறுத்தினாற்போல] விளங்குகின்ற தேககாந்தியை யுடையவனே! மூன்று உலகங்களும், அவற்றையெல்லாம் வென்று கைவசப்படுத்திய இரணியனுடைய புத்திரனான

---

*ஆனை - யானைபோன்றவன்; அன்பன்; 'எனது ஆனை' என்றது - அருமைபாராட்டிக் கூறுவதோர் சொல்விழுக்காடாம்; "தென்னா தெனாவென்று வண்டுமுரல் திருவேங்கடத்து, என்னானை யென்னப்ப னெம்பெருமான்" எனத் திருவாய்மொழியிலுங் காண்க.

உனக்கே பழமையான அடிமையாகுமன்ருே? அவ்வுலகங்களிலுள்ள உயிர்களனைத்தும், என்னைத்தொழுது துதித்தலால் அடையும் பயனை உன்னைத்தொழுது துதித்தலால் பெற்றுவாழ்க.

"ஏனவர்க்கு வேண்டி னெளிதொன்ருே? எற்கன்ப
ரானவர்க்க மெல்லா நினக்கன்ப ராயினர்;
தானவர்க்கு வேந்தனீ யென்னுந் தரத்தாயோ?
வானவர்க்கு நீயே யிறை, தொன் மறைவல்லோய்!"

பழமையான வேதங்களில் வல்லவனே! எனக்கு அன்பரான எல்லாவகை அடியவரும் உனக்குஅன்புள்ள அடியவர்களாஞர்கள்; ஆகவே, நீ தானவர்கட்குமாத்திரம் அரசனென்று சொல்லப்படும் மேன்மையானநிலைமையை யுடையாயோ? வானவர்கட்கும் நீயே அரசனுகின்ருய். இப்பெருமை உன்னையல்லாமல் மற்றையோர்க்குப் பெற விரும்பினுற் பெறுதற்கு எளியதொரு பொருளாகுமோ? [ஆகாது.]

"நல்லறமும், மெய்ம்மையும், நான்மறையும் நல்லருளும்,
எல்லையின் ஞானமும், ஈறிலா வெப்பொருளும்,
தொல்லைசா லெண்குணனும் நின்சொற் ருெழில்செய்க;
வல்ல வுருவொளியாய்! நாளு வளர்கநீ."

சிறந்த தேககாந்தியை யுடையவனே! சிறந்ததான தருமமும், சத்தியமும், நான்குவேதங்களும், சிறந்த அருளும், எல்லையில்லாதமிகப்பரந்த தத்துவஞானமும், ஈறில்

லாக எல்லாப்பொருள்களும், மிகப்பழைய எட்டுக்குணங்களும்* உனதுசொற்படி தொழில்செய்யக்கடவன. நீ என்னைப்போலவே சிறப்புற்று எந்நாளும் வாழ்வாயாக; இனி, எனக்கும் உனக்கும் ஒருபேதமுமில்லை.'

சிங்கப்பிரான் இவ்வாறு சொல்லி வரங்கொடுத்தருளி, எல்லாவுலகத்தவர்களும் கைகூப்பி வணங்கவும், வாயிலிலே முரசவாத்தியங்கள் ஆரவாரிக்கவும், முடிசூட்டுதலாகிய இராச்சியபட்டாபிஷேகஞ் செய்பவனாகி, அருகில் நின்ற அமரர்களை நோக்கி, 'நீங்களெல்லோரும் மனமொத்து இணங்கி இவனுக்குப் பெருமைபொருந்திய அடிமைத்தொழில்களைச் செய்வீர்களாக' என்று கட்டளையிட்டான்.

அப்பெருமானுடைய நியமனப்படியே தேவர்களும், அத்தேவர்கட்கு அரசனான இந்திரனும், பட்டாபிஷேகத்

---

*எட்டுக்குணங்களாவன - அபஹத பாப்மத்வம், விஜரத்வம், விம்ருத்யுத்வம், விசோகத்வம், விஜிகத்ஸத்வம், அபிபாஸத்வம், ஸத்யகாமத்வம், ஸத்ய ஸங்கல்பத்வம் என்பன; இவை - முறையே தீவினையின்மையும், மூப்பின்மையும், மரணமின்மையும், சோகமின்மையும், பசியின்மையும், தாகமின்மையும், மெய்ம்மை விருப்புடைமையும், எண்ணம் தவறாது பலிக்குந் தன்மையுடைமையுமாம்: இனி, வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌசீல்யம், ஸௌலப்யம், ஞானம், சக்தி, பிராப்தி, பூர்த்தி என்றும்; தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமைஎன்றும்; அணிமா, மஹிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாம்யம், ஈசத்வம், வசித்வம் அன்னும் அஷ்ட ஐச்வரியங்களென்றுங் கொள்ளுதலும் ஒன்று.

துக்கு வேண்டிய உரிய குற்றேவற்றொழில்களைச் செய்யவும், பிரமன் ஓமம்வளர்த்தி வைதிகச்சடங்கு செய்யவும், எல்லாப்பொருள்களையும் அடிமையாக உடையவனை சிங்கப்பிரான் பட்டாபிஷேகஞ்செய்ய, பிரசித்திபொருந்திய வேதங்களை எந்த ஆசிரியரிடத்தும் பயிலாமலே உணர்ந்து மிகச்சிறப்புற்றவனை பிரகலாதாழ்வான் அரசர்கட்கு அரசனாய் மூன்று உலகங்களையும் தன் வசத்திற் கொண்டான்.

பிரகலாதாழ்வான் சரிதை முற்றிற்று.

"முன்பு பேசு கதைமொழி நாவினோர்,
அன்பினோடுடன் கேட்கு மறிவினோர்,
துன்ப வாரி கடந்து, துகளிலா
இன்ப வாரியி னெய்துவ ரென்பவே."

Printed at the S. V. Press, Vellore.

சமீபத்தில் வெளிவந்த சிறந்த வசனநூல்கள்.

## ஆத்திசூடி நீதிகதைகள்.

விலை அணா எட்டு.

## அடைக்கலங்காத்தல்.

விலை அணா இரண்டு.

## தெய்வமிகமேல்.

விலை அணா இரண்டு.

இந்நூல்கள், அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும், அம்பைத்தலபுராணம் முதலிய அரிய பெரிய நூல்கள் பலவற்றின் ஆசிரியருமாகிய ஸ்ரீமத். ஆர். ஹரிஹர பாரதியார் இயற்றியவை. இந்நூல்களை ஒவ்வொரு மாணாக்கரும் படிக்கவேண்டுமென்று கற்றறிந்தோர் அபிப்பிராயப்படுகின்றனர். இந்நூல்கள் என்னிடம் கிடைக்கும்.

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்,
காலெஜ் தமிழ்ப் பிரதம பண்டிதர்,
வேலூர்.

(ஆத்திசூடி நீதிகதைகளைப்பற்றிய அபிப்பிராயங்களின் தொடர்ச்சி.)

"தாங்கள் தமிழகம் தளர்ச்சியுற்ற காலத்து அதுவளர்ச்சியுற, அமிழ்தினுமினிய தமிழ்ப்பாஷையில் சிறந்தவசனநடையில் பரந்த விஷயங்களைச்சுருக்கித் தெளிவாக வாலிபர்கள் அறியவும் பலரும் நன்குமதிக்கவும், பல வசனநூல்களைப் பன்னுளாகப் பதிப்பித்து வருவது தமிழ்நாடு அறிந்ததே. இப்பொழுது வெளியிட்டுள்ள "ஆத்திசூடி நீதிகதைகள்" என்னும் பொன்னிற் பதித்த மாணிக்கம் போன்ற நீதிபோதிக்கும் கதைகளைக் கொண்ட புத்தகம்போன்ற வித்தாரமான நூல்கள், மாணவர் கூட்டத்துக்குத் தற்காலம் இன்றியமையாதன. பாஷாபிமானமும் மதாபிமானமும் குன்றிவரும் இந்நாளில், மேற்கூறிய அபிமானமிரண்டையும் அபிவிருத்தி செய்யும் எத்துணை நூல்கள் தங்களாலும் தங்கள் நண்பர்களாலும் வெளிவரினும், அவைகளும் போதாஎன்றே உலகம் உணரும்."—ஸ்ரீமான் V. T. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், தமிழ்ப் பண்டிதர், மஹாராஜா காலெஜ், புதுக்கோட்டை.

## Athichoodi neethi kathaikal.

"This work was put into my hand for perusal and opinion. I carefully and closely studied it. The work of this kind was a sad want among the Tamil students but it is now opportunely supplied with. The style and diction of this work are thoroughly educative and tend to the good knowledge of the students in writing composition both in the school Final and Intermediate classes."—SREEMAN N. SREENIVASAVARADACHARIAR, Tamil Pandit, Sri Mahant's High School, Vellore.

"The book Athichoodi Moral Stories is written in a graceful style. The stories that illustrate the maxims are apt and elegant. This book will be of immense use to students in their composition writing. It provides a fund of information which will be scarcely found in other books. I hope the students will take advantage of it."—M. R. Ry. B. S. RATHNAVELU MUDALIAR AVERGAL., B. A., Pachaiappa's High School, Chidambaram.

"தாங்கள் அனுப்பிய 'ஆத்திசூடி நீதிகதைகள்' என்னும புத்தகத்தைப் பார்த்தேன். அது மிக உபயோககரமான புத்தகங்களிலொன்றே; பாடசாலையில் வியாசம் எழுதும் மாணுக்கர்களுக்குப் பெரிதும் உபகாரமுடையது. நல்லொழுக்கங்களையும் நீதிகளையும் கற்பிப்பதனுல், மற்றும், எல்லாஜனங்களுக்குமே நலம்தரத்தக்கதெனச் சொல்வேன் இன்னும் இதுபோன்ற பல வசனநூல்களை நவீனநடையில் எழுதியுபகரிக்கும்படி தங்களுக்குப் பலவித நன்மைகளையும் தந்தருள இறைவன்றிருவருளைச்சிந்திக்கின்றேன்."—ம-ா-ா-ஸ்ரீ. அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர், ஜமீந்தாரர் ஹை ஸ்கூல், காட்டுப்புத்தூர்.

"ஆத்திசூடிநீதிகதை முதற்பாகப்புத்தகம்பெற்று ஆனந்தமுற்றேன். புத்தகம் என் கைக்கு வந்தவுடனே, அதனை முற்றிலும் படிக்கும்படி அது என்னைத் தூண்டிற்று. அதனுல், அவ்வாறே படித்துப்பார்த்தேன். பாஷைநடை, மிகவும் நன்ருக அமைந்திருக்கின்றது. இத்தகைய புத்தகங்களே நம் தமிழபிவிருத்திக்கேற்றவையாகும். கேவலம் ஆங்கிலம் ஒன்றையே கற்றவர்சிலர், இந்நடையைக்கடினமானதென்று சொல்லவுங்கூடும். அவர்கட்குத் தமிழிலக்கணமே சத்துருவென்பதும், அவர்கள் கூற்றுமுற்றிலும் அனுஷ்டானத்திற்கு வரின், அதுவே நந்தமிழ்மொழிக்குக் கூற்றுமென்பதும் நாம் அறிந்தவையே. ஆகையால், இம்முதற்பாகத்தைப்போலவே மற்றைப் பாகங்களும் விரைவில் வெளிவரும்வண்ணம் இறைவன்றிருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்."—ஸ்ரீமத். பண்டிதர் A. கோபால ஐயரவர்கள், K. V. கலாசாலை, கோனுபட்டு.

"அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹை ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் பிரஹ்மஸ்ரீ ஹரிஹர ஐயரவர்களால் இயற்றப்பட்டு வேலூர் வூர்ஹீஸ் காலெஜ் தமிழ்ப்பண்டிதர் பிரஹ்மஸ்ரீ பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் அவர்களால் வெளியிடப்பட்ட 'ஆத்திசூடி நீதிகதைகள்' என்னும் அரியபுத்தகத்தை முழுதும்படித்துப்பார்த்தேன். தெய்வப்புலமை ஒளவை மூதாட்டியார்தம் அமுதநீதிகளைத் தலைப்பில் அமைத்து அவற்றை விளக்கத் தக்க கதைகளை இராமாயணம்,

பாரதம், திருவிளையாடல், பைபில் முதலிய புத்தகங்களினின்று தேர்ந்தெடுத்து விழுமியநடையில் எழுதியிருப்பது மிகக்கொண்டாடற்பாலது. வசனநூல்களையே பெரிதும் கற்றுப் பயனடைய வேண்டுமென்கிற கருத்துள்ள கலாசாலைமாணவர்கள் இதனை வாங்கிப் படிப்பார்களாயின், வசனமெழுதுமாற்றலில் சாலவுஞ் சிறப்புறுவர். ஆற்றொழுக்குப்போன்ற இனியகம்பீரமானநடையும், கற்கண்டுபோல் இடையிடையே செறிந்துள்ள செந்தமிழ் மொழிகளும், மோனை பிராசம் ஆகிய அணி அமைதிகளும், ஆன்றோரால் புகழத்தக்கனவாகும். தான்றோன்றித் தம்பிரான்களாய் வெளிப்பட்டு, நாவல் நாடகமாதியவற்றை எழுதுமுறையறியாது முன்னோர் கருத்தை ஒருசிறிதும் நோக்காது, வரையுமாவலொன்றனையே பெரிதாகக்கொண்டு இடர்ப்பட்டியற்றிய இலக்கணப் பிழைகள் மலிந்துள்ள பலரது கதைப்புத்தகங்களை வாசிக்காமல், நம்தமிழபிமானிகள் இத்போன்றபுஸ்தகங்களைப் படித்துப் பின்னும் இதனை நிகர்த்த புஸ்தகங்களை வெளியிடுமாறு இதனை ஆக்கியோற்கு ஊக்கமளிப்பார்களென நம்புகிறேன்''—ஸ்ரீமத். சே. ரா. திம்மப்பையர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.

"யாவரும் மனமொப்பிக் களிக்குமாறு, "ஆத்திசூடி நீதி கதை" புஸ்தகம் தொகுத்தியற்றப்பட்டிருக்கிறது. இந்நூலில் பல மஹான்களுடைய திவ்விய சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இம்மை மறுமைக்குரிய பல அரிய விஷயங்களும் இதில் மலிந்து கிடக்கின்றன. ஆங்கிலங் கற்கும் மாணுக்கர்கட்கு வியாசங்களெழுதிப் பழக இதோர் சிறந்த நூலென்பதற்கையமில்லை. நல்ல கடிதத்தில் வெகு சுத்தமாக அச்சடிக்கப்பட்டிருக்கிறது. இவ்வருமையான நூலைத் தமிழ் மக்கட்கு உபயோகமாயிருக்கும் பொருட்டு வெளிப்படுத்தியிருப்பது லோகோபகாரமாகும்.''— திராவிடாபிமானி, சேலம்.

## Some select opinions about "Murahari.

"I have perused it with *unabated interest* and that in one sitting. It is *very interesting* and is written in a style that is at once simple and *chaste*. The introduction of the aeroplane makes the novel *a startingly modern one* and illustrates clearly the possibility of incorporating *the modern scientific ideas* in plain Tamil Prose."—**V. Muttuswami Iyer Esqr.**, M. A., L. T., Member of the Madura Tamil Sangam and Tamilian Archæological Society and the Author of "Padmini", A Historical Tamil Romance.

"The story is both *interesting* and *instructive*, and the style simple.........Wishing you and your Novel every success."—**K. S. Gopalachariar Esqr.**, Senior Tamil Pandit, Christian College, Madras.

"ஸ்வதேச நண்பன்" என்னும் புனைபெயர் கொண்டவர் இயற்றிய "முரஹரி" என்னும் ஒரு புஸ்தகம் வரப்பெற்றோம். இது, செவ்விய வசனநடையில் இனிமையாக எழுதப்பட்டிருக்கின்றது. 'தீமைசெய்பவர் தவறாது தீமையை அடைவர்', 'பரோபகாரம் செய்பவர்க்கு எத்தன்மைய துன்பங்கள் உண்டாயினும், அவை விரைந்தொழிந்துபோம்', 'பெண்களின் புருஷபக்தி' என்றற்றொடக்கத்து விஷயங்கள் இதன்கண் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகம், வியாசம் எழுத அப்பியாசம் செய்யும் மாணவரிடத்தேயன்றி, மற்றவரிடத்தும் இன்றியமையாதிருத்தற்கு உரியதாம்."—லோகோபகாரி, சென்னை.

இதன் விலை அணா—5. தபால் செலவு பிரத்தியேகம்.

21B
14-85